# தாய்லாந்தில் தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகள்

முனைவர் எஸ். நாகராஜன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# தாய்லாந்தில்
# தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகள்

முனைவர் **எஸ். நாகராஜன்**
தலைவர், அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113.

பெருந்தலைவர் காமராசர்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-3
(22, 23-2-93)

Peruntalaivar Kamarajar Endowment Lecture No. 3
Endowment Lecture—Publication No. 40

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Tāylāntil Tamiḻp Paṇpāṭṭukkūṟukaḷ |
| Author | : | *Dr. S. Nagarajan*, Prof. & Head, Dept. of Tamil Studies in Foreign Countries, Tamil University, Thanjavur. |
| Publisher & copy right | : | International Institute of Tamil Studies, T.T.T.I. (Post), Taramani, Madras-600 113 |
| Publication No. | : | 174 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | July, 1993 |
| Edition | ; | First |
| Paper used | : | 60 GSM White Creamove TNPL Paper |
| Size | : | 21 × 14 |
| Printing types | : | 10 Point |
| No. of copies | : | 1200 |
| No. of Pages | : | VI + 104 |
| Price | : | Rs. **18**/- |
| Printers | : | Pavai Printers Pvt. Ltd, Madras-14, Phone: 832441. |
| Artist | : | Sathya |
| Subject | : | Aspects of Tamil Culture in Thailand |


* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

நிறுவனத்தின் பதினாறு அறக்கட்டளைகளுள் ஒன்றான 'பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளை'யின் மூன்றாம் பொழிவாக இந்நூல் வெளிவருகிறது.

கடல் கடந்து சென்ற தமிழரால் தமிழ்ப் பண்பாடும் சில விடங்களில் வேரூன்றியுள்ளது என்பதைத் 'தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்' எனும் இந்நூல் வெளிப்படுத்துகின்றது. தாய்லாந்திற்குத் தமிழரோடு தொடர்பு தோன்றிய வரலாறு வழிபாட்டு நிலையில் தமிழ்ப்பண்பாடு ஆட்கொண்டுள்ள விதம் தமிழ்—தாய் இராமாயணங்களுக்கிடையேயான ஒற்றுமைக் கூறுகள் முதலானவற்றில் நூலாசிரியர் முனைவர் எஸ். நாக ராஜன் ஆழ்ந்த கவனம் செலுத்தியுள்ளார். பிற நூற் சான்றுகள் வழியும் தாமே நேரில் கண்டறிந்தன கொண்டும் சிறந்ததொரு நூலை அளித்துள்ள நூலாசிரியருக்கு நிறுவனம் நன்றி தெரிவிக் கின்றது.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளை நிறுவிய மதுரை நாடார் மகாஜன சங்கத்தார், சொற்பொழிவிற்கும் நூலாக்கத்திற்கும் வழிவகுத்த நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னி தாமசு அவர்கள், சொல்லகராதி தயாரித்தளித்த ஆய்வு மாணாக்கர் ச. ஜெயசீலன், நன்முறையில் அச்சிட்டளித்துள்ள பாவை அச்சகத்தார் இவர்கள் அனைவருக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை—113
23-7-93

**ச. சிவகாமி**
அறக்கட்டளைப் பொறுப்பாளர்
உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்



## ஆசிரியர் அறிமுகம்

### முனைவர் எஸ். நாகராஜன்

கிழக்கு ஆப்பிரிக்காவில் 1-7-1939 இல் பிறந்து சென்னை மாநில கல்லூரியில் முதுகலைப் பட்டம் பெற்றவர். புதுதில்லி பன்னாட்டு உறவுகள் பள்ளி, ஜவஹர்லால்நேரு பல்கலைக்கழகத்தில் தென்கிழக்காசியா தொடர்பாக ஆய்வு செய்து இருபது ஆண்டுகளுக்கு முன் முனைவர் பட்டம் பெற்றார். ஆலந்து நாட்டிலும், அமெரிக்க குடியரசிலுள்ள ஐக்கிய நாட்டு சபை துணை நிறுவனம் நடத்திய வகுப்புகளிலும் பங்குபெற்று பன்னாட்டு உறவுகள் பட்டம் பெற்றார். ஜவஹர்லால்நேரு பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகங்களில் பணியாற்றியிருக்கின்றார். 1975-76ஆம் ஆண்டில் சக்கார்த்தாவிலுள்ள இந்தோனேசியப் பல்கலைக் கழகத்தில் ''வருகை தரும் பேராசிரியர்'' (Visiting Professor) ஆகப் பணியாற்றினார். 1986 முதல் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். 1991 ஆம் ஆண்டிலிருந்து இப்பல்கலைக் கழகத்தில் வளர்தமிழ்ப் புலத்தின் புலத் தலைவராகவும்பொறுப் பேற்றிருக்கிறார். ஆங்கிலத்திலும், தமிழிலும் பத்து நூல்கள் வெளியிட்டிருக்கின்றார். கடைசியாக வெளிவந்த நூல் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளிட்ட 'அயல்நாடுகளில் தமிழர்' என்ற நூலாகும். அயல்நாட்டுத் தமிழர்கள் தொடர்பாகப் பல கட்டுரைகளும் வெளியிட்டுள்ளார்.

# நன்றி

தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் எனும் நூல் தமிழில் உருவாகுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு ஆவார். பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றுவதற்கு எனக்கு அழைப்பிதழ் அளித்தபோது இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்கள்தான் இத்தலைப்பைத் தேர்ந்தெடுத்தார். மேலும் அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களும் இந்நூல் எழுதி முடிப்பதற்கு உறுதுணையாக இருந்தார். இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னிதாமசு அவர்களுக்கும் அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிப்ரவரி 22, 23, 1993 நாட்களில் இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றுவதற்கு உதவிய அனைத்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவன பேராசிரியர்கள், அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் எழுதுவதற்கும் அறக்கட்டளைச் சொற்பொழிவாற்றுவதற்கும் ஊக்கமளித்த தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் அவ்வை நடராசன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்நூல் தொடர்பான செய்திகளைத் தாய்லாந்துக்குச் சென்று திரட்டிவர உதவிய தாய்லாந்து பாங்காக் பாங்கில் பணிபுரியும் பேராசிரியர் மைக்கேல் ரைட் அவர்களுக்கும், பாங்காக் தம்மாசாட் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் புலத்தலைவர் முனைவர்சார்னிவிட் அவர்களுக்கும், தாய் பிராமணர்களுக்கும், இந்தியத் தூதரகத்தில் பணிபுரியும் திரு. அருண் செட்டி அவர்களுக்கும், மாரியம்மன் கோவிலுடன் நெருங்கிய தொடர்புள்ள திரு இராசேந்திரன் அவர்களுக்கும், மாரியம்மன் கோவிலில் சனிக்கிழமைதோறும் பஜனை செய்யும் திருமதி கமலாஐயர் அவர்களுக்கும் அமெரிக்க தூதரகத்தில் பணிபுரியும் திரு. ஜமாலுதின் அவர்களுக்கும் வைத்திபடையாட்சி குடும்பத்தினரான திரு. தனபால் சுந்தரராஜ் அவர்களுக்கும், மேலும் இந்நூலை எழுத உதவிய பிற இந்தியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்நூலைத் தட்டச்சு செய்து தந்து உதவிய அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை உதவியாளருக்கும், அச்சகத்தாருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எஸ். நாகராஜன்**

# உள்ளே

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| அறிமுகம் | ... | 1 |
| தாய்லாந்து வரலாறும் இந்தியத் தொடர்பும் | ... | 4 |
| பல்லவ மயமாக்கம் | ... | 7 |
| சோழ மயமாக்கம் | ... | 14 |
| தமிழ் இராமாயணங்களின் தாக்கம் | ... | 24 |
| திருவெம்பாவை, திருப்பாவை பரவின | ... | 32 |
| தமிழ்ப்பாடல்களும் முடிசூட்டு விழாவும் | ... | 37 |
| சிவவழிபாடு தமிழ்நாட்டின் தாக்கம் | ... | 39 |
| தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகளும் விஷ்ணுவழிபாடும் | ... | 47 |
| பாஞ்சராத்திர ஆகமவழிபாடும் விஷ்ணுகோயில்களும் | ... | 52 |
| தாய்லாந்தில் தமிழர்கள் | ... | 70 |
| மாரியம்மன் கோயில் | ... | 89 |
| உதவிய நூல்கள் | ... | 102 |
| சிறப்புச் சொல்லகராதி | ... | 105 |

# தாய்லாந்தில் தமிழ்ப்பண்பாட்டுக் கூறுகள்

## அறிமுகம்

5,14,000 சதுர கிலோமீட்டர் அளவு உள்ள தாய்லாந்து தென்கிழக்காசியாவில் இருக்கின்றது. 1932 ஆம் ஆண்டு வரை தாய்லாந்து நாடு சியாம் (Siam) என அழைக்கப்பட்டது. தாய் லாந்தின் மேற்கே பர்மாவும் இந்துமாப் பெருங்கடலும், கிழக்கே தாய்லாந்து வளைகுடாவும், கம்போடியாவும், தெற்கிலும், வடக்கிலும் லாவோசும் இருக்கின்றன. மேலும் கிராபூசந்தி வழியாக மலேசியா தீபகற்பத்தின் எல்லைவரையிலும் தெற்கு நோக்கிச் செல்லும் தாய்லாந்து மலேசியாவின் எல்லை அருகே இருக்கின்றது. பர்மாவுடன் சேர்ந்து பங்கிடப் பெற்றிருக்கும் பூசந்தி தாய்லாந்திற்குச் சிறியதான இந்துமாப் பெருங்கடல் எல்லையை அளித்திருக்கின்றது; மேலும் நீளமான பசிப்பிக் பெருங்கடல் கரையோர எல்லை தாய்லாந்து வளைகுடாவில் இருக்கின்றது. சிறந்த உலக வாணிபத் துறைமுகங்கள் தாய் லாந்தில் இல்லை. ஆனால் உலக விமானப் போக்குவரத்து வளர்ந்தவுடன் தாய்லாந்தின் தலைநகரம் பாங்காக் (Bangkok) சிறப்படைந்தது. பாங்காக்கின் மற்றொரு பெயர் குறுங்தெப் (Krung Thep).

இன்று நிலையாகத் தாய்லாந்திலே குடியேறிவாழும் தமிழர் களின் எண்ணிக்கை குறைவு. ஆகையால் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் ஓரளவு சமீபகாலம் வரையில் தாய்லாந்தில் இருந்தது. இன்று ஓரளவு தொடர்ந்து இருக்கிறது என்பதைக் கேட்கப் பல தமிழர்களுக்கு ஓரளவு வியப்பாக இருக்கும். இக்காரணத்தால் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் தொடர்பான தனி நூல்கள் பல ஆண்டுகள் எழுதப்படவில்லை. முதன் முதலாகத் தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் தொடர்பான நூலை வழங்கிய பெருமை தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்க்கு உண்டு. தாய்

லாந்தில் திருவெம்பாவை, திருப்பாவை (1978) எனும் அழகான நூலை இவர் எழுதியுள்ளார். சிறப்பாக ஆராய்ச்சி செய்து வரையப்பட்ட இச்சிறிய நூல் திருவெம்பாவை, திருப்பாவை தொடர்பான செய்திகளைத் திரட்டி அளிக்கின்றது. இம் மந்திரங்கள் எழுதப்பட்டிருக்கும் ஓலைச்சுவடியை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மைக்ரோ-பிலிம் (Micro-film) செய்து வாங்கி வைத்திருக்கின்றது. முதன்முதலாக அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றி, ஒரு நூலை எழுதிய பெருமை எஸ். தனிநாயக அடிகளார்க்கு உண்டு என்று கூறலாம். அவர் ஒன்றே உலகம் (1974) எனும் தமிழ் நூலையும் Tamil Studies Abroad (1968) என்னும் ஆங்கில நூலையும் வெளியிட்டார். தாய்லாந்தில் தமிழ்ப் பண்பாட்டுத் தாக்கம் தொடர்பான சில குறிப்புகள் இந்நூல்களில் உள்ளன.

1985 நவம்பர் திங்களில் உலகத் தமிழர் எனும் ஒரு சிறப்பான நூலை இர. ந. வீரப்பன் வெளியிட்டார். தாய்லாந்து தமிழர்கள், தமிழ்ப் பண்பாடு தொடர்பான சில செய்திகளைத் தாய்லாந்திற்குச் சென்று திரட்டிப் பயணநூல் அணுகுமுறையோடு எழுதி இந்நூலை வெளியிட்டுள்ளார்.

1986 ஏப்ரல் திங்களில் ''Dravidian influence in Thai culture'' எனும் சிறப்பான நூலை எம்.யீ மாணிக்கவாசகம் வெளியிட்டார். திராவிட ப் பண்பாட்டுத் தாக்கத்தைப் பற்றி விரிவாக விமரிசனம் செய்யும் போதிலும் இந்நூலில் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் தொடர்பான பல அரிய செய்திகள் அளிக்கப் பட்டிருக்கின்றன. தமிழ்ப் பண்பாட்டையும், தாய்ப்பண்பாட்டையும் ஒப்பிட்டும் அழகாக விமரிசனம் செய்திருக்கின்றார். முதன் முதலாகத் தாய்லாந்து—தமிழ்ப்பண்பாட்டுத் தாக்கம் தொடர்பாக விரிவாக எழுதப்பட்ட ஆங்கிலநூல் மாணிக்கவாசகம் எழுதிய நூல்தான் எனக் கூறலாம். மேலும் இம்மாதிரியான விரிவான நூல் இன்றுவரை தமிழிலே எழுதப்படவில்லை. பொதுவாக இந்நூலைப் புதுவழிகாட்டும் முதன் முயற்சி நூல் எனக் குறிப்பிடலாம்.

1987 திசம்பர் திங்களில் க. த. திருநாவுக்கரசு ''தென் கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு'' எனும் நூலை வெளியிட்டார். இயன்ற வரையில் நடுநிலைமையில் நின்று 1986 ஆம் ஆண்டு வரையில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஐரோப்பிய அறிஞர்களின் கருத்துக்களையும், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்

களையும், இந்திய வரலாற்றுப் பேரறிஞர்களின் சிந்தனைகளையும் சீர்தூக்கிப் பார்த்து, கருத்துக்களை தொகைவகைப்படுத்தி, காலவரன்முறையில் நிரல்பட, தாய்லாந்து பண்பாட்டு வரலாற்றைச் சுமார் 60 பக்கத்தில் எழுத முயன்றுள்ளார் இப் பேராசிரியர்.

1989 ஜூலைத் திங்கள் இந்நூல் ஆசிரியர் ''அயல் நாடுகளில் தமிழர்'' எனும் நூலை வெளியிட்டார். மேலே குறிப்பிடப்பட்ட நூல்களைஎல்லாம் படித்து,மேலும் சிலச் செய்திகளைத் திரட்டிச் சுருக்கமாகச் சுமார் 25 பக்கங்களில் தாய்லாந்து தமிழ்ப்பண் பாட்டைப் பற்றி இந்நூலில் எழுதியிருக்கின்றார்.

மேலே குறிப்பிடப்பட்ட நூல்கள் எல்லாம் புதுவழி கண்டு பிடித்த முதன் முயற்சிகள், முன்னோடிகள், குறிப்பாக இந்த அறக்கட்டளை நூலின் வழிகாட்டிகள். ஆகையால் இந்நூல்களின் உதவியுடன் இவ்வறக்கட்டளை நூலில் வரையப்படுகின்றது. ஆனாலும் தாய்லாந்து தமிழ்ப்பண்பாட்டுக்கூறுகள் தொடர் பான எல்லா முக்கிய செய்திகளும் மேலே குறிப்பிடப்பட்ட எல்லா நூல்களிலும் அளிக்கப்படவில்லை. குறிப்பாகத் தமிழ் நாட்டுச் சிவன், விஷ்ணு வழிபாடு தொடர்பாக விரிவாக இந் நூல்களில் எழுதப்படவில்லை. பல்லவமயமாக்கம், சோழமய மாக்கம் போன்ற புதிய தமிழ்ப் பண்பாட்டுப் பின்னணியில் இந் நூலின் முதல்பகுதி எழுதப்பட்டிருக்கின்றது. அதே போலத் தாய்லாந்து நாட்டு மாரியம்மன் கோவிலைப் பற்றியும்,அங்குள்ள தமிழர்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்து மேலே குறிப்பிடப் பட்ட நூல்களில் விரிவாக விமரிசனம் செய்யப்படவில்லை. கம்பராமாயணத்தின் தாக்கத்தைப் பற்றியும் இந்நூல்களில் எழுதப்படவில்லை. அ. சிங்காரவேலு கம்பராமாயணம், மயில் ராவணன் தொடர்பாக வெளியிட்ட செய்திகளை இந்நூல்கள் பயன்படுத்தவில்லை. மேலும் தாய்புத்தசமயத்திற்கும் இந்து சமயத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினால் தோன்றிய தாய்பண்பாட்டைப் பற்றித் தெளிவாக ஆராயவில்லை. மேலும் தாய் பிராமணர்களுக்கும் புத்த சமயத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைப் பற்றியும் இந்நூல்கள் கூறவில்லை. 1990 ஆம் ஆண்டு நான் தாய்லாந்திற்குச் சென்று வந்த பிறகு இப்புதிய செய்திகளைத் திரட்டவும் இப்புதிய கருத்துக்களை உருவாக்கவும் முடிந்தது. பொதுவாக இப்புதிய செய்திகள், புதுக்கருத்துக்கள் அடிப்படையில் இவ்வறக்கட்டளை நூல் எழுதப்பட்டிருக் கின்றது. ஆனாலும் முன்னோடி நூல்களின் உதவியுடனும் பொதுவாக எல்லாப் பேரறிஞர்களின் சிந்தனைகளையும்,

கருத்துக்களையும் நடுநிலைமையில் நின்று சீர்தூக்கிப் பார்த்தும் இந்நூல் வரையப்பட்டிருக்கின்றது. மேலும் தாய்லாந்தின் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் அடங்கிய முதல் தமிழ்நூல் இந் நூலே எனவும் கூறலாம்.

## தாய்லாந்து வரலாறும் இந்தியத் தொடர்பும்

தமிழ் நாட்டின் பண்டைய பண்பாட்டுத் தாக்கத்தைப் பற்றி அறிவதற்குத் தாய்லாந்தின் பண்டைய வரலாற்றைப் படித்து அறிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும். பதின் மூன்றாம் நூற்றாண்டு வரை சில பகுதிகளாகச் சிதறிக் கிடந்த தாய்லாந்து ஒன்றாக இணைக்கப்படவில்லை. மேலும் ஒரு விடுதலை பெற்ற நாடாகச் செயல்பட்டதில்லை. ஆகையால் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை அண்மைப் பேரரசுகளின் ஒரு பகுதியாகவோ அல்லது பேரரசுகளின் மேலாட்சியின் கீழோ தாய்லாந்து இருந்தது. இதனால் அப்பேரரசுகளின் பண்பாடும், சமயமும், அரசியல் கொள்கைகளும் தாய்லாந்து நாட்டு மக்களின் வாழ்க்கையைச் சிறப்பாகப் பாதித்தன.

மேகாங் ஆற்றங்கரையோரம் கி.பி. முதலாம் நூற்றாண்டி லிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரை தோன்றி வளர்ந்த பூனான் பேரரசு வடகிழக்குப் பகுதியை அதாவது இன்று தாய்லாந்து என அழைக்கும் பகுதியை ஆட்சி செய்து வந்தது. பிறகு தாய்லாந்து கெம்மர் பேரரசின் பகுதியாக இருந்தது. ஆனால் தாய்லாந்தின் நடுப்பகுதி கீழை பர்மாவில் ஆட்சிபுரிந்த மான்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. இப் பகுதியில்தான் மிகவும் பழைமையான புத்த அரசு துவராவதி எனும் பெயருடன் தழைத்தோங்கியது. இப்பேரரசும் தாய்லாந் தின் சமய, பண்பாட்டு மரபை உருவாக்கியது. தெற்குத் தாய்லாந்து மலேய தீபகற்பத்தின் பகுதியாக இருந்தது, ஸ்ரீவிசயப் பேரரசின் செல்வாக்குடன் வளர்ச்சியடைந்தது. ஆகையால் இத்தகைய புவியியல் அமைப்பின் விளைவாக அண்மை நாடுகளின் பண்பாடுகள் தாய்லாந்தில் வேரூன்றி இன்றைய தாய்லாந்தின் பண்பாட்டை உருவாக்கின.

தென்கிழக்காசியாவின் இவ்வெல்லாப் பகுதிகளிலும் இந்திய சமய, பண்பாட்டின் தாக்கம் மேலோங்கி இருந்தது. ஆகையால் இந்திய பண்பாடு தென்கிழக்காசியாவின், குறிப்பாக அண்டை நாடுகளின் பல பகுதிகளிலிருந்து தாய்லாந்திற்குச் சென்றது. ஆனால் தாய்லாந்தின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே சமயத்தில்

இந்திய பண்பாட்டின் செல்வாக்கு ஓங்கித் தழைத்ததில்லை. தாய்லாந்தின் நடுப்பகுதியிலுள்ள மான்கள் வடதாய்லாந்திலும் வாழ்ந்து வந்தபோதிலும், வடதாய்லாந்தில் இந்திய பண் பாட்டின் தாக்கம், தாய்லாந்தின் நடுப்பகுதியைத் தாக்கிய பல காலத்திற்குப்பிறகுதான்,தோன்றியது.பொதுவாகக் கம்போடிய (கெம்மர்களின்) இந்திய பண்பாட்டின் தாக்கம் தாய்லாந்தில் வேரூன்றி வளர்ச்சியடைந்து பல மாறுதல்களை அடைந்தது எனக் கூறலாம். பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து இரண் டாம் உலகப்போர் முடியும்வரை சீனப் பண்பாட்டின் செல் வாக்குத் தாய்லாந்தில் ஓங்கியது எனவும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்திய பண்பாடு எனப்பொதுவாக நாம் கூறினாலும் இந்தியா முழுவதும் பண்டைய காலத்தில் ஒரே சீரான பண்பாடு இருந்ததாகத் தெரியவில்லை. மாநில வேறுபாடுகள் இப்பண் பாட்டில் இருந்தன. மேலும் இந்தியா முழுவதும் ஒரே பேரரசின் ஆட்சிக்கீழ் இருந்ததில்லை. அரசியல் அடிப்படையில் இந்தியா பல பகுதிகளாகப் பிரிந்திருந்தது. ஆனால், பண்பாட்டு அடிப் படையில் பல வேற்றுமைகள் இருந்த போதிலும் அடிப்படை ஒற்றுமையுடன் இந்திய பண்பாடுச் செழித்தோங்கியிருந்தது. பொதுவாகச் சமயம் ஒரு சிறப்பான இணைப்பு பாலமாக இருந்தது. இந்து, புத்த, சமண சமயங்களும், பிறகு இசுலாம், கிறித்துவ சமயமும் இந்திய மக்களிடையே ஒற்றுமை உணர்ச் சியை வளர்த்தன. ஆகையால் பண்டைய காலத்தில் சிவன், பிரம்மா, விஷ்ணு, விநாயகர், மேலும் பல இந்துக் கடவுள்கள் இந்தியாவின் இந்துப் பிரிவினர்களின் பொதுக் கடவுள்களாக இருந்தனர். மேலும் சமஸ்கிருத மொழி இந்தியாவின் இணைப்பு மொழியாக இருந்தது. இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் ஆளும் வகுப்பினரின் ஆதரவுடன் சமஸ்கிருத மொழி வளர்ச்சி யடைந்திருந்தது. அதே போல பாலிமொழியும், புத்த சமயமும் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பரவியிருந்தது. ஆகையால் அரசியல் கோட்பாட்டு வேற்றுமைகள், மொழிப்பிரிவு வேற்றுமை கள், பல பழக்கவழக்க வேற்றுமைகள் மாநிலங்களைப் பிரித்த போதிலும், இந்திய பொதுப் பண்பாடு, குறிப்பாகச் சமய அடிப்படையில் இந்தியாவை இணைத்து ஒற்றுமையை வளர்த்தன.

இப்பொது, இந்திய பண்பாடு தாய்லாந்திற்கும் பிற தென் கிழக்காசியப் பகுதிகளுக்கும் சென்று பரவியது. ஆனால் இந்தியாவின் எப்பகுதியிலிருந்து இந்திய பண்பாடு அண்டை

நாடுகளுக்குப் பரவியது என்பதைப் பற்றி அறுதியிட்டுக் கூற முடியவில்லை. பொதுவாகத் தென் இந்தியாவிலிருந்து இப்பண் பாடு பரவியது எனக் கூறுவதற்குச் சான்றுகள் இருக்கின்றன. பெரும்பான்மையான அறிஞர்களும் இக்கருத்தை ஓரளவு ஒப்புக் கொள்கிறார்கள். அண்மைக் கால அகழ்வாராய்ச்சி, இப்பண் பாடு, குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து பரவியிருக்கலாம் எனப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவ்வாறு சான்றுகள் நமக்கு கிடைக்கும் போதிலும், பிற இந்திய மாநிலங்களின் தாக்கத்தை முற்றிலும் புறக்கணிக்க முடியாது எனும் கருத்தையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

தமிழர்களின் பண்பாடு பரவியதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டின் நில இயல் அமைப்பு இதற்கு ஒரு சிறப்பான காரணமாக இருக்கின்றது. இந்திய தீபகற்பத்தின் தென்முனையில் தமிழ்நாடு இருக்கின்றது. மேலும் இதன் நீண்ட கடற்கரை வங்காளவிரிகுடாவைப் பார்த்துக்கொண்டு இருக் கின்றது. மேலும் தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியின் வறண்ட சூழ்நிலையும் தமிழர்களின் குடிபெயர்வுக்குக் காரணமாக இருந்தது. முத்து, இரத்தினம், தங்கம், நறுமணப் பொருட்கள், நீரில் கரையாத பற்றாற்றல் மிக்க மரப்பிசின் வகை (Resin) முதலிய பொருட்களைத் தேடிப் பண்டைய காலத்திலும் இடைக்காலத்திலும் தமிழர்கள் அயல் நாட்டிற்குச் சென்றனர். மேலும் இடைக்காலம் வரை தமிழக மன்னர்களின் ஆதரவும், ஊக்கமும் கிடைத்ததாலும் பல தமிழர்கள், தமிழ்ப் பண் பாட்டைப் பரப்பும் நோக்கத்துடனும் அயல்நாடுகளுக்குச் சென்றார்கள்.

கூலிப்படை வீரர் (Mercenaries) கைவினைஞர் (Astisans), பூசாரி, அர்ச்சகர் முதலிய பணிகள் கிடைத்ததால் அயல்நாடு களுக்குச் சென்றனர். தவிர இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் மக்கள் தொகை அதிகரித்ததாலும் வேளாண்மை பாதிக்கப்பட்டதாலும் அயல்நாடுகளுக்குச் சென்றனர். பஞ்சத்தால் பிழைக்கச் சென்றவர்கள் பலர். கட்டாயத்தின்பேரில் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் குறை வானவர்கள் என்றே கூறவேண்டும். குறிப்பாகச் சைவ, வைணவ வழிபாடு புத்தெழுச்சி பெற்ற சூழ்நிலையில் புத்த சமயத்தினர் சிலர் தமிழ்நாட்டை விட்டு வெளியேறினர். வாணிபம் செய் வதற்காகவும், தோட்டங்களில் கூலி வேலை செய்வதற்காகவும், ஊதிய உயர்வு கிடைத்ததாலும் பல தமிழர்கள் அயல்நாடு களுக்குச் சென்றனர். சமுதாயத்தில் ஒடுக்கப்படல், நிலப்பிரபு

மற்றும் வட்டிக்கடைக்காரர்களின் பொருளாதாரச் சுரண்டல், வாணிபம் மற்றும் தொழில்களின் வீழ்ச்சி, முதலியனவும் தமிழர் கள் அயல்நாடுகளுக்குச் செல்வதற்குக் காரணங்களாக இருந்தன. இவற்றால், தென்கிழக்காசியா முழுவதிலும் தமிழினத்துடன் ஒரு பழமையான தொடர்பு உள்ள வரலாறு காணப்படுகிறது.

தமிழர் கடல் கடந்து சென்றுள்ளமையை 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை' என்ற தொல்காப்பிய நூற்பாவாலும், 'கடாரம் வென்ற சோழன்' என்ற தொடராலும் அறிகிறோம். முப்புறமும் கடல் சூழ்ந்த நிலத்தில் நெடுங்காலமாக வாழ்வதன் விளைவாகத் தமிழ் மக்கள் கலம் செலுத்திக் கடல் கடந்து செல் வதில், பொருள் தேடுவதில் இயல்பான ஆர்வமும் ஊக்கமும் காட்டி வந்தனர். சடலோடும் கலையில் தமிழர்கள் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரிதி, வாரணம், பவ்வம், பரவை, புணரி, கடல் என்று கடலைக் குறிப்பதற்குப் பல சொற்களும், கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசல், புணை, தோணி, திமில், அம்பி, வங்கம், மிதவை என்று நீரில் செல்லும் ஊர்திகளைப் பற்றிப் பல சொற்களும் தமிழில் உள்ளன என்பதை அறியலாம். ஆகையால் தமிழ் மக்களின் முத்தும், பவளமும், கலையும், சமயமும், தமிழும், சமஸ்கிருதமும்—பொதுவாகத் தமிழ்ப் பண்பும் தென்கிழக்காசிய நாடுகளின் மூலை முடுக்குகளில் எல்லாம் சென்றதைக் காண்கிறோம். அவ்வாறு தமிழ்ப் பண பாடு சென்று ஓரளவு செல்வாக்குடன் வாழ்ந்த தென்கிழக்காசிய நாடுகளுள் ஒன்று பண்டைய தாய்லாந்து நாடாகும். காலப் போக்கில், தாய்லாந்தில் குடியேறிய தமிழர் தங்கள் தனித்து வத்தை இழந்தனர், தமிழ்ப் பண்பாடும் தன் தனித்துவத்தை இழந்து நின்றது.

## பல்லவ மயமாக்கம்

பல்லவர் காலத்தில் தென்கிழக்காசிய நாடுகள் பல்லவ மயமாக்கப்பட்ட போதிலும் தென்கிழக்காசிய நாடுகளுடன் பல்லவர் நேரடியாகத் தொடர்பு கொண்டனர் என்பதற்கான நேரடிக் கல்வெட்டுச் சான்றுகள் நமக்கு இன்று வரை கிடைக்க வில்லை. ஆனால் பல்வேறு கூடுதலான தொடர்புச் சான்றுகள் (Corroborative Evidence) மூலம் பல்லவர்களுக்கும் தென்கிழக் காசிய நாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது எனக் கூறலாம்.

தென்கிழக்காசியாவின் முற்பகுதி கல்வெட்டுகள் எல்லாம் சமஸ்கிருத மொழியிலே எழுதப்பட்டிருக்கின்றன; அவை கி.பி. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை; அச்சமஸ்கிருத கையெழுத்து முறை அக்காலத்தில் சோழமண்டல பகுதிகளில், பயன்படுத்தப்பட்ட கையெழுத்து முறையை (பல்லவ கிரந்த எழுத்துமுறையை) முழுதும் ஒத்திருக்கின்றது. இன்று தென்கிழக்காசியாவின் முற்பகுதியைச் சேர்ந்த பல்லவ கிரந்த எழுத்து முறையில் எழுதப்பட்ட இருநூற்றுக்கு மேலான கல்வெட்டுகள் நமக்கு கிடைத்திருக்கின்றன. வேறு முற்பகுதி இந்திய மொழி கையெழுத்து முறையைச் சார்ந்த கல்வெட்டுகள் இப்பகுதிகளில் இன்றுவரை கிடைக்கவில்லை. மௌரிய காலப் பிரம்மி எழுத்து முறையோ அல்லது குப்தர் காலத்து எழுத்து முறைச் சான்றுகளே கிடைக்கவில்லை. கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்திற்குப் பிறகுதான் முதன் முதலாக வடஇந்திய நாகரிக்குமுந்திய கையெழுத்து முறை (Pre Nagari) கல்வெட்டுகள் கிடைக்கின்றன. (Chhabra: *1965: 72-76*) இப்புதிய வடஇந்திய கையெழுத்து முறை, புதியதாகத் தோன்றியதால் அதிக ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்கவில்லை. (Chatterji : *1964:101)*

சமஸ்கிருத மொழிக் கல்வெட்டுகள் மிகுதியாகக் கம்போடியா போன்ற இந்தோசீனப் பகுதிகளிலும், இந்தோனேசியாவிலும் கிடைத்திருப்பதால் இப்பகுதிகளில் சமஸ்கிருத மொழியும், பல்லவ கிரந்த எழுத்துமுறையும் மிகவும் வளர்ச்சியடைந் திருந்தன. மிகுதியான செல்வாக்குடன் வாழ்ந்து வந்தன எனத் தெளிவாகத் தெரிகின்றது. எடுத்துக்காட்டாக, கி.பி.5 அல்லது 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்று குவான்லுக்பட் கல்வெட்டுகள், 6 அல்லது 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு குவான்லுக்பட் கல்வெட்டுகள், 6-7 நூற்றாண்டைச் சேர்ந்த காவோசி விசாய் கல்வெட்டு, 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மூன்று நாகோன் சிதம்மராட் கல்வெட்டுகள், கி.பி 775 இல் எழுதப்பட்ட ஒரு நாகோன் சிதம்மராட் கல்வெட்டு முதலியவைகள் தென்தாய்லாந்தில் கிடைத்திருக்கின்றன. இக் கல்வெட்டுகள் எல்லாம் பல்லவ கிரந்த எழுத்து முறையைப் பயன்படுத்தி எழுதப்பட்ட சமஸ்கிருத கல்வெட்டுகள். தவிர தாய்லாந்தில் ஸ்ரீதெப் எனுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமஸ்கிருத கல்வெட்டும் பல்லவ கிரந்த எழுத்து முறையைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றது. இக் கல்வெட்டு இன்று தாய்லாந்தின் தலைநகரான பாங்காக் அருங்

காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றது. (Kong Kaew Veera Prajak, *1986, 7-20*).

தமிழ்ப் பல்லவ பேரரசர்கள் சமஸ்கிருத மொழி எழுது வதற்குப் பல்லவ கிரந்த எழுத்து முறையை அறிமுகப்படுத்தி னார்கள். இந்த எழுத்து முறையைத் தென்கிழக்காசிய கல்வெட்டு களில் தென்கிழக்காசிய மக்கள் பயன்படுத்தியிருந்தார்கள். வட இந்திய சமஸ்கிருத எழுத்து முறைக்கும் பல்லவ கிரந்த சமஸ்கிருத எழுத்து முறைக்கும் வேறுபாடு இருந்தது. தமிழ் நாட்டிலும், தென் இந்தியாவிலும் சுலபமான எழுத்து முறையைப் பயன்படுத்தி மக்களை ஊக்குவித்து சமஸ்கிருத மொழியைப் பரப்பவேண்டும் எனும் நோக்கத்துடன் பல்ல வர்கள் இவ்வெழுத்து முறையைக் காஞ்சியில் கண்டுபிடித் திருக்க வேண்டும். தென்இந்திய மொழிகளிலிருந்து இச்சுலப மான பல்லவ கிரந்த சமஸ்கிருத எழுத்து முறை தோன்றியது. எடுத்துக்காட்டாக முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன் பயன்படுத்திய சமஸ்கிருத கிரந்த எழுத்துமுறை தென்இந்தியா தக்காணம் முழுவதும் பரவலாக இருந்த எழுத்து முறையை ஓரளவு ஒத்திருந்தது. ஆனால் கி.பி. ஏழாம் நூற்றாண் டிற்குப் பிறகு பல்லவ கிரந்த சமஸ்கிருத எழுத்து முறை தனித்துவம் பெற்றது. தெலுங்கு, கன்னடம் எழுத்துமுறையைக் காட்டிலும் பலவிதத்தில் வேறுபட்டிருந்தது. அணிவளமிக்க பாணியிலும், (Florid Styles), எளியபாணியிலும் (Simple Style) பல்லவ கிரந்த சமஸ்கிருத எழுத்து முறை பயன்படுத்தப்பட்டது. (Sivaramamurti: *1965: 222*).

பல்லவ கிரந்த எழுத்து முறை முதன்முதலாகத் தென்கிழக் காசியாவில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறையாதலால், தென் கிழக்காசிய மொழிகளின் எழுத்து முறைகளின் மூலமாகவும் பல்லவ கிரந்த எழுத்து முறை அமைந்தது. எடுத்துக்காட்டாகத் தாய்மொழி (சயாம் மொழி) எழுத்து முறை சமஸ்கிருத மொழி பிரிவுகளான பின் அண்ண ஒலி (Gutterals today known as velar sounds) அண்ண ஒலி (Palatals) வளைநா ஒலி, (Cerebrals: today called Retroflex) பல்ஒலிகள் (Dentals), இதழ் ஒலிகள் (Labials) முதலிய ஒலி முறைகளைத் தழுவியிருக்கின்றது. எழுதும் முறையிலும் கையெழுத்து வகைகளில் எளிதாக ஓடும் போக்குடைய நேரொழுக்கான (Cursive) தடையின்றிச் செல்கிற, அலையாய் விழுகிற (More flowing) தமிழ், தெலுங்கு, சிங்களம் முதலிய எழுத்து முறையைத் தழுவியிருக்கின்றது. (Singaravelu *1969: 11, 14*). இன்று தாய்மொழியைப் பற்றி

விவாதிக்கும் பொழுது பல்லவ கிரந்த எழுத்து முறையின் தாக்கத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பதில்லை.

மேலும் தாய்லாந்தில் பழைய தகுவாபா நகரில் வாட்நா மியாங்கு (Wat Na Miang) கோயில் உட்புறத்தில் கல்லின் மீது தமிழ்மொழியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று காணப் படுகிறது. ஹீல்ஷ் என்ற கல்வெட்டியல் ஆராய்ச்சியாளர், அக் கல்வெட்டு பழைய தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு இருப்பதாகக் கருதுகிறார். அக்கல்வெட்டு, விசயநந்தி விக்கிரவர் மனின் திருவல்லம் கல்வெட்டோடு ஒப்புமையுடையதாகக் காணப்படுகின்றது என்று அவர் கூறுகிறார். விசயநந்திவர்மன், பல்லவப் பேரரசர்களுள் இறுதியாகச் சிறப்புற்று விளங்கிய மூன்றாம் நந்திவர்மன் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவன் கி.பி. 846 முதல் 869 வரை ஆண்டான் என்பர். அக் கல்வெட்டின் வாசகம்.

> ... (5) வர்மன் கு(ணா) ... மாந்தன்
> நாங்கூருள யா(ன்) தொட்டகுளம் பேர்சீரி
> அவனிநாரணம் மணிக்கிராமத்தார்க்(கும்)
> சேனாமுகத்தார்க்கும் பதார்க்கும் அடைக்கலம்

இக்கல்வெட்டினால் சில உண்மைகள் தெரிய வருகின்றன. 'அவனிநாரணன்' என்னும் பட்டப் பெயருடைய மூன்றாம் நந்தி வர்மன் காலத்தில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டதாகும். தமிழகத்து 'மணிக்கிராமம்' என்ற வாணிகக் குழுவினைச் சேர்ந்த வாணிகன் ஒருவன் தாய்லாந்தில் உள்ள விஷ்ணு (திருமால்) கோயிலில் குளம் ஒன்றை வெட்டி அதற்கு 'அவனி நாரணன் குளம்' என்று பெயரிட்டான் என்பது அறியப்படுகிறது. இதனால் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டு வாணிகக் குழு ஒன்று, தாய்லாந்தில் நிலையாகத் தங்கி இருந்தமையும் அவர்கள் அங்கு விஷ்ணுவுக்குக் கோயில் அமைத்து குளந்தொட்டு விழாவெடுத்தமையும் புலனாகின்றன. கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பெருக்கெடுத்து ஓடிய சைவ, வைணவ சமயங்களாகிய பக்தி வெள்ளத்தில் ஓர் அலை, அலைகடல்களுக்கு அப்பால் நெடுந் தொலைவிலுள்ள தாய்லாந்து நாட்டிற்குச் சென்று வீசியதின் விளைவாக அங்கு வைணவ சமயத்திற்குரிய விஷ்ணு கோயில், தமிழ்நாட்டு வாணிகர்களாலேயே கட்டப்பட்டமை தெரிய வருகிறது.

அக்கல்வெட்டில் 'சேனாமுகம்' என்றொரு சொற்றொடர் காணப்படுகிறது. 'சேனாமுகம்' என்பதற்கு ஒரு படையின் முன்னணி என்பது பொதுவான பொருளாகும். எனினும், படை வீரர் தங்கியிருக்கும் இடத்திற்கும் அப்பெயர் வழங்கப்பட்டது உண்டு. எனவே தமிழக வாணிகக் குழுக்கள் வெளிநாடு சென்ற பொழுது, தற்காப்புப் படையின் துணையோடு சென்றிருக்க வேண்டும் என்பது இதனால் புலனாகின்றது. (திருநாவுக்கரசு: 1987: 263—264). மேலும் வெளிநாடுகளுக்குப் படையனுப்பும் பழக்கம் பல்லவர் காலத்தில் இருந்தது எனவும் ஊகிக்கலாம். ஆகையால் பல்லவ படைவீரர்கள் தாய்லாந்து முதலிய தென் கிழக்காசிய நாடுகளுக்குச் சென்றதாகக் கிடைக்கும் ஒரே சான்று தகுவாபா கல்வெட்டுச் சான்றாகும். இதனால் மூன்றாம் பல்லவ நந்திவர்மனின் அரசியல் ஆதிக்கம் சிறிது காலமேனும் மலேய தீபகற்பத்தின் மேலைக் கடற்கரையின் பகுதிகள் சிலவற்றி லாகினும் சென்று பரவியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. ஆகையால் பல்லவ பேரரசர்களின் ஆதிக்கம் தென்கிழக்காசி யாவில் பரவியிருக்க வாய்ப்பிருக்கின்றது என ஊகிக்கலாம். மேலும் தமிழ் மக்கள் பலர் தாய்லாந்தில் குடியேறியிருந்தார்கள். அவர்கள் தக்க பக்கபலத்துடன் வாழ்ந்தார்கள் எனவும் தகுவாபா கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இரண்டாம் நரசிம்மவர்மனுடைய (இராசசிம்மன்) வயலூர் கல்வெட்டு ''தீவிபலட்சத்தீவில் வாழும் குடிமக்களின் நலனையும் அவன் நாடுவதாகத் தெரிவிக்கிறது (Eb: Ind: 8:181—182) இந்தக் கல்வெட்டைப் பதிப்பித்த கல்வெட்டு அறிஞர் எச். கிருஷ்ணசாஸ்திரி'' இத்தொடர் இலட்சத் தீவுகளைக் குறிக்க வில்லை; நெடுந்தொலைவிற்கு அப்பால், கடலில் உள்ள எண்ணற்ற தீவுகளையே சுட்டுகிறது'' என்று முடிவு செய் துள்ளார். (Epi. Ind: 8: 25—26) இக் கல்வெட்டு, பல்லவ பேரரசர்களின் கடலாதிக்கத்தை விளக்குகின்றது.

மேலும் கம்போடிய அரசர்களும், பல்லவர்களுக்குரிய 'வர்மன்' என்ற பட்டப் பெயரைப் [பூண்டு இருந்தனர். கம்போடிய அரசர்களின் பெயர்கள் முறையே பலவர்மன், சித்திரசேனன் மகேந்திரவர்மன், ஈசானவர்மன், இரண்டாம் பலவர்மன், ஜெயவர்மன், இரண்டாம் ஜெயவர்மன், கிருத வர்மன், சிரேஷ்டர்வர்மன், உருத்திரவர்மன், யசோவர்மன், ஐந்தாம் ஜெயவர்மன், ஹர்ஷவர்மன், சூரியவர்மன் முதலிய வர்கள் ஆவார்கள். இந்தப் பெயர்களில் 'வர்மன்' எனும் பெயர்ச் சொல் 'சத்திரியரை'க் குறிக்கும் சிறப்புப் பெயராகச்

சமஸ்கிருதத்தில் உள்ள 'அமரகோசம்' எனும் நிகண்டு தெரிவிக்கிறது. இக் கருத்தைத் தமிழிலுள்ள நிகண்டுகளும் தெரிவிக்கின்றன. மேலும் கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் 'வர்மன்' எனும் பட்டப்பெயரைச் சூடியிருந்த இந்திய அரசர்கள் பல்லவரே ஆவர். எடுத்துக்காட்டாகக் கம்போடிய அரசர் பலவர்மனுக்குப் பிறகு சித்திரசேனன் 'மகேந்திரவர்மன்' (கி.பி. 604—627) என்ற பட்டப் பெயருடன் அரசனாக முடிசூட்டிக் கொண்டான். அதே காலத்தில் தமிழ்நாட்டில் பல்லவ அரசன் மகேந்திரவர்மன் ஆட்சி புரிந்து வந்தான். இந்திய அரசர்களுள் பல்லவ மரபினைத் தவிர, பிற அரசமரபினருள் யாரும் 'மகேந்திரன்' என்ற பெயரையோ 'வர்மன்' என்ற பட்டப் பெயரையோ அக்காலத்தில் பெருவழக்காகச் சூட்டிக் கொள்ளவில்லை. (திருநாவுக்கரசு: 1987: 155—160) இச் சான்றுகளிலிருந்து பல்லவர்களுக்கும் தாய்லாந்தை ஆட்சி செய்து வந்த கம்போடியா அரசர்களுக்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும் எனப் புலனாகின்றது.

இக்கம்போடிய அரசர்கள் பல்லவ அரசர்களின் உறவினர்களை அல்லது பல்லவ அரசின் மேலாண்மையை ஒப்புக் கொண்டவர்கள் என விளக்கிக் கூறும் சான்றுகள் கிடைக்கவில்லை. கம்போடிய அரசனான முதலாம் ஜெயவர்மனுடைய கல்வெட்டு ஒன்று மட்டும் பல்லவர்களைப் பற்றி நேரடியாகவே குறிப்பிடுகிறது. 'ஆகாஞ்சிபுரநிருபா' எனும் தொடர் மட்டும் உள்ள கல்வெட்டு கிடைத்து இருக்கிறது. ஆனால் அக்கல்வெட்டு வாசகம் முழுமையாகக் கிடைக்கவில்லை. (Maghalingam 1977: 19) இக்கல்வெட்டு காஞ்சி அரசனைப் போற்றும் வகையில் அமைந்துள்ளதைக் காணுகின்றோம்.

பல்லவ அரசன் இராசசிம்மனுடைய மனைவி ரங்கபதாகை என்பவர், கம்போடிய அரசருடைய மகளானவள் என்பது அறிஞர் சிலரின் கருத்தாகும். (Subramanian: 1967: 45—48) ஆனால் ரங்கபதாகை தென்கிழக்காசியாவை ஆண்டுவந்த சைலேந்திர அரசனின் மகள் எனக் காஞ்சிக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இரண்டாம் நரசிம்மன் எனும் புகழ்வாய்ந்த இராசசிம்மன் காஞ்சியில் கயிலாசநாதர் கோயிலை எழுப்பித்தவனாவன். அக்கோயிலின் வெளிப்புற மதிலுக்கு அடுத்து தெற்குப் பக்கத்தில் பல சிறு கோயில்கள் உள்ளன. அவற்றுள் மூன்றாவதாக உள்ள கோயிலை இராசசிம்மனுடைய மனைவியருள் ரங்கபதாகை என்னும் அரசி தம் சொந்த செலவில் கட்டி

யுள்ளார். இதை அக்கோயிலில் உள்ள மூன்றுசமஸ்கிருத சுலோகங் களைக் கொண்ட ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது. அதில் ரங்க பதாகையின் தந்தையாருடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ''சைலஅதிராஜா'' என்பது ரங்கபதாகையினுடைய தகப்ப னாரின் பெயர் எனத் தெரிகிறது. இந்தப் பெயர் சைலேந்திர அரசனைச் சுட்டுவதாகக் கொள்வது பொருத்தமாக அமை கிறது. (திருநாவுக்கரசு: 1987:407-408) சுமத்திரா, ஜாவா முதலிய இந்தோனேசியப் பகுதியில் கி. பி. எட்டாம் நூற்றாண் டில் தென்கிழக்கு ஆசியாவின் அரசியல் வானில் சைலேந்திரப் பேரரசு தோன்றியது. இச்சைலேந்திரருடைய ஆட்சியின் தொடக்க காலக்கட்டமே பல்லவருடைய ஆட்சிக் காலமாகும்.

பல்லவ காஞ்சியில் உருவாகிய 'சகா' காலக் கணிப்புமுறை (Saka Era) தென்கிழக்காசிய நாடுகளில் பரவலாகப் பயன் படுத்தப்பட்டது. தவிர காரைக்கால் அம்மையார் வழிபாடு இருந்ததாகக் கிடைத்திருக்கும் சான்றுகள்; எட்டாம் நூற்றாண்டில் திருமங்கை ஆழ்வார் இந்தோனேசியா சென்ற தாகக் கிடைக்கும் மூலங்கள்; காஞ்சியைச் சேர்ந்த வினிடாருசி, கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வியட்நாமில் ஜென்புத்த சமயத்தை அறிமுகப்படுத்தினார் எனும் செய்திகள்; காஞ்சிபுர வஜ்ரபோதி கி.பி. எட்டாம் நூற்றாண்டில் வஜ்ராயன புத்த சமயத்தைத் தென் கிழக்காசியாவில் பரப்பினார் என விளக்கும் ஆதாரங்கள்; தென்கிழக்காசியக் கட்டிட, சிற்பக் கலையில் உள்ள பல்லவ கட்டிடக் கலைத் தாக்கங்கள்—முதலிய வரலாற்றுக் குறிப்புகள் பல்லவர்களுக்கும் தென்கிழக்காசியாவிற்கும், குறிப்பாகத் தாய் லாந்திற்கும் உள்ள தொடர்பினை உறுதிப்படுத்துகின்றன.

ஆகையால் தொடர்புள்ள சான்றுகள் மூலம் பல்லவர் களுக்கும் தாய்லாந்திற்கும், பிற தென்கிழக்காசிய நாடுகளுக்கும் நெருங்கிய உறவு இருந்தது புலனாகின்றது. மேலும் பல்லவர்கள் தென்கிழக்காசியாவைப் பல்லவமயமாக்க முயன்றார்கள் எனவும் தெளிவாகின்றது. பல்லவ அரசு கோட்பாடு, பல்லவநாட்டுப் பண்பாடு, பல்லவநாட்டுச் சமயங்கள், பல்லவநாட்டு மொழிகள், பல்லவநாட்டுக் கலை, கட்டிடக்கலை இப்பகுதிகளில் பல்லவ அரசு ஆதரவுடன் அறிமுகப்படுத்தப்பட்டு தழைத்தோங்கின எனத் துணிவுடன் எடுத்துரைக்கலாம். குறிப்பாகத் தமிழ்ப் பிராமணர்கள், சமஸ்கிருதம் அறிந்தபிற தமிழ் அறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள், தமிழ் வணிகர்கள், கைவினைஞர்கள், படை வீரர்கள் மூலம் பல்லவமயமாக்கும் பணி நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என ஊகிக்கலாம். பொதுவாகப் பல்லவர்கள்

காலத்தில் இந்தியர்கள் தென்திசை வழியைப் பயன்படுத்தினார்கள். காஞ்சிபுரத்திலிருந்து மார்குயி, தெனாசரீம், தாய்லாந்திலுள்ள தகுவாபா, புகட்தீவு, திராங் முதலிய இடங்களுக்கும், மேலும் அங்கிருந்து தெற்கே உள்ள சுமத்திரா, ஜாவா, போர்னியோ தீவுகளுக்கும் சென்றதாக நமக்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. (Mahash Kumar Sharan: 1974:15) இவ்வழியாகப் பல்லவர்கள் படையெடுத்துச் சென்றார்கள் எனச் சான்றுகள் கிடைக்காத போதிலும், தமிழர் சமயம், கலை பரப்புவதற்காகவும், வாணிபம் செய்வதற்காகவும் சென்றார்கள் என ஓரளவு அறுதியிட்டுக் கூறத் தொடர்புள்ள ஆவணங்கள் நமக்கு கிடைத்திருக்கின்றன.

## சோழ மயமாக்கம்

சோழர்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், சமயப் பண்பாடு, மொழி மனப்பாங்கு, செல்வாக்கு முதலியவற்றைப் பிறநாடுகளில் பரப்பி அந்நாடுகளையும் சோழமயமாக்க வேண்டும் என்பதே சோழப் பேரரசின் குறிக்கோள் எனக் கருதுகின்றேன். மேலும் சோழ அரசியல் பண்பாடு, பல்லவ, பாண்டிய சேர அரசியல் பண்பாடுகளைவிட மாறுபட்டிருக்க வேண்டும்; ஓர் தனித்துவம் வாய்ந்த பண்பாடாக இருக்கவேண்டும் எனவும் சோழப் பேரரசர்கள் விரும்பினர். எடுத்துக்காட்டாகக் கி. பி. 1001 ஆம் ஆண்டில் இராசராசன் சுசீந்திரம், கோட்டாறு, நாகர்கோயில், கன்னியாகுமரி முதலிய இடங்களைக் கைப்பற்றியவுடன், இந்நாடுகளை இணைத்து இந்நாடுகளுக்கு இராசராசன் தென்னாடு எனப்பெயர் சூட்டினான். பொதுவாகக் கைப்பற்றிய நாடுகளைச் சோழப் பேரரசுடன் இணைத்துச் சோழப் பேரரசன் பெயரைச் சூட்டிச் சோழமயமாக்கும் கொள்கையைச் செயல்படுத்துவதே சோழர்களின் அரசியல் பண்பாடாக இருந்தது என விளங்குகின்றது. அயல்நாடுகளிலும் இச்சோழமயமாக்கக் கொள்கையைச் சோழர்கள் செயல்படுத்தினர். எடுத்துக்காட்டாகக் கி.பி. 992 ஆம் ஆண்டில் இலங்கையைக் கைப்பற்றியவுடன் இலங்கையின் பெயரை மும்முடிச் சோழமண்டலம் என மாற்றினர். பொலநருவா எனும் ஊரின் பெயரை ஜனநாத மங்கலம் என மாற்றினர்.

தென்கிழக்காசியாவில் சோழமயமாக்கம் கோட்பாட்டை இருவழிகள் மூலமாகச் சோழப் பேரரசர்கள் செயல்படுத்த முயன்றனர். (1) போர்வழி (2) அமைதிவழி போர்முறை மூலம்

தென்கிழக்காசிய நாடுகளைக் கைப்பற்றிக் கைப்பாவை அரசை அமைக்க சோழப் பேரரசர் முயன்றனர். அவ்வாறு தென் கிழக்காசிய நாடுகளின்மேல் படையெடுத்துச் சென்றபொழுது தாய்லாந்திலுள்ள சில பகுதிகளையும் சோழப் பேரரசன் இராசேந்திரன் கைப்பற்றியதாகச் சான்றுகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

இராசேந்திர சோழன் ஆறாவது ஆட்சி ஆண்டுக் காலத்தில் கி.பி. (1017-1018) வெளியிடப்பட்ட திருவாலங்காடு செப்பேட்டில் கீழ்க்காணும் செய்திக் குறிப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது.

> ''தனது வலிமை வாய்ந்த படைகளுடன்
> பெருங்கடலைக் கடந்து கடாரத்தை வென்று
> மண் முன்னால் எல்லா மன்னர்களையும்
> தலைகுனியச் செய்து, உலகத்தைப் பல
> ஆண்டுகள் பாதுகாத்த பெருமை இம்மன்னருக்கு
> (இராசேந்திர சோழனுக்கு) உண்டு''.

இராசேந்திர சோழனின் கடாரப் படையெடுப்பைப் பற்றி முதன் முதலாகக் கூறும் செப்பேடு திருவாலங்காட்டுச் செப்பேடு என்றாலும், அக்கடாரப் படையெடுப்பைப் பற்றி விரிவாக முதன் முதலாகக் கூறும் கல்வெட்டு பெங்களூர் மாலூர் கோவிலில் உள்ள கல்வெட்டாகும். இக்கல்வெட்டு இராசேந்திர சோழனின் 13 ஆம் ஆட்சி ஆண்டில் (கி. பி.1024-1025) வெளியிடப் பட்டது. இக்கல்வெட்டில் அளிக்கப்பட்டிருக்கும் கடாரப் படை யெடுப்பு விவரங்கள் மீண்டும் தஞ்சை பெரிய கோயிலின் உள்ளே நடுவில் அமைந்த மேற்குச் சுவரில் எழுதப்பட்டிருக்கின்றது. தஞ்சாவூர்க் கல்வெட்டு இராசேந்திர சோழனின் 19 ஆம் ஆட்சி ஆண்டில் (1030-1031) வெளியிடப்பட்டது. இராசேந்திர சோழனின் 19, 22, 23, 27 ஆம் ஆட்சி ஆண்டுகளில் வெளி யிடப்பட்ட செய்திக் குறிப்புகளிலும் இவ்விவரமான கடாரப் படையெடுப்புச் செய்திகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இராசேந்திர சோழனின் 18, 32 ஆம் ஆட்சி ஆண்டுகளில் வெளி யிடப்பட்ட கல்வெட்டுகளிலும், கி. பி. 1050 ஆம் ஆண்டு மண்டிகரே கல்வெட்டிலும், வீரஇராசேந்திரன் அவனது ஏழாவது ஆட்சி ஆண்டில் வெளியிட்ட கன்னியாகுமரி கல்வெட் டிலும் இராசேந்திர சோழதேவன் கடாரம் படையெடுத்துச் சென்றமைக்குச் சான்றுகள் இருக்கின்றன.

இராசேந்திர சோழன் கடாரப் படையெடுப்பைப் பற்றி விரிவாக அளிக்கப்பட்டிருக்கும் செய்தி கீழ்வருமாறு:

"புரண்டோடும் கடலில் பல கப்பல்களை அனுப்பி கடாரம் அரசனைச் சங்கிரம விசயோதுங்கவர்மனைக் கைப்பற்றி, அவனுடைய படையைச் சேர்ந்த யானைகளையும், குவிந்திருந்த செல்வங்களையும் கைப்பற்றினோம். ஸ்ரீவிசயாவின் பரந்த தலைநகரில் மிக அழகாக நகைகளால் அலங்கரிக்கப்பட்ட போர் கதவு அருகில் இருந்த வித்யாதரரோ தோரணா என்னும் அலங்கார வளைவு, தண்ணீர் நிறைந்த குளியல் இடங்கள் உள்ள பன்னை மலை, காப்பரண்களுடைய மலையூர், ஆழ்கடல் அரணால் சூழப்பட்ட மாயிருடிங்கம் வீரிபோர்களின்பொழுதும் கூட அசைக்கமுடியாத இலங்காசேகம், மிகுந்த ஆழ் அரண் உடைய மாபப்பாளம், அழகான சுவர்களின் பாதுகாப்புடைய மெவிலிம்பங்கம், வளைப்பந்தூரு, அறிவியல் துறையில் தேர்ச்சிபெற்ற பெரியோர்களால் புகழப்படும் தலைதக்கோலம், பயங்கர போர்களின் பொழுது உதவும் மாடமலிங்கம், போர்க் காலத்தில் மிகு வலிமை கொள்ளும் இலாமுரிதேசம், தேன் நிறைந்த பரந்த தோட்டங்களுடைய பெருமை கொண்ட நக்காவரம், மேலும் ஆழ்கடலால் பாதுகாக்கப்பட்டிருக்கும் பயங்கர வலிமை வாய்ந்த கடாரம் முதலியவற்றை ஆரவாரத்துடன் கைப்பற்றினோம்."

இராசேந்திரன் தன்னுடைய ஆற்றல்மிக்க கடற்படையைக் கொண்டு கடல்நடுவில் உள்ள கடாரத்தரசனாகிய சங்கிரம விசயோதுங்கவர்மனைப் போரில் புறமுதுகிட செய்து, அவனது பட்டத்து யானையையும், பெரும்பொருளையும், வித்தியாதரத் தோரணத்தையும் கவர்ந்து கொண்டான். ஸ்ரீவிசயம், பன்னை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசேகம், மாபப்பாளம் (பப்பாளம்), மெவிலிம்பங்கம் (இளம்பங்கம்) வளைப்பந்தூர், தக்கோலம், மாடமலிங்கம் (தமாலிங்கம்), இலாமுரிதேசம், நக்காவரம், கடாரம் ஆகிய இடங்களையும் கைப்பற்றினான் என்பது இவன் மெய்க்கீர்த்தியினால் அறியப்படுகிறது.

கடாரப் படையெடுப்பில் இராசேந்திரன் கைப்பற்றியவையாக மெய்க்கீர்த்திகளில் சொல்லப்படும் நாடுகளும், ஊர்களும் சுமத்திராவிலும், மலேயாவிலும் அவற்றைச் சூழ்ந்தும் இருத்தனவாதல் வேண்டும்; மேலும் அவை அனைத்தும் சுமத்திராவில் அக்காலத்தில் நிலைபெற்றிருந்த ஸ்ரீ விசய பேரரசிற்கு உட்பட்டிருந்தன எனும் கருத்துகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

அண்மைக்காலத்து ஆராய்ச்சியாளர்கள் ஸ்ரீவிசயாவை ஒரு பேரரசு எனக் குறிப்பிடுவது பொருத்தமில்லை எனக் கருது கின்றனர். மேலும் சமீப கால அகழ்வாராய்ச்சியாளர்களின் கருத்தின்படி ஸ்ரீவிசய அரசு சுமத்திராவில் இருந்ததாக உறுதியான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆகையால் ஸ்ரீவிசயஅரசு தென் கிழக்காசியாவின் பிற பகுதிகளில் இருந்திருக்க வாய்ப்பு உண்டு எனத் தற்காலத்தில் கருதுகின்றனர்.

கடாரப் படையெடுப்பில் இராசேந்திரன் கைப்பற்றியனவாக மெய்க்கீர்த்தியில் சொல்லப்படும் சில ஊர்கள் தாய்லாந்திலும் அவற்றைச் சூழ்ந்தும் இருத்தனவாதல் வேண்டும் எனும் கருத்து நிலவுகின்றது. மெய்க்கீர்த்தியில் கூறப்பட்டிருக்கும் மூன்று இடங்கள் தாய்லாந்தில் இருக்கின்றது என மைக்கேல் ரைட்டும், பிற தாய்லாந்து அறிஞர்களும் கூறுகின்றனர். இவை முறையே இலங்காசோகம், மாடமலிங்கம், ஸ்ரீவிசயா. இலங்காசோகத்தின் இன்றைய பெயர் சொங்லா (Songhla) என்றும்; மாடமலிங் கத்தின் இன்றைய பெயர் நாகோன் சிதம்மாரட் (Nakhon Sithammarat) எனவும் கூறுகின்றனர். ஸ்ரீவிசயா இன்று நாகோன் பத்தோம் (Nakhon pathom) எனக் குறிப்பிடப்படுகின்றது. இலங்காசோகம் வீகோர் பூசந்தியில் (நாகோன்சிதர்மராஜ்) இருப்பதாகப் பெர்ராண்ட் கூறுகின்றார்.

தாய்லாந்து நாட்டின் நடுப்பகுதியில் நாகோன் பத்தோம் நகரம் இருக்கின்றது. இந்த நகரத்தைப் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கு முன் ஸ்ரீவிசயா எனப் பெயரிட்டு அழைத்ததாக உறுதியான சான்றுகள் உள்ளன. இன்றும் நாகோன் பத்தோம் நகரத்துக் கிராம மக்கள் இப்பகுதியை ஸ்ரீவிசயா என்றுதான் குறிப்பிடுகின்றார்கள். இக்காரணத்தால் ஸ்ரீவிசயப் பேரரசு தாய்லாந்தில் இருந்திருக்கலாம் என மைக்கேல்ரைட் போன்ற தற்காலத் தாய்லாந்து அறிஞர்கள் ஊகிக்கின்றனர். மேலும் ஸ்பென்ஸர் எனும் அறிஞர் கடாரத்தின் தலைநகரம் ஸ்ரீவிசயா எனக் குறிப்பிடுவதால் அன்றைய தாய்லாந்தின் ஓர் பகுதியாகக் கடாரம் இருந்திருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது.

கடாரம் 1918ஆம் ஆண்டு வரை பர்மாவில் உள்ளதாகவும், பிறகு மலேசியாவில் உள்ள கேதாவே கடாரம் எனும் கருத்தும் பொதுவாக இருந்தாலும், இக்கடார நாடு தென்கிழக்காசி யாவில் எப்பகுதியிலிருந்தது என அறுதியிட்டுக் கூற உறுதியான சான்றுகள் கிடைக்கவில்லை. தற்கால ஆராய்ச்சியின் அடிப் படையில் ஸ்ரீவிசயா தாய்லாந்தில் இருப்பதாலும், ஸ்ரீவிசயா

கடாரத்தின் தலைநகரமாக விளங்கியதாலும், தாய்லாந்தின் ஓர் பகுதியாகக் கடாரம் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம். பொதுவாகத் தாய்லாந்து நாட்டு அறிஞர்கள் நாகோன் சிதம்மராட், சய்யாவில் ஸ்ரீவிசயா பேரரசு இருந்திருக்கலாம் எனக் கருதுகின்றனர். தாய்லாந்து நாட்டின் நடுப்பகுதியில் ஸ்ரீவிசயா பேரரசு இருந்திருக்கலாம் எனவும், அப்பகுதியைத் துவாராவதி ஸ்ரீவிசயா எனக் குறிப்பிடலாம் என மைக்கேல் ரைட் கருதுகின்றார்.

மெய்க்கீர்த்தியில் கூறப்பட்டிருக்கும் மெவிலிம்பங்கம் எனும் ஊரும் லீகோர் பூசந்தியில் இருப்பதாக மசூம்தார் கூறுகின்றார். லீகோர் தாய்லாந்து தீபகற்பத்தின் கீழ்க்கரையில் இருக்கின்றது. இந்த லீகோரை நாகோன் சிதம்மராட் (நாகோன் ஸ்ரீதர்மராஜ்) என அழைக்கின்றனர்.

சோழர் படையெடுப்புக் காலத்தில் தாய்லாந்து நாட்டைச் 'சயாம்' என அழைத்துவந்தனர். ஸ்ரீவிசயா எனும் சொல்லில் இருக்கும் 'சயா' எனும் சொல் ஒலி வடிவத்தில் மாறி ''சயாம்'' என மாறியிருக்கலாம். தமிழர் புரத்தைப் புரம் (Pura=puram) என்று உச்சரிப்பது போல 'சயாவை' 'சயாம்' என உச்சரித்து இருக்கலாம் என மைக்கேல் ரைட் விளக்குகின்றார். சீனர்கள் தாய்லாந்தை 13 ஆம் நூற்றாண்டில் சியன் (Hsian) என்று குறிப்பிட்டனர். இச்சான்று மூலமும் சோழர்களுக்கும் சயாம் நாட்டு ஸ்ரீவிசயா பேரரசுக்கும் தொடர்பிருந்தது என ஊகிக்கலாம் என மேலும் மைக்கேல் ரைட் கருதுகின்றார்.

தாய்லாந்திற்கு வெகு அருகில் இருக்கும் நாடு கம்போடியா. கம்போடிய அரசர் தன்னுடைய நாட்டைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் சோழ அரசரின் உதவியை நாடியதாகவும், சோழ அரசருக்கு ஒரு தேர் அன்பளிப்பாக அனுப்பியதாகவும் கரந்தைச் செப்பேடுகள் கூறுகின்றன. இராசேந்திரனுடைய எட்டாம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1020) கரந்தைச் செப்பேடுகள் வெளியிடப்பட்டன. ஆகையால் கம்போடியா அருகே அதாவது தாய்லாந்தில் ஸ்ரீவிசயா அரசு இருந்திருக்கலாம். அவ்வரசு கம்போடியையாவைத் தாக்கும் எனும் நோக்கத்துடன் சோழ அரசின் உதவியைக் கம்போடியா நாடியிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது.

எனவே கடாரப் படையெடுப்பில் இராசேந்திரன் கைப்பற்றியனவாக மெய்க்கீர்த்தியில் சொல்லப்படும் ஊர்கள் தாய்லாந்திலும், பர்மாவிலும், மலேயாவிலும், சுமத்திராவிலும்

அவற்றைச் சூழ்ந்தும் இருந்தனவாதல் வேண்டும். அவை அனைத்தும் ஸ்ரீவிசயா பேரரசிற்கு உட்பட்டிருந்தன; அப்பேரரசு தாய்லாந்தில் இருந்திருக்கலாம் எனும் ஒரு கருத்தையும் அண்மைக்கால ஆராய்ச்சி அடிப்படையில் நாம் அளிக்கலாம். பொதுவாகக் கி.பி. 1025 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஓரிரண்டு ஆண்டுகளில் இராசேந்திரனின் கடாரப் படையெடுப்பு நிகழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

கி. பி. 1017 ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 1068 ஆம் ஆண்டு வரை பல கல்வெட்டுகளில் கடாரப் படையெடுப்பைப் பற்றிச் செய்தி கிடைப்பதால் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் சோழப் பேரரசின் மேலாட்சி கடாரத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்தது என ஊகிக்கலாம். கி. பி. 1050 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மண்டிக்கரே கல்வெட்டில் கூட கடாரம் சோழர் ஆட்சியின் கீழ் இருந்ததாகக் கூறும் சான்றுகள் இருக்கின்றன. கி. பி 1068 ஆம் ஆண்டு முடியிழந்த இளவரசனை அவனுக்குரிய அரியாசனத்தில் அமர்த்துவதற்காக வீர ராசேந்திரன் கடாரப் படையெடுப்பை எடுத்ததால் சோழர் கைப்பாவை அரசு கடாரத்தில் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம்.

சோழர்களின் மொழிக் கொள்கையைப் பற்றி விரிவாக இராசாராம் கீழ்வருமாறு விளக்குகின்றார்;

''இடைக்காலத்தில் சமஸ்கிருதம் தமிழைப் போல் பெருநிலை மொழித்தகுதியைப் பெற்றிருந்தது. தமிழுக்கு அடுத்தாற்போல் அரசியல், நிருவாகம், நீதிமுறை, கோவில் வழிபாடு, கல்வி முறை, இலக்கிய இலக்கணங்கள் ஆகிய மொழியாட்சிப் பகுதிகளில் சமஸ்கிருதம் முக்கிய இடம் பெற்றது. தென்கிழக்காசிய நாடுகளிலெல்லாம் சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகள் அரசோச்சி இருந்த காரணத்தினால் சோழப் பேரரசிலும் அவை முக்கிய இடம் வகித்தன. சோழப் பேரரசின் கீழ் இருந்த பிற அயல்மொழிப் பகுதிகளோடு தொடர்பு கொள்ளவும்,பேரரசின் அரசியல் நிருவாகத் தொடர்பான செய்திகளைத் தெரிவிக்கவும் தொடர்புமொழி என்ற நிலையில் சமஸ்கிருதத்தின் பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டது. இந்திய நாகரிகமும் பண்பாடும் தென்கிழக்காசிய நாடுகளில் பரவி வளர சமஸ்கிருதம் ஒரு தொடர்பு மொழியாக வளர்ந்திருந்தது வரலாற்று உண்மையாகும். கடாரம் போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலும் தம் முன்னோர் வளர்த்த பௌத்த சமயத்தின் மீதும், பாலி

சமஸ்கிருதம் போன்ற வடமொழிகளின் மீதும் வீரராசேந்திர சோழன் மதிப்பு வைத்திருந்தான். இம்மொழி உணர்வு புத்த மித்திரரை வீரசோழியம் எழுதுமாறு கேட்டுக் கொள்ளத் தூண்டியிருக்க வேண்டும். மேலும் அந்தந்த நாடுகளில் மட்டு மின்றித் தமிழகத்திலும் அந்நாடுகளில் முக்கிய சமயங்களுள் முதல் சமயமாக விளங்கிய பௌத்தத்தைச் சோழர்கள் வளர்த் தனர். தமிழகத்தில் புறச்சமயமாகவும் எண்ணிக்கையில் மிகக் குறைந்த மக்களின் சமயமாகவும் இது விளங்கினாலும் அரசியல் தொடர்புடைய தென்கிழக்காசிய நாடுகளை மதிக்கும் வகையில் இச்சமயமும் பாலி மொழியும் போற்றி வளர்க்கப்பட்டன.'' (இராசாராம்) சோழர்கள் ஆட்சி செய்தபொழுது புத்தசமயம் தாய்லாந்தில் ஓரளவு தழைத்தோங்கத் தொடங்கியது எனவும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் பொதுவாகச் சோழர்கள் சோழநாட்டில் மட்டு மல்லாமல் தென்கிழக்காசிய நாடுகளிலும் தமிழ், சமஸ்கிருத வளர்ச்சியில் நடுநிலை தவறாமல் கடமை ஆற்றினார்கள் எனக் கருதுகின்றேன். அயல்மொழிப் பகுதிகளில் தொடர்பு கொள்ள தமிழையும் சோழர்கள் பயன்படுத்தினார்கள் எனச் சான்றுகள் கிடைக்கின்றன. கம்பராமாயணம், தேவாரம், திருவாசகம், சைவசித்தாந்தம் முதலிய தமிழ் மணம் கலந்த பண்பாடுகள் தென்கிழக்காசியாவிற்குச் சென்று பரவின என நமக்குச் சான்று கள் கிடைக்கின்றன. தென்கிழக்காசிய மொழிகளிலே பல தமிழ்ச் சொற்கள் கலந்திருப்பதைப் பார்க்கின்றோம். இம்மாதிரி யான தமிழ்மொழி தாக்கத்தின் சூழமைவு சோழர்கள் காலத்தில் தென்கிழக்காசியாவில் தோன்றி வளர்ந்தது எனக் கூறலாம்.

எடுத்துக்காட்டாக நான் தாய்லாந்து சென்றபொழுது கீழே அளிக்கப்பட்டுள்ள தமிழ்ச் சொற்கள் இன்று தாய்லாந்தில் தாய்மொழியில் பயன்படுத்தப்படுகின்றன:—

| **தமிழ்** | **தாய்மொழி** |
|---|---|
| தங்கம் | தொங்கம் |
| கப்பல் | கம்பன் |
| மாலை | மாலே |
| கிராம்பு | கிலாம்பு |
| கிண்டி | கெண்டி |
| அப்பா | பா |
| தாத்தா | தா |

| | |
|---|---|
| அம்மா | மே, தான்தா |
| குரு | க்ரு |
| ஆசிரியர் | ஆசான் |
| பாட்டன் | பா, புட்டன் |
| பிள்ளை | புத், புத்ரா |
| வீதி | வீதி |
| மூக்கு | சாமுக் |
| நெற்றி | நெத்தர் |
| கை | கை |
| கால் | கா |
| பால் | பன் |
| சாதி | சாத் |
| தொலைபேசி | தொரசாப் |
| தொலைக்காட்சி | தொரதாட் |
| குலம் | குல் |
| நங்கை | நங் |
| துவரை | துவா |
| சிற்பம் | சில்பா |
| நாழிகை | நாளிகா |
| வானரம் | வானரா |
| வேளை | வேளா (Time) |
| மல்லி | மல்லி |
| நெய் | நெய்யி |
| கருணை | கருணா |
| விநாடி | விநாடி |
| பேய்/பிசாசு | பிச/பிசாத் |
| கணம் | கணா (Moment) |
| விதி | விதி |
| போய் | பாய் |
| சந்திரன் | சாந் |
| ரோகம் | ரூகி |
| தூக்கு | தூ |
| பிரான். எம்பிரான் | பிரா |
| மேகம் | மேக், மீக் |
| யோனி | யூனி |
| சிந்தனை | சிந்தனக்கம் |
| சங்கு | சான்க் |
| தானம் | தார்ன் |
| பிரேதம் | பிரீதீ |

| | |
|---|---|
| ஆதித்தன் | ஆதித் |
| உலகம் | லூகா |
| மரியாதை | மார—யார்ட் |
| தாது (Elements) | தாட் |
| உலோகம் | லூகா |
| பார்வை | பார்ப் |
| குரோதம் | குரோதீ |
| சாமி | சாமி (Husband) |
| பார்யாள் | பார்யா (wife) |
| திருவெம்பாவை | த்ரீயம்பவாய் |
| திருப்பாவை | திரிபவாய் |
| கங்கை | கோங்கா |
| பட்டணம் | பட்டோம் |
| ராஜா | ராஜ் |
| ராணி | ராணி |
| தருமசாத்திரம் | தம்மசாட் |

மேலே குறிப்பிடப்பட்ட சொற்களில் சில சமஸ்கிருத மொழிச் சொற்களாகும். அச்சொற்களைத் திராவிட சமஸ்கிருத சொற்கள் எனக் கூறலாம். இதற்கு முக்கிய காரணம் அயல் நாட்டு உறவால் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி முதலிய மொழிச் சொற்களோடு அந்தந்த நாட்டு மொழிச் சொற்களும் மிக அரிதாகத் தமிழில் இடம் பெற்றன. பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மணிப்பிரவாள நடை எனப் புதிய நடைப்போக்கு தமிழில் தோன்றியது. மாலையில் மணியையும் பவளத்தையும் மாற்றி மாற்றிச் சேர்த்துத் தொடுக்கப்பட்டதைப் போலத் தமிழ்த் தொடர்களையும் சமஸ்கிருதத் தொடர்களையும் மாற்றி மாற்றிக் கட்டிய நடை மணிப்பிரவாள நடையாகும். இம்மணிப்பிரவாள நடையின் தாக்கம் தாய்லாந்திலும், பிற தென்கிழக்காசிய நாடுகளிலும் இருந்திருக்கலாம் என மேலே குறிப்பிட்ட சொற்கள் மூலமும் ஊகிக்க முடிகின்றது.

மணிப்பிரவாள நடை அல்லது தமிழ்—சமஸ்கிருத கலப்பட மொழித் தாக்கத்தின் பயனை இன்று தாய்லாந்து மக்கள் பயன்படுத்தும் பெயர்களிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். பொதுவாகத் தாய்லாந்தில் பயன்படுத்தும் இப்பெயர்களைத் தமிழர்களும் மிகுதியாகச் சூட்டிக் கொள்கிறார்கள். தற்காலத் தூய தமிழ் மரபு உருவாகிக் கொண்டிருக்கும் சூழலமைவில்தான்

சில தமிழர்கள் இப்பெயர்களைச் சூட்டிக் கொள்வதில்லை. தாய்லாந்தில் வழங்கப்படும் பெயர்கள் பயன்படுநிலையில் மிகுதி, குறைவு எனக் கீழே அளிக்கப்பட்டிருக்கின்றன.

| | |
|---|---|
| அருண் | மிகுதி |
| வசந்தா | மிகுதி |
| ரத்னாவலி—வெள்ளி | மிகுதி |
| நாராயணா | குறைவு |
| மணி | மிகுதி |
| பார்வதி | புனிதமான பெயர் என நினைப்பதால் குறைவு |
| காஞ்சனா | மிகுதி |
| பரமேஷ் | மிகவும் புனிதமானபெயர் என ஒதுக்கப்படுகிறது |
| ராமேஷ்வன் | மன்னர் பெயர். ஆகையால் தவிர்க்கப்படுகிறது |
| மாலவிகா | பொதுவாகப் பயன்படுத்தப் படுகிறது |
| சக்தி | ஓரளவு பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது |
| வாசுதேவ் | பயன்படுத்தப்படுகின்றது |
| பத்மாவதி | பயன்படுத்தப்படுகின்றது |
| சுவாமி | ஓரளவு தவிர்க்கப்படுகின்றது |
| பிரியா | பொது |
| மான்சூலா | பொது |
| சாந்தி | மிகுதி |
| புசுபா | மிகுதி |
| சுசிலா | பொது |
| வருணி | பொது |
| அருணி | பொது |
| அனுராஜ் (ராத்) | குறைவு |
| காந்தகுமார் | மன்னர் குடும்பத்தினர் மட்டும் பயன்படுத்துகின்றனர் |
| கானேஷ் | குறைவு |
| குமார்(ன்) | பொது |
| சூர்யா | மிகுதி |
| சந்திரா | பொது |
| ஸ்வர்னா | பொது |

| | |
|---|---|
| ராசன் | பொது |
| நாக் | ஆண், பெண் இருபாலரும் பயன் படுத்தும் பொதுப் பெயர் |
| லக்ஷ்மி | பொது |
| உமா | புனிதமான பெயர், மிகக் குறைவு |
| மீனா | சிலர் |
| கமலா | பொது |
| சுரேஷ் | ஒருசிலர் |
| ராமேஷ் | பொது |
| பிரேமா | பொது |
| கிருஷ்ணா | மிகக் குறைவு |
| மாலே | மிகக் குறைவு |
| சம்பா | பொது |
| கருணா | மிகுதி |
| ராதா | பொது |
| மனோஹர் | குறைவு |
| சுகன்யா | குறைவு |
| பிரசாத் | குறைவு |

ஆகையால் பல்லவ, சோழப் பண்பாட்டுத் தாக்கத்தின் மூலமாகவும் இப்பெயர்கள் தாய்லாந்திற்குப் பரவியிருக்க வாய்ப் பிருக்கின்றது என ஊகிக்கலாம். பல்லவ கிரந்த எழுத்து முறை தாக்கம், தமிழ்மொழித் தாக்கம், தமிழ்ப் பண்பாட்டுத் தாக்கம் பல்லவர்கள் காலத்திலிருந்து தாய்லாந்தில் மேலோங்கி யிருந்ததால் தமிழர் மூலம் தமிழ்நாட்டில் இன்றுகூடப் பொது வாகப் பயன்படுத்தும் இப்பெயர்கள் தாய்லாந்திற்குச் சென்றிருக் கலாம் எனக் கருதினால் தவறில்லை.

## தமிழ் இராமாயணங்களின் தாக்கம்

தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாட்டுத் தாக்கத்தைத் தாய் இராமாயணத்திலும் நாம் பார்க்கலாம். மலேசிய பல்கலைக் கழகப் பேராசிரியர் எஸ். சிங்காரவேலும் இத்தமிழ் இராமா யணங்கள் தாக்கம் தொடர்பாக விரிவாக ஆராய்ச்சி செய் துள்ளார்.

இந்திய இராமாயணத்திற்குத் தாய்லாந்தில் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. இராமாயண நிகழ்ச்சிகள் தாய்லாந்து நாட்டிலே நடந்ததாகத் தாய் மக்கள் நம்புகின்றனர். ஆகையால் தாய்லாந்து நாட்டிலுள்ள நகரங்களும், கிராமங்களும், மலை

களும், ஏரிகளும் தாய்லாந்து இராமாயணக் கதைகளில் முக்கிய இடம் பெறுகின்றன. தாய்லாந்து இராமாயணக் கதைமாந்தர் தாய்லாந்து நாட்டுக் குழந்தைகளுக்குப் பின்பற்றத்தக்க முன் மாதிரிகளாகப் பெற்றோர்களால் பயன்படுத்தப்படுகின்றனர். ஆகையால் தாய் குழந்தைகளின் நற்பண்புகளின் ஒழுக்க உரமாகத் தாய் இராமாயணம் பயன்படுகிறது. ப்ராராம் (Phra Ram : இராமர்), நாங்சீதா (Nangsidha) அனுமன், பாலி (Phali : வாலி), ப்ராலக் (PhraLak : இலட்சுமணன்), தோட்சாகன் (Thotsakan : இராவணன்) முதலியவர்களின் பண்போவிய விரிவுரைகள் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகின்றன. பத்துதலை இராவணன் எல்லாத் தீய குணங்களும் உள்ள உருவகமாக, எடுத்துக்காட்டாக விளங்குகின்றான். உலக வாழ்க்கைக்கும், சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில் இராமாயணம் இருக்கிறது எனத் தாய் மக்கள் நம்புவதால் இராமாயணம் தாய்லாந்து நாட்டில் பொதுமக்களிடையே வழங்குகிற பெருங் காப்பியமாக விளங்குகிறது.

இராமாயணம் திரைநிகழ் காட்சியுடன் மலேயா தீபகற்பத்திலிருந்து ஸ்ரீவிசயா பேரரசு மூலம் மேனாம்பள்ளத்தாக்குக்கு முதன்முதலாக வந்தது எனத் தாய் மக்கள் பரவலாக நம்புகின்றனர். தாய் இராமாயணத்திற்கும் மலேயா இராமாயணத்திற்கும் பல ஒற்றுமை இருப்பதால் இவ்வாறு தாய் மக்கள் நம்புகின்றனர். ஆனால் கம்போடியா வழியாக இராமாயணம் தாய்லாந்திற்குச் சென்றிருக்கலாம் எனும் கருத்தையும் நாம் விலக்கி வைக்கக் கூடாது. ''இராமாயணக் கதை தாய்லாந்திற்கு ஸ்ரீவிசயா இராச்சியத்திலிருந்து(ஜாவா வழியாக) கொண்டு வரப்பட்டது உண்மை. ஆனால் அக்கதையின் தலையூற்றுத் தென்னிந்திய மரபினைப் பின்பற்றியதாகவே உள்ளது'' எனத் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த சுபத்ரா டிஷ் திஷ்குல் நம்புகின்றார்.

குறிப்பாகத் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்த கம்பராமாயணமும், நாட்டுப்புற இராமாயணக் கதைகளும் தாய்லாந்திற்குச் சென்றிருக்கின்றது என நமக்குச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. கம்ப இராமாயணம் சோழர்கள் காலத்தில் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றியதாலும், சோழர்களுக்கும் தாய்லாந்து நாட்டினருக்கும் ஓரளவு நெருங்கிய தொடர்பு இருந்தது எனத் தொடர்புச் சான்றுகள் கிடைத்திருப்பதாலும், சோழர்களுக்கும் ஸ்ரீவிசயா பேரரசுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என உறுதியான சான்றுகள் கிடைத்திருப்பதாலும்,

மேலும் ஸ்ரீவிசயா பேரரசு தாய்லாந்திலேயே இருந்திருக்க வாய்ப்பு உண்டு எனும் கருத்து அண்மைக் காலத்தில் உருவாகியிருப்பதாலும், தமிழ்நாட்டு இராமாயணக் கதைகள் சோழர்கள் காலத்திலேயே நேராகவோ, மலேசிய தீபகற்பம் மூலமாகவோ அல்லது கம்போடியா மூலமாகவோ சென்றிருக்க வேண்டும் என நம்பலாம்.

தாய் இராமாயணத்திற்கும் கம்பராமாயணத்திற்கும் பல நிகழ்ச்சி ஒருமைப்பாடு இருக்கின்ற போதிலும் தாய்லாந்து இராமாயணத்தில் உள்ள பல கிளைக்கதைகள் கம்பராமாயணத்தில் இடம் பெறவில்லை. ஆனால் வால்மீகி இராமாயணத்தில் இல்லாத பல நிகழ்ச்சிக்கதைகள் பொதுவாகக் கம்பராமாயணத்திலும் தாய்லாந்து இராமாயணத்திலும் இடம் பெறுகின்றன. தாய்லாந்து இராமாயணம் கம்பராமாயணம் இடையே 21 நிகழ்வுகளில் ஒப்புமை இருக்கின்றது. ஆனால் 22 நிகழ்வுகளில் தாய் இராமாயணம் வால்மீகி இராமாயணமிடையே வேறுபாடுகள் உள்ளன. புத்தர்கோயில் சுற்று மண்டபங்களில் இராமாயணக் காட்சிக்குரிய ஓவியங்கள் யாவும் கம்பராமாயணத்தை அடிப்படையாக அமைத்த விதம் சோழர்களுடையது எனச் சிலர் கருதுகின்றனர்.

எடுத்துக்காட்டாகத் தாய்லாந்து இராமாயணத்திலும் கம்பராமாயணத்தில் வருவது போல ஜனகர் அரண்மனைக்குள் இராமர் நுழைவதற்கு முன்பே இராமரும் சீதையும் ஒருவரை ஒருவர் தொலைவிலிருந்து பார்த்தபொழுது காதலித்தார்கள். வால்மீகி இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடவில்லை.

சீதையை இராவணன் தூக்கிச் சென்ற நிகழ்ச்சி தொடர்பாகவும் ஒப்புமை இருக்கின்றது. தாய்லாந்து இராமாயணம் மற்றும் கம்பராமாயணத்திலும் சீதையைக் கடத்திச் செல்ல வந்தபொழுது இராவணன் உடனடியாகச் சீதையிடம் தான் யார் எனத் தெரிவிக்கவில்லை. ஆனால் வால்மீகி இராமாயணத்தில் இராவணன் சீதையைக் கடத்தி செல்லவந்தபொழுது உடனடியாகத் தான் இலங்கை அரசன் என அறிமுகப்படுத்திக் கொள்கிறான்.

இராமர்-சூர்ப்பணகை சந்திப்பு நிகழ்வு தொடர்பாகவும் ஒப்புமை இருக்கின்றது. தாய்லாந்து இராமாயணம் மற்றும் தமிழ் இராமாயணங்களில் சூர்ப்பணகை இராமரைச் சந்திக்க

வந்தபொழுது ஓர் அழகான பெண் உருவத்தில் வந்தாள். ஆனால் வால்மீகி இராமாயணத்தில் சூர்ப்பணகை அரக்கி உருவிலேயே வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தாய்லாந்து இராமாயணம் மற்றும் தமிழ் இராமாயணங்களில் கும்பகர்ணன் முதலில் போர்க்களத்துக்கு வருகின்றான். ஆனால் வால்மீகி இராமாயணத்தில் இந்திரஜித் முதலில் போர்க்களத்துக்கு வருகின்றான்.

கம்பராமாயணம் போன்று தாய்லாந்து இராமாயணத்திலும் சீதை-இராமன் காதல் நோக்கு, கல்லான அகலிகை, இரணியனின் வதை போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. மேலும் கம்பராமாயணத்தில் கூறியிருப்பதைப் போலத் தாய் இராமாயணத்திலும் இராவணனை ஓர் அறிவாளியாகவும், போர் வீரனாகவும் சீதையை உண்மையில் காதல் செய்பவனாகவும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. மேலும் வால்மீகி இராமாயணத்தில் நாம்காணாத உணர்ச்சிக் கனிவையும் இரக்கப் பண்பையும் இராவணனின் தோல்வி, இறப்பு நிகழ்ச்சிகளில் தாய் இராமாயணத்திலும், கம்பராமாயணத்திலும்பார்க்கலாம். இவை அல்லாமல் இராவணனுடைய மகள் சீதை எனும் கதைக் குறிப்பும், இலக்குவனின் மகளே இந்திரஜித்தின் மனைவி எனும் கிளைக்கதைகளும் தாய் இராமாயணத்தில் இடம் பெற்றுள்ளன. பின்னவை இரண்டும் தெலுங்கு மொழி இராமாயணங்களில் இடம் பெற்றுள்ளன. ஆகவே தாய்லாந்தில் தென்னிந்திய இராமாயணங்களின் தாக்கம் சிறப்பாக இருக்கின்றது எனக் கூறலாம். அதே சமயத்தில் வங்காளம், காஷ்மீர் இராமாயணங்களின் தாக்கங்களும் தாய் இராமாயணத்தில் உள்ளது என்பதை மறுக்க முடியாது.

கம்பராமாயணத்தில் இடம் பெறாத ஓர் முக்கிய நிகழ்வு மயில் இராவணன் கதை. தாய்லாந்து இராமாயணத்தில் மயில் இராவணன் கதைக்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டிலும் நாட்டுப்புற மக்களிடையே மயில் இராவணன் கதை வழக்கில் இருக்கின்றது. இம்மயில் இராவணன் கதை தமிழக கிராம மக்கள் மூலம், குறிப்பாகத் தாய்லாந்துக்குச் சென்ற தமிழக நாட்டுப்புற வாணிகர்கள் மூலம் பல்லவர்கள் காலத்திலோ அல்லது சோழர்கள் காலத்திலோ தாய்லாந்தில் பரவியிருக்க வேண்டும். இரண்டு நாடுகளிலுள்ள மயில் இராவணன் கதைகளிடையே உள்ள ஒப்புமையே இதற்குக் காரணமாக விளங்குகின்றது. 1942ஆம் ஆண்டில் தாய்லாந்து

இளவரசர் தானிநிவாட் (Prince Dhanivat 1942:15-21) தென்னிந்தியாவிலிருந்து மயில் இராவணன் கதை தாய்லாந்தில் பரவியிருக்கும் எனும் கருத்தைத் தெரிவித்தார். எஸ். சிங்காரவேலு (1986) மயில் இராவணன் தொடர்பான விரிவான ஆராய்ச்சி செய்து தமிழ்நாட்டு மயில் இராவணன் கதைக்கும் தாய்லாந்து மயில் இராவணன் கதைக்கும் மிகுதியான ஒப்புமை இருக்கின்றது என 1984 ஆகஸ்டு திங்கள் தனது கருத்தை வெளியிட்டார்.

மயில் இராவணன் கதையில் மயில் இராவணன் இராமரை வல்லத்தமாகக் கடத்திச் சென்று கீழுலகத்தில் சிறையில் அடைத்து வைக்கின்றான். இராமரைக் கொலை செய்ய வேண்டும் என்பதே அவனுடைய நோக்கம். அனுமன் மயில் இராவணனைக் கொலை செய்துவிட்டு இராமரைக் காப்பாற்றுகின்றார்.

தமிழ்நாட்டு மயில் இராவணன் கதைக்கும், தாய்லாந்து மயில் இராவணன் கதைக்கும் இடையே பதினைந்து நிகழ்ச்சிக் கூறுகளில் ஒப்புமை இருப்பதைப் பார்க்கலாம்.

1. தமிழக மயில் இராவணனும் தாய் இராமாயண மயராப்பும் (Maiyarab) கீழுலக அரசர் எனக் கூறப்படுகின்றது.

2. தன்னுடைய மருமான் கீழுலகத்தின் அரசனாகப் பதவியேற்பான் என வருவதுரைப்போர் கூறியதால் தன்னுடைய சகோதரியையும் அவளுடைய மகனையும், அதாவது அவன் மருமானையும் மயில் இராவணன் சிறையில் அடைக்கின்றான்.

3. இராமரை வல்லத்தமாகக் கடத்திச் செல்ல மயில் இராவணன் முயன்றபொழுது அனுமன் தன்னை ஓர் பேருருவம் படைத்த படையரணாக மாற்றிக்கொண்டு இராமரை நன்கு மறைத்து வைத்தார். அனுமனின் வாய் பேருருவம் படைத்த படையரணாக மாறியது. மேலும் தனது வாலை வட்டமாக மாற்றி அவ்வெல்லா இடத்தையும் சுற்றி வைத்தார்.

4. இராமரை வல்லத்தமாக மயில் இராவணன் கடத்திச் சென்ற பிறகு ஓர் தாமரைக் காம்பின் உள்துளை மூலம் அனுமன் கீழுலகத்திற்குச் சென்றார்.

5. மயில் இராவணன் அரண்மனைக்குள் நுழைவதற்குமுன் மிகவும் சக்திவாய்ந்த மச்சானு (மச்ச கருப்பன் எனத்

தமிழில் கூறுகிறோம்) எனும் போர் வீரனோடு அனுமன் சண்டை போடுகின்றார். பிறகு, அவன் தன்னுடைய மகன், மீனிலிருந்து பிறந்தவன், மயில் இராவணனுடைய பணியாள் என அறிந்து கொள்கிறார்.

6. தன்னுடைய தலைவரான மயில் இராவணனைக் காட்டிக் கொடுக்கமாட்டேன், நட்புக்கேடு செய்யமாட்டேன் என மச்சானு கூறுகின்றான்.

7. மயில் இராவணன் தண்ணீர் எடுத்துக் கொண்டுவரச் சொல்லி அனுப்பிய அவனுடைய சகோதரியை அனுமன் ஒரு குளத்தின் அருகே சந்திக்கின்றார்.

8. தண்ணீர் எடுத்துவர வந்த அவளுக்கு அவள் மகனைக் கீழுலகத்தின் மன்னனாக முடிசூட்டிவிடுவதாக அனுமன் நம்பிக்கை அளிக்கின்றார்.

9. மயில் இராவணன் சகோதரி அனுமனுக்கு உதவி செய்கின்றாள். அனுமனை ஒளித்து வைத்து இரகசியமாக உள்ளே அனுப்புகின்றாள். (தாய் இராமாயணத்தில் தாமரை நூலிழை அமைப்பாக மாற்றி அனுப்புகின்றாள். தமிழ் இராமாயணத்தில் தண்ணீர்க் குடத்தை மூடியிருக்கும் மாவிலைகளுக்குள் வண்டாக மாறி ஒளிந்துகொண்டு அனுமன் செல்கின்றார்.)

10. மயில் இராவணனின் மாளிகை கதவு அருகே அயல் நாட்டுப் பொருள்கள் உள்ளே நுழையக் கூடாது எனும் நோக்கத்துடன் மயில் இராவணனின் தங்கை தராசுத் தட்டில் நிறுத்தி வைக்கப்பட்டு எடைபோட்டபொழுது அனுமானின் கனத்தைத் தாங்காமல் தராசு உடைகிறது.

11. இராமரை மயில் இராவணனிடமிருந்து காப்பாற்றிய பிறகு இராமருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக அவரைத் தொலைவில் உள்ள மலைக்கு எடுத்துச்சென்று கடவுள்களின் பொறுப்பில் அனுமன் ஒப்படைக்கிறார் எனத் தாய் இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. பூமாதேவியின் பொறுப்பில் ஒப்படைக்கப்படுகிறார் எனத் தமிழ் இராமாயணத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

12. மயில் இராவணனின் உயிர் வண்டுக்குள் இருக்கிறது. அந்த வண்டை நசுக்கி கொலை செய்தால்தான் மயில் இராவணனைக் கொலை செய்ய முடியும்; இல்லாவிட்டால் மயில் இராவணனைக் கொல்ல முடியாது. தமிழ்

இராமாயணத்தில் ஐந்து வண்டுகளிடம் மயில் இராவண னின் உயிர் மறைந்து இருப்பதாகக் கூறப்பட்டிருக் கின்றது.

13. மயில் இராவணனுடைய மருமகன் கீழுலகத்தின் மன்ன னாக முடிசூட்டப்படுகின்றான். அவனுக்கு அடுத்த பிரதிநிதியாக மச்சானு நியமிக்கப்படுகிறான்.

14. பிறகு அனுமன் கடவுள் பாதுகாப்புடன் இராமரை மறைத்து வைத்து இருந்த மலைக்குச் சென்று இராமரை அழைத்து வருகின்றார்.

15. இராமர் தன்னை மயில் இராவணனிடமிருந்து காப் பாற்றியதற்காக அனுமனுக்கு மிக்க நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறார்.

இவ்வளவு ஒற்றுமைகள் இருக்கும்போதிலும் தாய் இராமா யணத்திலும், தமிழ் இராமாயணத்திலும் ஒரே விதமாக மயில் இராவணனின் கதை கூறப்பட்டிருக்கின்றது என நினைக்க வேண்டாம். எடுத்துக்காட்டாக, தாய் இராமாயணத்தில் மயில் இராவணனின் கொடிய திட்டத்தை செயல்படுத்த வேண்டாம் என மயில் இராவணனின் தாயார் தடுக்கின்றாள். ஆனால் தமிழ் இராமாயணத்தில் மயில் இராவணனின் வாழ்க்கைத் துணைவி தடுக்கின்றாள். தாய் இராமாயணத்தில் தான் கண்ட கனவு தொடர்பான விளக்கங்களைச் சோதிடர்கள் மூலம் மயில் இராவணன் அறிந்துகொண்டு தன்னுடைய மருமகன் கீழுலகத்தின் அரசனாகப்பதவி ஏற்பான் என அஞ்சுகிறான். ஆனால் தமிழ் இராமாயணத்தில் இச்செய்தி மயில் இராவண னுக்கு ஆகாயத்தில் தோன்றிய குரலோசை மூலம் தெரிகின்றது.

தாய் இராமாயணத்தில் இராமர் மட்டும்தான் மயில் இராவணனால் கடத்தப்படுகின்றார். தமிழ் இராமாயணத்தில் இராமர், இலக்குமணர் இருவரும் கடத்தப்படுகின்றனர். தாய் இராமாயணத்தில் இராமரையும், தனது மருமானையும் ஒரு மாயவித்தைச் சடங்கின்போது கொதிக்கவைத்துச் சாகடிக்க வேண்டும் என மயில் இராவணன் திட்டமிடுகின்றான். ஆனால் தமிழ் இராமாயணத்தில் காளிக்குப் பலியிட வேண்டும் எனும் நோக்கத்துடன் இராமரை மயில் இராவணன் கடத்திச் செல் கின்றான். மயில் இராவணன் கதையில் வரும் பெயர்களிலும் வேறுபாடுகள் இருக்கின்றன. மயிராப் என மயில் இராவணனைத் தாய் இராமாயணம் அழைக்கின்றது. தாய் இராமாயணத்தில் மயில் இராவணனின் சகோதரியின் பெயர் பீராகுவான்,

அவளுடைய மகன் பெயர் வையாவிக், தமிழ் இராமாயணத்தில் இவர்களைத் துராந்திகை, நீலமேகன் என முறையே அழைக் கின்றனர்.

வங்காள இராமாயணத்திலும் மயில் இராவணன் கதை வருகின்றது. ஆனால் வங்காள இராமாயண மயில் இராவணன் கதையைவிட, தமிழ் இராமாயண மயில் இராவணனின் கதை யைத் தாய் மயில் இராவணனின் கதை மிகுதியாகத் தழுவியிருக் கின்றது. எனச் சிங்காரவேலு கருதுகிறார். ஒற்றுமையுள்ள இத் தாய், தமிழ் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள மயில் இராவண னின் கதை நிகழ்ச்சிகளில் பல அழகான சுவர் சித்திரங்களாக வரையபட்டிருப்பதைப் பாங்காக்கில் உள்ள எமரால்ட் புத்தர் கோவிலில் காணலாம். இப்புத்தர்கோவிலில் இராமாயணக் காட் சிக்குரிய ஓவியங்கள் யாவும் சுவர்ச்சித்திரங்களாக வரையப் பட்டிருக்கின்றன.

மேலும் பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த லோபபுரிக் கோயில் சுவர்களில் இராமாயணச் சிற்பங்கள் அடுக்கடுக்காகச் செதுக்கப்பட்டுள்ளன. 'பிமாய்' எனும் பௌத்தக் கோவிலின் வடகிழக்குப் பகுதியில் நேர்த்திமிகு இராமாயணச் சிற்பங்கள் மேல்தட்டிலும் கீழ்த்தட்டிலும் மாறிமாறிச் செதுக்கப்பட்டு உள்ளன. அவற்றுள் அனுமன் சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து நாகப்பாசத்தால் கட்டுண்ட இலக்குமன் முதலியோரை எழுப்பும் காட்சி, குரங்குகள் சேது அணையைக் கட்டும் காட்சி, சூர்ப்பணகையின் மூக்கு அரியப்படும் காட்சி, கிழக்கு வாயிலின் போதகத்தில் உள்ள வாலிவதம் காட்சி, ஆகியவற்றை ஒப்பற்ற னவாகக் கருதுகின்றனர்.

இராமாயணக் கதை 'இராமாகீயான்' எனும் பெயரில் காப்பியமாகவும் இதிகாசமாகவும் தாய்லாந்தில் தலைசிறந்து விளங்குகிறது. 'இராமனின் கீர்த்தி' எனும் பெயரே திரிந்து தாய்மொழியில் 'இராமாகீயான்' என்னும் பெயரில் வழங்கு கிறது. காப்பியங்களாகவும், சிறுகாப்பியங்களாகவும், நாடக மாகவும், கதைப்பாடலாகவும், இசைப்பாடலாகவும், நாட்டுப் புறப் பாடலாகவும் இராமாயணக் கதை தாய்மொழியில் பல வடிவங்களில் வழங்கிவருகின்றது. இவ்வடிவங்களிலெல்லாம் தமிழ் இராமாயணக் கதைகளின் தாக்கத்தை இன்றும் நாம் பார்க்கலாம். ஆகையால் தமிழ் இராமாயணம் மூலமாகவும் தமிழ்மொழிச் சொற்கள், தமிழ்ப்பண்பாடு, தமிழ் இராமாயண

கிளைக்கதைகள் முதலியவை சோழர்கள் காலத்திலேயே தாய்லாந்திற்குச் சென்றிருக்கின்றன என ஓரளவு தெளிவாகத் தெரிகின்றது.

## திருவெம்பாவை, திருப்பாவை பரவின

திருவெம்பாவை, திருப்பாவை தமிழகத்திலிருந்து தாய்லாந்திற்குச் சோழர்கள் காலத்தில் பரவியதற்குச் சான்றுகள் உள்ளன. தாய்லாந்து நாட்டு மன்னர் இராமகாம் ஹெங்கின் (கி.பி. 1285-1317) மனைவி நாங்நோபோமாஸ் பிராமணக் குலத்தைச் சேர்ந்தவர். திருவெம்பாவை, திருப்பாவைத் தொடர்பான கீழ்க்காணும் செய்தி நாங்நோபோமாஸ் விட்டுச் சென்றிருக்கும் வரலாற்றுக் குறிப்பேடுகளில் அளிக்கப்பட்டிருக்கின்றது: ''திருவெம்பாவை திருப்பாவைத் திருவிழா இங்கு (தாய்லாந்தில்) டிசம்பர் கடைசி வாரத்திலும், சனவரி முதல் வாரத்திலும் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவின் பொழுது எல்லா மக்களும் அரசு கோவில் முன் கூடுகின்றனர். நன்கு ஆடை அலங்காரம் செய்து கொண்டுப் பெண்கள் மன்னர் பின் செல்வார்கள். பிராமணர்கள் ஈஸ்வரன், நாராயணன் உருவச்சிலைகளை எடுத்துக் கொண்டு ஊர்வலமாக வருவதை எல்லோரும் பார்க்கின்றனர். இரவில் இவ்வூர்வலம் நடக்கின்றது. மகிழ்ச்சியோடு எல்லோரும் இவ்விழாவில் பங்கேற்கின்றனர்.''

பொதுவாக இத்திருவிழாவில் தாய்லாந்து நாட்டு அரசன் தலைமையேற்பான். அவன் முன்னிலையில் இத்திருவிழா நடைபெறும். அந்த அரசனைத் திருவருள் புரியுமாறு வேண்டிக் கொள்வர். அவனையன்றி வேறுயாரையும் அரசனாக ஏற்றுக் கொள்வதில்லை எனும் சூளுரைத்து, அவனைப் போற்றி வழிபடுவர். இதற்கு ஏற்றபடி கண்ணனை வழிபடும் ஆடல் மகளிரின் ''அவனையன்றி வேறு எவருக்கும் வாழ்க்கைப்படோம்'' எனும் உறுதிப்பாட்டை எடுத்துரைக்கும் ஆண்டாளின் திருப்பாவைப் பாசுரங்களைப் பாடுவர். இவ்வகையில் திருப்பாவை, தாய்களின் பழைய வழக்கமாய் அமைந்து அவர்களை வாழ்வித்தது. இன்றும் இவ்விழா தொடர்ந்து நடக்கின்றது.

மார்கழி நோன்பு, திருவெம்பாவை, திருப்பாவைத் திருவிழா தென்கிழக்காசியாவிற்குச் சோழர் காலத்தில் சென்றிருக்க வேண்டும். நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமய உணர்வு கொண்டு பாடிய பக்திப் பனுவல்கள் சோழர்கள் காலத்தில்தான்

தொகுக்கப்பட்டன. சைவத்திருமுறைகளை நம்பியாண்டார் நம்பியும், வைணவப் பிரபந்தங்களை நாதமுனிகளும் தொகுத்து அளித்தனர். மேலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில்தான் வேதத்துடன் தேவாரம் போன்ற திருப்பதிகங்கள் தமிழ்க் கோவில்களில் ஓதப்பட்டன எனக் கல்வெட்டுச் சான்று கள் எடுத்துக்காட்டுகின்றன என நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடு கின்றார். ஆழ்வார்களின் தமிழ்ப் பாடல்கள் வைணவ கோவில் களில் நாதமுனிகள் காலத்திற்குப் பிறகு வேதங்கள் ஓதப்பட்ட வுடன் பாடப்பட்டன. திருவிழா ஊர்வலங்களிலும் இத்தமிழ்ப் பாடல்கள் ஓதப்பட்டன என வரதாச்சாரி கூறுகின்றார். ஆகையால் சோழர் காலத்தில்தான் கோவில்களில் தமிழ்ப் பாடல்கள் ஓதும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இம் முறை தாய்லாந்து போன்ற தென்கிழக்காசிய நாடுகளுக்கும் பரவியது.

இன்றும் திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்கள் வழக்கில் உள்ளன. ஆனால் இத்தமிழ்மொழி மந்திரங்களைத் தாய்மொழி எழுத்துக்களில் எழுதி வைத்துக் கொண்டு, தாய் பிராமணர்கள் பாராயணம் செய்து வருகின்றனர். தமிழில் எழுதப்பட்ட மந்திரங்கள், எடுத்துக்காட்டாகக் கடைதிறப்பு மந்திரம் அடங்கிய ஏடுகள், பேங்காக் தேசிய நூலகத்தில் போற் றிக் காக்கப்பட்டு வருகின்றன. தாய் பிராமணர்களும் ஏடுகள் வைத்துக்கொண்டிருக்கின்றனர். தாய் பிராமணர் கோவிலில் வாழும் பிராமணர்கள் இவ்வேடுகளை எனக்குக் காண்பித்தனர். அவையாவும் சமஸ்கிருதத்தைத் தமிழ் நாட்டில் எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருக் கின்றன. அந்த எழுத்துக்களின் வடிவிலே சில மாற்றங்களும் திரிபுகளும் உண்டாகியுள்ளன. தாய் பிராமணர் பலர் இக்கிரந்த எழுத்தையும் படிக்கத்தெரியாது எனக் கூறினர்.

முதன்முதலாகக் குவாரிட்ச் வேல்ஸ் எனும் அறிஞர் இவ்வேடு களைப் பற்றி 1931 ஆம் ஆண்டு எடுத்துரைத்தார். இங்கு இருக்கும் 'அவை' பிராமணர்களுக்குச் சியாம் மொழி மட்டும் தான் தெரியும். சமஸ்கிருதம் புரியாது. இந்திய எழுத்து வடிவங் களில் எழுதப்பட்டிருக்கும் கலப்படச் சமஸ்கிருத ஏடுகளில் எழுதி யிருப்பதைச் சிலர் படிக்கின்றனர். அதில் தமிழிலே எழுதிய செய்யுள் ஒன்று இருக்கின்றது. ஆனால் தமிழும் இவர்களுக்குத் தெரியாது. இந்திய எழுத்துத் தொகுதியில் எழுதப்பட்டிருக்கும் தமிழ் மந்திரம் கைலாசக் கடைத்திறப்பு மந்திரமாகும்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு நாட்டு இந்தியவியல் நிறுவனத்தின் தலைவரான பிலியோசா தலைமையின்கீழ் அந்த ஏட்டுச் சுவடிகள் யாவும் ஆராயப்பட்டன. தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரும், ஜான்மார் எனும் தமிழ் தெரிந்த அறிஞரும் இத்தாய் ஓலைச்சுவடிகளைப் பற்றி விளக்கம் அளித்துள்ளனர். அண்மைக் காலத்தில் நடைபெற்ற ஆராய்ச்சி அவற்றின் மீது ஒளியைப் பாய்ச்சியுள்ளது. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ள ஓலைகளில் பெரும்பாலான வற்றில் வேதச்சார்பான மந்திரங்களும், வேதச் சார்பற்ற தாந்திரிக மந்திரங்களும் எழுதப்பட்டுள்ளன. மற்றும் தமிழ் மொழியிலுள்ள தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் போன்ற புனித நூல்களில் இருந்தும் பல பதிகங்களும், பல பாசுரங்களும் அவற்றில் இடம் பெற்றுள்ளமை கண்டறியப் பட்டது.

திருப்பாவை, திருவெம்பாவை திருவிழாவின்போதும், அரசு பட்டமேற்பு முதலிய சடங்குகளின்போதும் வழங்கிய மந்திரங்கள் ஓலைச்சுவடியில் எழுதப்பட்டிருக்கின்றன இந்தச் சுவடிகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மைக்ரோ பிலிம் (Micro film) செய்து வாங்கி வைத்திருக்கிறது. 4:8 பக்கமுள்ளதில் ஏறக் குறைய 53 பக்க அளவு தமிழ்ப் பாடலாக இருக்கக் காண்கிறோம். சுவடியில் அரைக்கால் பகுதி தமிழ் மந்திரங்கள். பிற மந்திரங்கள் பல முறை திருப்பித் திருப்பி எழுதப் பெறுவதைக் காண்பதால் தமிழ் மந்திரங்களே பெரும்பான்மை இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன எனலாம்.

இங்கே உள்ள சுவடியில் திருவெம்பாவை வருகிறது. இருந்தாலும் இதன் முதல் இரண்டு பாடல்கள் எழுதிய ஓலை தவறிப் போய் உள்ளது. ''முத்தன்ன வெண்நகையாய்'' என்ற மூன்றாவது பாடலின் முதல் வரியும் காணவில்லை. பிறபகுதிகள் எல்லாம் உள்ளன. இடையே ''பூஜாமுறை'' என்ற ஒரு வரி வருகிறது. இந்தப் பாடல்கள் எல்லாம் பூஜையில் வரும் மந்திரங்களாகக் கருதப்பட்டன என்பது தெளிவு.

திருவெம்பாவை முடிந்தவுடன் திருப்பாவை தொடங்குகிறது. அதற்குமுன் ''விஷ்ணு முறை சடகோப ஸ்ரீநாராயணன்'' என்ற வரி காணப்படுகின்றது. திருமாலின் பெயர்களைச் சொல்லியபின் 'அன்னவயல் புதுவை' என்ற தனியன் வருகிறது. ஆனால் எந்தத் தனியனையும், தொடர்ந்து முழுவதும் எழுதவில்லை. 'இன்னிசையில் பாடி' என்றதன் பின் 'நாராயணனே நமக்கே

பறை தருவான் பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்' என்ற வரிகள் வந்தபின் தனியனின் உள்ள மற்றப் பகுதி வந்து முடிகிறது. அதன் பின்னர் ''மார்கழித் திங்கள்'' என்ற திருப்பாவையின் முதற்பாட்டு துவங்குகிறது. இந்த முதற் பாட்டை எழுதும்போதும் ''நாயகப் பெண்பிள்ளையாய்'' நாராயணன் மூர்த்தி என்று பின்னே வருகின்ற பாடலின் பகுதியும், ''தேவாதி தேவனைச்சென்று நாம் சேவித்தால்'' என வரும் மற்றொரு பாடலின்பகுதியும் இடையிட்டுக் குழப்புகின் றன. முதற்பாவைப் பாட்டுக்குப் பின்னர் ''போற்றி போற்றி'' எனமுடிகிற சில விளங்காத பகுதிகள் வருகின்றன. இவற்றின்பின் ''நாராயணனே நமக்கே பறை தருவான், பாரோர் புகழப் படிந்து ஏலோர் எம்பாவாய்'' என்ற அடிகள் எழுதப்பட்டு உள்ளன. இப்படியே இனங்கண்டு அறியமுடியாத பகுதிகளின் பின் மறுபடியும் ''நாராயணனே'' என்ற பகுதி வருகிறது. பின்னர்த் 'திருச்சிற்றம்பலம்' என்பது பொருத்தமின்றி நுழை கின்றது. பின்னர் வடமொழிச் சொற்கள் இனங்காண முடியாத படி வந்தபின் ''நாராயணனே'' எனவரும் இரண்டு அடிகளும் இருமுறை வரக் காண்கிறோம்.

இதிலிருந்து என்ன தெரிகின்றது? திருவெம்பாவை முழுவதும் இந்தச் சுவடி எழுதும் போது அந்நாட்டில் நன்றாகத் தெரிந் திருந்தது. ஆனால் திருப்பாவையோ முதல் பாட்டன்றிப் பிற பாடல்கள் மறந்துபோய் விட்டிருத்தல் வேண்டும். எனவே வைணவப் பண்பாட்டின் செல்வாக்கு ஒரு காலத்துச் சிறந்தி ருந்ததும் இதனால் விளங்குகின்றது. அதேபோலத் திருப்பாவை யின் செல்வாக்கு சிறந்திருத்தலும் இதனால் விளங்குகின்றது.

திருப்பாவை மட்டுமன்றிப் பிற வைணவப்பாடல்களும் கீழைநாடுகளில் பரவின. மேலே கூறிய திருப்பாவையின் பின், முன்னரே குறிபிட்டபடி சில மந்திரங்கள் வந்தபின் 'பித்ப்ரது சிவில்லை' என வரும் வரியின் பின் நம்மாழ்வாரின் திருவாய் மொழியின் முதலில் வரும் ''திருவழுதி நாடெண்ணும்'' என்ற தனியனும் 'மனத்தாலும் வாயாலும்' என்ற தனியனும் வரு கின்றன. அதன் பின் 'உயர்வற உயர்நலம் உடையவன்' என்ற பதிகம் வருகிறது. பல பகுதிகள் குறைந்தும் பிறழ்ந்தும் வரக் காண்கிறோம். 'திருவாய்மொழி' என இப்பகுதி முடிகிறது.

அடுத்துத் தேவாரப் பகுதிகள் வருகின்றன. மேலே கண்ட அகராதிப்படி பல மந்திரங்கள் வந்தபின் 'மட்டிட்ட புனையுங் கானல்' என்ற பூம்பாவைப் பதிகம் வருகின்றது. இங்கும் சிற்சில

பகுதிகள் குறைந்தும் பிறழ்ந்தும் வந்தாலும் பதிகத்தின் பெருமை இங்கு இருக்கக் காண்கிறோம். இதன் பின்னே ''தோடுடைய செவியன்'' என்ற பதிகம் தொடங்குகிறது. இங்கேயும் சில பாடல்கள் முன்னும் பின்னும் பிறழ்ந்து வருகின்றன. இந்தப் பதிகத்தின் பின் ''பித்தா பிறைசூடி'' என்ற சுந்தரர் பாடிய முதற்பதிகம் வரக் காண்கிறோம். இங்கேயும் பாடல்கள் பிறழ்ந்து உள்ளன. சில பாடல்கள் திரும்பத் திரும்ப வருகின்றன.

இதன்பின் ''பித்பிர: தூக்ரைலாத்'' என்ற வரி வருகிறது. ''கிரைலாத்'' என்பதைக் ''கைலாஸ்'' எனக் குவாரிட்சி வேல்ஸ் குறிப்பிட்டுக் ''கைலாயம் (அல்லது) கோயிலைத் திறப்பது'' என்ற பொருளும் எழுதியுள்ளார். இந்த வரியின் பின் திருநாவுக்கரசர் பாடிய ''கூற்றாயினவாறு'' என்ற பதிகம் வருகிறது. சில சொற்கள் விடுபட்டிருந்தாலும் பாக்கள் முறையே பதிகத்தில் உள்ளபடியே வந்துள்ளன. தேவாரப் பதிகங்கள் ஒவ்வொன்றும் 'திருச்சிற்றம்பலம்' என்றே முடிகின்றன.

சில மந்திரங்கள் வந்தபின் ''மத்தினை'' என்ற ஏதோ ஒரு தமிழ்ப்பாடல் தொடங்குகின்றது. ''எம்பாவாய் எம்பாவாய்'' என இரண்டு சொற்கள் தெரிகின்றன. மற்றபடி ஒன்றும் விளங்கவில்லை ட்றுபடியும் தேவாரத்தின் முதற்பதிகங்கள் மூன்றும் வருகின்றன. ஆனால் இந்த முறை ''கூற்றாயினவாறு'' முதலும் ''தோடுடைய செவியன்'' இரண்டாவதும் 'பித்தா பிறை சூடி' மூன்றாவதுமாக வரிசைப்படுத்தியிருக்கக் காண்கிறோம். இந்த மந்திரச் சுவடியின் எழுத்துக்களின் வடிவைக் கொண்டு அந்தச் சுவடி 12 ஆம் நூற்றாண்டினதாக இருக்கலாம் என்று கூறலாம். சம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும், சுந்தரருக்கும் மாணிக்க வாசகருக்கும் பின்னேதான் அந்தப் பாடல்கள் கீழைக்கடல் நாட்டுக்குச் சென்றிருக்கக் கூடும். ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்னர் போயிருக்க முடியாது. இந்தப் பாடல்கள் மட்டுமன்றிச் சிறப்பாகத் திருப்பாவை, திருவாய்மொழி இவற்றின் தனியன்களும் அங்குச் சென்றிருக்கக் காண்கிறோம். இவை இராமானுசர் காலத்தில் தனியன்களாக ஆழ்வார்களின் பாடல்களுக்கு முன் பாடப் பெறும் வழக்கத்தை நிலை நாட்டியிருத்தல் வேண்டும். எனவே 11 ஆம் நூற்றாண்டு என்று அந்த மந்திர சுவடி கால வரையறை பெறுவது பொருத்தமே எனலாம்.

தாய்மொழியின் பழைய எழுத்துக்களும் அங்கங்கே சுவடியில் வருகின்றன. நாங்நோமாஸ் விட்டுச் சென்ற ஏடுகளும் 13 ஆம் நூற்றாண்டில் திருவெம்பாவை, திருப்பாவை விழா தாய்லாந்தில்

கொண்டாடப்பட்டது எனக் கூறுவதால், சோழர் காலத்தில் தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் தாய்லாந்திற்குச் சென்றது என உறுதியாகக் கூறலாம். இன்றும் தை மாதத் திருவிழாவாகத் திருவெம்பாவை, திருப்பாவை ஓதப்படுகிறது. இவை பழந்தமிழ்ப் பாடல்களாகத் தாய்லாந்து இசை வடிவுடன் ஒலிக்கப்பட்டு வருகின்றன. மேலும் திருப்பாவை, திருவெம்பாவை எனும் பெயர்கள் தாய்மொழியில் ''த்ரீயம்பவாய்'' எனவும் 'திரிபவாய்' எனவும் திரிந்து வழங்கப்படுகின்றன. ''லொரிபவாய்'' எனச் சுருக்கத் திரிபும் வழங்குகிறது. 'திரு' என்றும் அடை 'திரி' எனத் திரிந்தும் ''பாவாய்'' என்பது 'பவாய்' எனச் சிதைந்தும் வழங்கி வருகின்றன.

ஆண்டு தோறும் இன்று திருவெம்பாவை—திருப்பாவை விழாவின் போது தாய் பிராமணர்கள் பல குழுக்களாக அமர்ந்து வேத மந்திரம் ஓதுவதைப்போலத் திருவெம்பாவை திருப்பாவைப் பாடல்களை ஓதுகின்றனர். அவர்களுடைய தலைமை குரு முதலில் அடியெடுத்துக் கொடுப்பார். அதையொட்டிக் குழுக்களாக அமர்ந்துள்ளவர்கள் தொடர்ந்து ஓதுவார்கள். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ''லோராவாய்'' எனும் தொடர் நீட்டி ஒலிக்கப்படும். ''ஆடேல் ஓர் எம்பாவாய்'' எனத் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்களில் முடியும் தொடரையே அத்தாய் பிராமணர்கள் ''லோராவாய்'' எனத் திரித்து உச்சரிக்கின்றனர் எனத் தோன்றுகிறது.

## தமிழ்ப் பாடல்களும் முடிசூட்டு விழாவும்

தாய்லாந்து மன்னர்களின் முடிசூட்டு விழாவின்போது தாய் பிராமண அர்ச்சகர்கள் தமிழ்ப் பாடல்களானத் திருவெம்பாவை, திருப்பாவைகளை ஓதுவார்கள். பிராமணர்களும் புத்தத் துறவிகளும் தூய திருவாழ்த்துக்களைக் கூறுவார்கள். இந்துக் கடவுள்களின் ஆசியைப் பெறுவதற்காகப் பிராமணச் சடங்குகள் செய்யப்படும். பிராமணர்கள் பக்திப் பாடல்களைப் பாடி, சிவன், விஷ்ணு அரசனுடைய உடம்பில் ஊடுருவிப் பாய வேண்டும் என வேண்டி அரசனைத் தூய்மையாக்கி முடிசூட்டுவார்கள். பிறகு ஓம்கார என்று அழைக்கப்படும் பிராமணர்களின் தலைவர் அரசனுக்கு முடிசூட்டு விழாவில் பயன்படுத்தப் பெறும் அரசுரிமைச் சின்னங்களைக் கொடுப்பார். (மகுடம், வாள், தங்கச்செருப்பு, விசிறி, செங்கோல், சிவனடியார் பயன்படுத்தும் அரைக்கச்சை, விஷ்ணு சக்கரப்படை Discus) அடுத்தபடியாக மக்கள் சார்பில் இவற்றைப் பிராமணத் தலைவர் ஒப்புக் கொள்ளுதல், இறுதியில்

சிம்மாசனம் இருக்கும். பிறகு அரண்மனையிலுள்ள நீண்ட அறையில் வழக்கமான நேர்காணல் மன்னரால் அளிக்கப்படும். பட்டமேற்பதற்குப் போகும்போது பிராமணத் தலைவர் யானை மேல் ஏறிச் செல்வார்.

இச்சடங்குகளில் முக்கியமானது பிரா மஹாராஜ குரு என அழைக்கப்படும் பிராமணத் தலைவர் சிவ, விஷ்ணு கடவுள்கள் மன்னரின் உடலில் ஊடுருவிப் பாய வேண்டும் என்று பக்திப் பாடல்களைப் பாடி இக்கடவுள்களை அழைக்கும் சடங்கே ஆகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 9 ஆம் நூற்றாண்டு வரையிலான சிவனடியார்கள் பாடிய தேவாரமும், வைணவப் பெரியார்கள் தோற்றுவித்த திவ்ய பிரபந்தமும் பயன் படுத்துவார்கள். சிவ, விஷ்ணுவைப் புகழ்ந்து பாடும் இப்பாசுரங் களை இச்சடங்கின்போது பயன்படுத்துவது சரியே என்று கூறலாம். இப்பாசுரங்கள் தாய்லாந்து அரசர்கள் தெய்வத் தன்மை வாய்ந்தவர்கள், தேவராஜர்கள் என்னும் கோட் பாட்டை வலியுறுத்தின.

பொதுவாகப் பட்டமேற்பின்போது பிராமணர் முன்னே போக அரசர் பின்னே செல்வர். எட்டுக் கோணமான அரசு கட்டிலில் அரசர் அமர்வார். பாலிமொழியில் அவர் கூற்றை ஏற்று, நாட்டையும் மக்களையும், பௌத்த மதத்தையும் காக்க அரசேற்பதாக உறுதி கூறுவார். அங்கிருந்து அரசு சின்னங் களோடு பட்டமேற்கச் செல்வார். பத்திரபீட அரசு கட்டிலில் அரசர் அமர்வார். அப்பொழுது ஏழடுக்குகுடையே மேலிருக்கும். பட்டமேற்றவுடன் ஒன்பதடுக்குக் குடை அங்கே வைக்கப்பெறும். அரசர் முழு இறைமையைப் பெற்றார் என்பதற்கு அது அடை யாளமாகும். சிவனாரை வழிபடும் அரசகுரு அரசர் எதிரே வணங்கிய பின் சயாம் (தாய்) மொழியில் 'கைலாசக் கடை திறப்பு' (கயிலாசத்தின் திருக்கதவுகள் திறக்கட்டும்) என்று வழங்கும் தமிழ் மந்திரத்தை ஓதுவார். அப்போது அரசகுரு, திருநாவுக்கரசர் தேவாரத்திலிருந்து "கூற்றாயினவாறு" எனத் தொடங்கும் பாடலைப் பாடுவார். பின்னர் மாணிக்கவாசகரின் திருவெம்பாவைப் பாடல்களுள் "ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி" "பாலும் பரஞ்சோதிக்கு என்பாய்" என்னும் முதலிரண்டு பாடல்களும் அவரால் ஓதப்பெறும். பிறகு அரசருடைய பட்டங்களை எழுதிய பொன் ஏட்டை அரசர் கையில் தந்து பாலி மொழியில் அரசேற்க வேண்டிக் கொள்வர். "அப்படியே ஆக" என்று அரசரும் பாலிமொழியில் விடை தருவார். பாலிமொழியில் கூறியதைச் சயாம் மொழியில்

மறுபடியும் இருவர் கூறுவர். அரசகுரு வெற்றி முடியை, அதனை எடுத்து வந்தவர் கையினின்றும் வாங்கி அரசர் கையில் தருவார். அரசர் தாமே முடியை அணிந்து கொள்வார். தமிழ்நாட்டில் பிராமண அரசகுரு முடியை அரசர் தலைமேல் வைப்பது வழக்கம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அரசகுரு பின் அரசச் சின்னங்களை ஒவ்வொன்றாகத் தருவார். திருமால் கோயில் பிராமணர் ஒன்பதடுக்குக் குடையைத் தருவார். அவரும் அரசகுரு போலப் பாலியிலும் சயாம் மொழியிலும் பேசுவார். முடிவில் சிவன்கோயில் அரசகுரு மண்டியிட்டு வாழ்த்துவார்.

''கைலைக் கடை திறப்புப் பாடுவது சிவனாரை வழிபடுவதற்காக அழைப்பதாகும். பட்டமேற்பின்போது அதனைப் பாடுவது அரசரைச் சிவனாக கொள்வதற்குரிய அறிகுறியாகும். அரசர் பட்டங்களில் ''திவ்யதேவாவதாரம்'' என்பதும் ஒன்று. இங்கே தமிழ்ப்பாட்டு ஒன்றை மந்திரம் என்று பாராட்டுவதைக் குறிப்பிட வேண்டும். சிவன் கோயில் பிராமணருக்கு முதலிடம் அமைத்ததையும் மறந்து விடுதலாகாது. முற்காலத்தில் சைவமும் வைணவமும் நாட்டில் தலைமை பூண்டதையும் அப்போது தமிழுக்கு இருந்த மந்திரச் சிறப்பையும் இவை கொண்டு உய்த்துணரலாம்'' (தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்)

## சிவவழிபாடு : தமிழ்நாட்டின் தாக்கம்

திருவெம்பாவை தாய்லாந்திற்குச் செல்வதற்கு முன்பே தமிழ்நாட்டிலிருந்து சிவ வழிபாடு தாய்லாந்திற்குச் சென்றது எனக் கூறும் சான்றுகள் உள்ளன. கிறித்துக்குப்பிறகு தொடக்க காலத்திலேயே சிவ வழிபாடு தாய்லாந்தில் இருந்திருக்கலாம் என ஸ்டான்லி ஓ. கான்னர் எனும் அறிஞர் குறிப்பிடுகின்றார். இப்பகுதிகளில் கி.பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டு காலத்திலேயே சிவ வழிபாடு இருந்தது என மாலரெட் (Mallaret) எனும் அறிஞர் கூறுகின்றார். இச்சிவ வழிபாடு இந்தியாவின் எப்பகுதியிலிருந்து முதன்முதலாகத் தாய்லாந்திற்குச் சென்றது எனக் கூறும் தெளிவான சான்றுகள் கிடைக்கவில்லை. ஸ்டான்லி ஓ. கான்னர் வடஇந்திய குப்தர்கள் மூலம் தாய்லாந்திற்குச் சிவ வழிபாடு சென்றிருக்கலாம் என விளக்குகின்றார்.

ஆனால் தமிழ்நாட்டிலிருந்து தாய்லாந்திற்குச் சிவவழிபாடு முதன்முதலாகச் சென்றிருக்கலாம் எனும் தொடர்புச் சான்று

கள் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக இப்பகுதிகளில் முதன் முதலாகக் கிடைக்கும் சான்றுகள் எல்லாம் பல்லவ கிரந்த எழுத்து முறையைப் பயன்படுத்தியிருக்கின்றன எனப் பல்லவ மயம் கருத்தைப்பற்றி விவாதிக்கும்போது குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும் தொடக்க காலத்தில் பல நூற்றாண்டுகள் தாய்லாந்து கம்போடியாவின் ஓர் பகுதியாக இருந்ததால் கம்போடியா மூலம் தமிழ்நாட்டுச் சிவ வழிபாடு சென்றதற்குச் சான்றுகள் இருக்கின்றன. கம்போடியாவில் கி.பி. 624 ஆம் ஆண்டு பனாம் பாயங் (Phnom Bayang) கல்வெட்டுக் கிடைத்திருக்கின்றது. பல்லவகிரந்த மொழியில் எழுதியிருக்கும் இக்கல்வெட்டுதான் கம்போடியாவில் சிவவழிபாடு இருந்தது என எடுத்துக்கூறும் முதல் எழுத்துச் சான்று. கம்போடியாவிற்கு அருகில் உள்ள லாவோஸ் நாட்டிலும் சிவ வழிபாடு தொடர்பான முதல் எழுத்துச்சான்று கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் கம்போடிய மன்னர் பந்திரவர்மன் வெளியிட்ட கல்வெட்டாகும். இக்கல்வெட்டும் பல்லவ கிரந்த எழுத்து முறையைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருக்கின்றது.

தாய்லாந்தில் கம்போடிய அரசர்கள் ஆட்சிக் காலத்தில் தழைத்தோங்கிய மிகப்பெரிய சிவன்கோயில் பனம்ருங்சிவன் கோயிலாகும் (Phanomrung) கி. பி. பத்தாம் நூற்றாண்டில் இக்கோவில் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது. இக்கோவிலில் கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. இக்கோவிலின் முதல் கல்வெட்டு (Inscription Phanom rung No.1) கி. பி. ஏழு-எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பல்லவகிரந்த எழுத்து பயன்படுத்தி சமஸ்கிருத மொழியில் இக்கல்வெட்டு எழுதப்பட்டிருக்கின்றது. இக்கல்வெட்டு ஒரு சந்நியாசி அளித்த ஆலோசனையின்படி அளிக்கப்பட்ட நன்கொடையைப் பற்றிக் கூறுகின்றது.

மேலும் தாய்லாந்தில் உள்ள முதல் பதினேழு கல்வெட்டுகளில் ஒன்பதாம் கல்வெட்டு ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவகிரந்த எழுத்துமுறையைப் பயன்படுத்தி எழுதப்பட்ட சமஸ்கிருத கல்வெட்டாகும். இக்கல்வெட்டு மட்டும்தான் மறைமுகமாகச் சிவனைக் குறிப்பிடுகின்றது. சிவனைக் குறிப்பிடும் ஸ்ரீவித்யா திகார எனும் பெயரை இக்கல்வெட்டு, தொடக்கத்தில் கூறுகின்றது.

உமைக்கு மற்றொரு பெயர் மகிஷாசுரமர்த்தினி. அரக்கன் மகிஷாசுரனை அவள் வதம் செய்ததால் அவளுக்கு மகிஷாசுர மர்த்தினி எனும் பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டு

மகாபலிபுர கோவில் மண்டபங்களில் இரண்டாம் நரசிம்மவர்மன் கட்டிய மகிஷாசுரமர்த்தினியைப் பார்க்கலாம். அதேபோல வடகிழக்குத் தாய்லாந்தில் தம்பன்கோரட் எனுமிடத்திலுள்ள பிரசாத்ஹின் மூவாங் காயெக் (Prasat Hin Muang Khaek) எனும் இடத்தில் பல்லவர்கள் காலத்தில் புகழ் உச்சியில் இருந்த மகிஷாசுரமர்த்தனியின் சிலை 1959 ஆம் ஆண்டில் கிடைத்தது. சம்பாவின் சிற்பங்களிலும் மகிஷாசுரமர்த்தினி கோலத்தைக் காணலாம். மலேசியாவிலும் கி.பி. ஆறாம் அல்லது ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவன் கோவிலில் துர்க்கை, மகிஷா சுரமர்த்தினியின் சிலைகள் அணிசெய்கின்றன.

கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்கும் 8 ஆம் நூற்றாண்டுக்கும் இடையே காரைக்கால் அம்மையாரின் வழிபாடு தென்கிழக் காசிய நாடுகளில் வழக்கில் இருந்ததை ழான் பிலியோசா தக்க காரணங்கள் காட்டி நிலைநாட்டியுள்ளார். தமிழ்நாட்டுச் சைவ சமய நாயன்மார்களுள் காலத்தால் முந்தியவர் காரைக்கால் அம்மையார். தென்கிழக்காசிய நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த காரைக்கால் எனும் கடற்கரைப் பட்டினத்தில் தோன்றிய புனிதவதியார் எனும் இயற்பெய ருடையவராவர். நாயன்மார்களுள் சிறப்புமிகு பெண்பால் திருத் தொண்டராக இவரைப் போற்றுகிறோம். இவருடைய காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்பர்.

இப்பிறவியில் உயிருடன் இருக்கும் காலம் வரையிலும் என்றும் எப்பொழுதும் இறைவன் திருமுன்னர் இருந்து அவரு டைய திருக்கூத்தைக் கண்டு, மகிழ வரம் அளிக்குமாறு காரைக்கால் அம்மையார் வேண்டுகிறார்.

‘‘.........இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க’’
(பெரிய: 24:60)

அருள்புரி என்று வேண்டியுள்ளார்.

மேலும் திருவாலங்காட்டில் உள்ள சுடுகாட்டை வருணித்து அந்தச் சுடுகாட்டில் பெண்பேய் (காரைக்கால் பேய் அதாவது காரைக்கால் அம்மையார் என எடுத்துக் கொள்ளலாம்)ஒன்றின் கோலத்தையும் சிவபெருமானின் ஆடலையும் அம்மையார் ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல் கீழே அளிக்கப்பட்டிருக் கின்றது.

''கொங்கை திரங்கி, நரம்பெழுந்து குண்டுகண் வெண்பல் குழி வயிற்றுப்
பங்கிசிவந்து இரு பற்கள் நீண்டு பரடுயர் நீள் கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி, உளறுகாட்டில் தாழ்சடை, எட்டுத் திசையும் வீசி
அங்கம் குளிர்ந்து அனல் ஆடும் எங்கள் அப்பன் இடம் திரு ஆலங்காடே'' (மூத்த: 1:1)

மேலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற இவ்விரண்டுக் கருத்துக் களையும் விளக்கும் வண்ணம் கி. பி. ஆறு முதல் எட்டாம் நூற்றாண்டு இறுதிவரைச் செய்யப்பட்ட ஊர்த்துவ தாண்டவக் கோல நடராசரின் திருமுன்னர், ஒட்டிய வயிறும், புடைத்துக் கொண்டு காணப்படும் விலா எலும்புகளும், குழிவிழுந்த கண் களும் உடைய ஒரு பெண், இரு கைகளால் தாளம் போடும் கோலத்தில் (காரைக்கால் அம்மையார்தான் இப்பெண் உருவம்) செப்புச் சிலைகள் செய்யப்பட்டிருந்தன. திருக்கோயில் வழி-பாட்டில் இந்நிலையிலேயே கூத்தபிரானை வழிபாட்டுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் பல சான்றுகள் கிடைத்துள்ளன. தாய்லாந்து, கம்போடியா, இந்தோனேசியா போன்ற நாடு களில் உள்ள கோயில் சிற்பங்களுள் ஊழிக் கூத்தன் திருமேனியும், அதற்கு எதிரில் காரைக்கால் பேயின் சிலை கல்லிலும் செம்பிலும் செய்யப்பட்டு வழிபாட்டிற்கும், சிற்ப அலங்காரத்திற்கும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் முதன்முதல் வணங்கப்பெற்ற சைவ நாயன்மார் காரைக்கால் அம்மையாரே ஆவர். தனித்தநிலை யில் கையில் தாளத்தோடு பேயினைப்போல் புனிதவதியார் காட்சிதந்தவர். தம்மைக் ''காரைக்கால் பேய்'' என்றே சுட்டிக் கொண்ட அம்மையாரின் பெயரை எளிதில் மக்கள் மறந்தனர். இதனால் ''பேய்'' எனும் செல்லப் பெயரால் சுட்டுவதும் பேசுவதும் பெருவழக்காயிற்று. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு முதல் தமிழ்நாட்டின் கடல் வாணிகர்கள் ''காரைக்கால் பேயை''த் தங்கள் குலதெய்வமாகக் கருதிப் போற்றி வழிபட் டனர். அலைகடல்களைக் கடந்து, பிற நாடுகளோடு வாணிகம் செய்வதற்காகச் சென்ற பொழுது தங்கள் குலதெய்வமாகிய காரைக்கால் பேயின் சிலையையும் தங்களுடன் வணிகர்கள் எடுத்துச் சென்றுள்ளனர். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வாணிகத்தின் பொருட்டுச் சென்று குடியேறிய தமிழ்நாட்டு

வாணிகர்கள் தங்களுடன் காரைக்கால் பேயின் சிலைகளையும் எடுத்துச் சென்றனர் என்பதற்குரிய சான்றுகள் சில கிடைத்துள்ளன.

சம்பாவில் போங்குலே எனும் கோயிலில் பதினாறு கைகளை உடைய ஊழிக்கூத்தன் திருமுன்னர் காரைக்கால் அம்மையாரின் சிலை செதுக்கப்பட்டுள்ளது. கம்போடியாவில் சூரியவர்மனின் பண்டேய்ஸ்ரீ எனும் பதினோராம் நூற்றாண்டு கோயிலில் காரைக்கால் அம்மையாரோடு கூடிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் கற்சிலையும் செப்புச்சிலையும் காணப் படுகின்றன (திருநாவுக்கரசு : 1987:197-201).

வடகிழக்குத் தாய்லாந்தில் பீமாய் (Pimay) எனும் இடத்தில் ஊழிக் கூத்தன் திருமுன்னர் காரைக்கால் அம்மையாரின் சிலை செதுக்கப்பட்டுள்ளது. தவிர வடகிழக்குத் தாய்லாந்தில் புகழ்வாய்ந்த பனம்ருங்சிவன் கோவிலின் மூலக் கோயிலின் கிழக்குவரி முக்கோண முகப்பு முகட்டில் (Eastern Pediment) ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் வலது பக்கம் எதிரில் அம்மையார் சிலை காணப்படுகின்றது. சின்முத்திரையுடன் வீற்றிருக்கும் தட்க்ஷிணாமூர்த்தியின் சிலை காணப்படுகிறது. பீமாய், பனம்ருங் எனும் இரண்டு இடங்களிலும் உள்ள அம்மையாரின், சிவனின் சிலைகள் ஒரேமாதிரியாக இருக்கின்றன என நானும், மைக்கேல் ரைட்டும் கருதுகின்றோம்.

இவற்றால் காரைக்கால் அம்மையாரின் வழிபாடு கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டு வரையில், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வழக்கில் இருந்தமை தெளிவாகிறது. தமிழ்நாட்டு மக்கள் இடையே வழக்கில் இருந்த பல்வேறு வழிபாட்டு நெறிகளுள், நடராசர் வழிபாட்டு நெறி (ஊழிக்கூத்து) காரைக்கால் அம்மையாரின் வழிபாட்டு நெறியோடு பின்னிப் பிணைந்து இருந்தமை இதனால் புலனாகின்றது.

இந்த வழிபாட்டு நெறி, தமிழ்நாட்டு வாணிகர்கள் மூலமாகவும் சைவ சமயத் தொண்டர்கள் வாயிலாகவும் தாய்லாந்து, கம்போடியா, இந்தோனேசியா, சம்பா முதலிய தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்றிருக்க வேண்டும் என ஊகிக்கலாம்.

ஆகையால் பல்லவர்கள் காலத்தில் காரைக்கால் அம்மையார், வழிபாடு சிவவழிபாடு தாய்லாந்துக்குச் சென்றிருக்கலாம் எனக் கருதலாம். மேலும் தென்தாய்லாந்து நாட்டில் கிடைத்திருக்கும் பெரும்பான்மையான கல்வெட்டுகளில் வரையப் பட்டி

ருக்கும் எழுத்துமுறை பல்லவ கிரந்த எழுத்து முறையை ஒத்திருக்கின்றன. குறிப்பாக 8, 9, 10, 11 கல்வெட்டுகள் பல்லவ கிரந்த எழுத்துமுறை கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தாய்லாந்தில் சிறப்பிடம் பெற்றிருந்தது எனத் தெரிவிக்கின்றன. வாட மஹேயோங், சோங்காய் பள்ளத்தாக்குக் கல்வெட்டுகள் (கல்வெட்டுகள் 8, 9) மூலம் இப்பகுதிகளில் சமஸ்கிருத மொழியை மக்கள் நன்கு புரிந்து கொண்டார்கள் எனவும் ஊகிக்கலாம். மேலும் தமிழ்த் தகுவபா கல்வெட்டு(கல்வெட்டு 10)மூலம் தமிழர்கள் பலர் தாய்லாந்தில் குடியேறியிருந்தார்கள் எனவும் ஊகிக்கலாம். மேலும் இப்பகுதி மக்கள் இந்துமதத்தைப் பின் பற்றியிருக்க வேண்டும் எனும் சான்றுகள் இக்கல்வெட்டுகள் மூலம் கிடைக்கின்றன. (Kongknew veeraprajek: 1986: 7-20).

எடுத்துக்காட்டாகத் தாய்லாந்து தீபகற்பத்தில் கிடைத்துள்ள சிவலிங்கங்களை மொத்த கணக்கு எடுத்துப் பார்த்தால் சிவவழிபாடு தோன்றிய முதற்பகுதியில் தாய் மக்கள் சிவனிடம் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தனர் எனும் முடிவுக்கு வரலாம் என ஸ்டான்லி ஓ. கான்னர் கருதுகின்றார். (Stanley O Connor: 1983:1) கிடைத்த லிங்கங்களில் பல முகலிங்கங்கள். அவற்றில் பல ஏகமுகலிங்கங்கள் (ஒரேமுக லிங்கங்கள்). முகலிங்கங்கள் குப்தர்கள் நாட்டிலும், தமிழ்நாட்டிலும், பிற பகுதிகளிலும் நமக்கு கிடைக்கின்றன. ஆகையால் இம்முகலிங்கங்கள் தமிழ்நாட்டு மரபைச் சேர்ந்தவை என அறுதியிட்டுக் கூறமுடியாது. கி.பி.5 அல்லது ஆறாம் நூற்றாண்டுக் காலத்து லிங்கங்களாக இவை இருக்கலாம். பல்லவர் தொடர்பான நமக்குக் கிடைக்கும் பிற சான்றுகளின் துணை உதவியோடு தாய்லாந்து லிங்க வழிபாட்டுமுறை தமிழ் நாட்டிலிருந்தும் பல்லவர் காலத்தில் சென்று இருக்கலாம் எனக் கருதலாம்.

ஐந்து தலைகளுடைய பத்துகைகளுடைய சிவன் சிலை ஒன்று தாய்லாந்து நாட்டிலுள்ள அயுத்தியா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. குட்சுவன் டெங் (Kut Suen Teng) கோவிலில் மகுடமும், நகைகளையும் அணிந்து கொண்டு சிவன் நடனமாடுவதைப் பார்க்கலாம். சில தேவதைகளும், பிறரும் இச்சிவனுடன் இருப்பதைப் பார்க்கலாம்

நகர ஸ்ரீதர்மராஜா என்னுமிடத்தில் மூன்று சிறிய பிராமண கோயில்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றுள் இரண்டாவது கோயில் சிவன் கோயிலாகும். இக்கோயில் சிதைந்த செங்கற் கட்டிடமாக இருக்கின்றது. இக்கோயில் கி.பி. 10 அல்லது 11ஆம்

நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் குவாரிட்ஸ் வேல்ஸ் கருதுகின்றார். (Stanley O' Connor : 1971:22). பீமாய் எனும் பௌத்த கோயிலின் கிழக்குப் பகுதியில் நந்தியின் மீது சிவனும் உமையும் அமர்ந்து இருக்கும் சிலை பொலிவுடன் விளங்குகின்றன.

மேலும் வடகிழக்குத் தாய்லாந்தில் ஓவடாயங் குகையில் (Woa Daeng Cave) நந்தியின் மேல் வீற்றிருக்கும் சிவன், உமா சிலைகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இச் சிலைகள் பதினொன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கூறுகின்றனர். மேலும்இப்பகுதிகளில் உள்ள பிரசாத் ஹின் நோங்ஹாங் (Prasat Hin-Nong Hong) எனும் கிராமத்திலும் நந்தியின் மேல் வீற்றிருக்கும் சிவனும், அச்சிவன் காலடியில் காலனும் உள்ள சிலை கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. 9, 10, 11 ஆம் நூற்றாண்டுத் தாய்லாந்து சிலைகள் பிற்காலப் பல்லவ, சோழர் பாணியில் அமைந்தவை எனப் பொதுவாகக் கருதப்படுவதால் மேலே குறிப்பிடப்பட்ட சிவன் சிலைகளிலும் இத்தமிழ்நாட்டுக் கலை, சமயத் தாக்கத்தைப் பார்க்கலாம். எடுத்துக்காட்டாக, சோழர்கள் மரபைத் தழுவிய சிவன் சிலையைத் தாய்லாந்தில் வியாங் சிரா (Vieng Sra) எனுமிடத்திலும் பார்க்கலாம். மேலும் தமிழ்நாட்டுச் சைவசமய திருவெம்பாவைப் பதின்மூன்றாம் நூற்றாண்டில் தாய்லாந்திற்குச் சென்றிருந்ததாலும் சோழர்களின் தமிழ்ப்பண்பாட்டுத் தாக்கம் தாய்லாந்தில் சிவ வழிபாட்டிலும் இருந்தது என உறுதியாகக் கூறலாம்.

தாய்லாந்து சிவவழிபாட்டுத் தத்துவங்களில் ஆகமநெறியின் தாக்கம் இருப்பதால் சிவ தத்துவங்களும் தமிழ் நாட்டிலிருந்து தாய்லாந்திற்குச் சென்றிருக்கலாம் எனக் கருத வாய்ப்பிருக்கின்றது. தூய வைதீகப் பிராமண சமயம் வேதத்தைத் தழுவியது; மேலும் சாதிமுறை அமைப்பில் கட்டுப்பாட்டுடன் செயல்படுவதாகும். ஆனால் ஆகமநெறி முறையில் பரந்த மனப்பான்மை உண்டு. சாதிமுறை கட்டுப்பாடுகள் குறைவாக இருக்கும் ஆகையால் தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பரந்த மனப்பான்மையுள்ள ஆகம நெறிமுறைப் பிராமணத் தத்துவங்களே மிகுதியாகப் பரவின. தமிழ்நாட்டிலிருந்து இத்தத்துவங்கள் பல்லவர்—சோழர்கள் காலத்தில் பரவியிருக்க வாய்ப்பு உண்டு என்று விளக்கும் தொடர்புச் சான்றுகள் பற்றி ஏற்கனவே கூறப்பட்டது. குறிப்பாகப் பஞ்சாக்ஷர மந்திரம், இம்முயற்சிகள் மூலம் தென்கிழக்காசியாவில் உன்னத நிலையை அடைந்தது.

சிவ தத்துவம் தொடர்பான விரிவான மூலச் சான்றுகள் தாய்லாந்தில் கிடைக்கவில்லை. ஆனால் கம்போடிய கல்வெட்டு களில் இத்தத்துவம் தொடர்பான விளக்கங்கள் கிடைக்கின்றன. கம்போடியாவின் ஒரு பகுதியாகத் தாய்லாந்து இருந்ததாலும், கம்போடியா மூலம் சிவ வழிபாடு தாய்லாந்திற்குச் சென்றது எனச் சான்றுகள் கிடைப்பதாலும் கம்போடிய சிவதத்துவம் தாய்லாந்திலும் முற்பகுதி காலங்களில் நடைமுறையில் இருந் திருக்க வேண்டும் எனக் கூறலாம்.

பனாம் பாயங் (Phnong Bayang—கி.பி.624) கல்வெட்டில் கீழே அளிக்கப்பட்டிருக்கும் செய்தி கிடைக்கின்றது. சிவனே பிரம்மம், அச்சிவனை உள்ளே வீற்றிருக்கும் ஜோதியாகக் கருதி வணங்குகிறார்கள். பற்றுடனோ அல்லது பற்றற்றோ அல்லது பயனைத் துறந்த மனப்பான்மையுடனோ எவன் ஒருவன் எளிமை யான பழக்க வழக்கங்களையும், வாசிப்பு முறையையும், வேள்வி களையும் சிவனுக்கு அர்ப்பணித்துப் பின்பற்றுகின்றானோ அவனுக்கு வரையறுத்துக் கூறமுடியாத அளவுப் பயன்கள் தோன்றும்.

பதினொான்றாம் நூற்றாண்டுக் கம்போடியக் கல்வெட்டு ஒன்று, சிவனே திறந்த அகல்வெளி என்றும், இவ்வொளி நிலம், நீர், தீ, காற்று, விசும்பு (Ether), சூரியன், சந்திரன் முதலிய இடங்களில் சுடர் வீசுகின்றது என்றும் குறிப்பிடுகின்றது. அஷ்ட சிவனை மூர்த்தி எனக் குறிப்பிடும்போது ஆத்மனுடன் இணைத்து, மேலே கல்வெட்டில் கூறியிருக்கின்ற ஏழு வடிவங் களையும் குறிப்பிடுகின்றோம்.

கம்போடியக் கல்வெட்டுகள் கீழே அளிக்கப்பட்டிருக்கும் சிவ தத்துவங்களையும் அளிக்கின்றன. எங்கும் இருப்பவர் சிவன். இருளையும் தாண்டிச் சுடர்வீசும் உலக முழுதளாவிய ஒளி அவர். குணமற்றவர், பகுதிகள் அற்றவர், ஈடிணைவற்ற தனித்தன்மை வாய்ந்தவர்; உடலற்றவர்; மேலும் பயன் விளைவற்ற வெறுமை அவர். தன்னுடைய சக்தியின் மூலம் பல உருவங்களை எடுக்கின் றார். ஆகையால் இவர் முகமானவர், முடிவற்றவர், எல்லையற்ற வர்; பிரம்மா, விஷ்ணு, ருத்ரா சிவனிடமிருந்து வெளிப்படுகின் றனர். ஆகையால் உலகம் முழுவதும் சிவனின் தோற்றம், புறத்தே யுள்ள காட்சிகளில்தான் வேறுபட்டுக்காண்கிறார். மேலும் சிவனே தூயவிழிப்புணர்வு. சங்கராசாரியாருடைய தத்துவங்களின் தாக்கத்தை இங்கே காணலாம். சிவனும் சக்தியும் உலகத்தைப் படைத்தவர்கள். மேலும் சிவனும் சக்தியும் ஒன்றே. பநாம்

சாந்தக்(Phnom Sandok) கல்வெட்டு (கி.பி 110) ஆகம நெறியை விளக்குகின்றது. சக்தி, பிணைப்புகளை மிகுதியாக்குகின்றார். இப் பிணைப்புகளே இடையூறுகள் (Obstruction), இப்பிணைப்புகளே பார்வையை மறைக்கின்றன. இருள்நிலையை அளிக்கின்றன. (Obscuration). வேதனைகளை அளித்து, ஞானப்பாதையில் அழைத்துச் சென்று ஞானம் அளிக்கின்றார். இடையூறுகளை மிகுதியாக்கி, பிறகு அருள் அளித்துப் பிணைப்புகளிலிருந்து விடுதலை அளிக்கின்றார். இக்கல்வெட்டுத் தொடர்பாக இம் மாதிரியான விளக்கத்தைத் தாவிதாவிவார்ன் அளிக்கின்றார். (Dawee Daweewarn: 1982:28-29)

பொதுவாக இப்பகுதிகளில் சிவனின் பஞ்சாக்ஷர மந்திரம் நமசிவாயா எல்லோருக்கும் தெரிந்திருந்தது. ஓம் மந்திரமும் சிறப்பு நிலையை அடைந்திருந்தது. கோயில் வழிபாடுகள் பெரும் பாலும் ஆகம நெறிப்படி நடைபெற்றன. தமிழ்நாட்டில் சோழர் கள் காலத்தில் தமிழர் தமிழ்த்திருமுறைகள் கோயிலில் பயன்படுத்தப்பட்டதைப் போலத் தாய்லாந்திலும் கோவில் வழிபாட்டில் சோழர்கள் காலத்தில் தமிழ்த்திருமுறைகள் பயன் படுத்தப்பட்டன.

இன்றும் தாய்லாந்தில் நடைபெறும் கோயில் வழிபாடுகள் பெரும்பாலும் ஆகம நெறிப்படி நடைபெறுகின்றன. அவை தமிழகத்தின் திருக்கோயில்களுள் நடைபெறும் வழிபாட்டு முறைகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. அவற்றுள் சிற்சில மாற்றங்களும், திரிபுகளும் காலத்திற்கும் இடத்திற்குமேற்ப உண்டாகியுள்ளன. காப்புக்கட்டுதல், நோன்பு இருத்தல், தூப தீப ஆராதனை செய்தல், பழங்களைப் படைத்தல், மலரினைத் தூவி வழிபடுதல், திருவிழா, ஊர்வலம் போன்றவை தாய்லாந்தி லுள்ள இந்து சமயக் கோயில்களில் இன்றும் நடைபெற்று வரு கின்றன. அவை தமிழ்நாட்டுக் கோயில் வழிபாட்டையும், விழாக்களையும் பெரிதும் ஒத்துள்ளன. (தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்)

## தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளும் விஷ்ணு வழிபாடும்

தமிழ் நாட்டில் பண்டைய காலத்திலிருந்து விஷ்ணுகோயில் வழிபாட்டிற்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. விஷ்ணு கோயில் வழிபாட்டுமுறையும் தமிழ்நாட்டிலிருந்து தாய்லாந் திற்குச் சென்றதாகச் சான்றுகள் உள்ளன. 1902 ஆம் ஆண்டு வால்டர் போர்க் (W. Walter Bourke) என்பார் தகுவாபா

ஆற்றங்கரையோரத்திலுள்ள கௌபிராநாராய் (Koupranarai) எனுமிடத்தில் பிரம்மா, விஷ்ணு, சிவன் சிலைகளைக் கண்டு பிடித்தார். இந்தியாவின் தாக்கம் தாய்லாந்தில் இருக்கின்றது என முதன்முதலாக வெளி உலகத்திற்கு எடுத்துரைத்தவர் வால்டர் போர்க்தான். அதற்குப் பிறகு கர்னல் ஜெரினி, லூனர் தி லோஜான்குயர், குவாரிட்ஸ்வேல்ஸ், லீமே, அலஸ்டர் லேம்ப், பெர்னார்டு பிலிப் கிராஸ்லியர், கே. ஏ. நீலகண்டசாஸ்திரி, பியரிகுயூபாண்ட், பி. எஸ். ராவ்சன், பாய்ஸெலியர், மாலரெட், சுபத்திர திஸ் திஸ்குல், ஸ்டான்லிஓ கான்னர், பிரியா கிரைரிக்ஸ், தாவிவாவீவார்ன், வூல்ப்காங் பெல்டன், மார்டின் லெர்னர், மைக்கேல்ரைட் முதலிய அறிஞர்கள் சிவ—விஷ்ணு பண்பாட்டின் தாக்கத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்திருக்கின்றார்கள்.

தாய்லாந்து தீபகற்பத்தில், குறிப்பாக நாகோன் சீதம்மா ராட், செய்யா முதலிய இடங்களில் விஷ்ணு சிலைகள் கிடைத் திருக்கின்றன. பாங்காக் அருங்காட்சியகத்தில் சுகோதாய், அயோத்தியா காலங்களில் உருவாக்கப்பட்ட விஷ்ணுசிலைகளைப் பார்க்கலாம். தவிர கோரட்,பீமாய், நாகோன் சீதம்மாரட் அருங் காட்சியங்களிலும் விஷ்ணு உருவச் சிலைகளை இன்றும் பார்க்க லாம். நாகோன் சீதம்மாரட் தாய் புத்த கோவில்களிலும் விஷ்ணு சிலைகளைப் பார்க்கலாம். நாகோன் சீதம்மராட்டி. லுள்ள வாட்மகாதாட் கோவில் கதவுகளிலே விஷ்ணு, சிவன் உருவங்களைக் காணலாம். பாங்காக்கிலுள்ள எமரால்ட் புத்தர் கோவிலிலே விஷ்ணு, கருடன், சிவன் உருவங்களைப் பார்க்க லாம். இக்கோவிலின் சுவர்களிலே இராமாயணக் கதைச் சித்திரங் களைப் பார்க்கலாம். பொதுவாக அரசு புத்த கோவில்களிலும், அரண்மனை மாளிகை கூரைகளிலும் விஷ்ணு, இந்திரன் உருவங் களைப் பார்க்கலாம். மேலும் இன்றைய தாய்லாந்து நாட்டு அயல்நாட்டுக் கடிதங்களிலே விஷ்ணு, பிரம்மா உருவம் அச்சடிக் கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

தாய்லாந்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற விஷ்ணு சிலை களிலேயே பல ஒற்றுமைகளைக் காணலாம். எல்லா விஷ்ணு சிலைகளும் அணி செய்யப்பட்ட நீண்ட நடுப்பிளவுடைய தலை அணிகளை அணிந்திருக்கின்றன. ஒக்யோ (OC+EO) விஷ்ணு சிலையின் தலைஅணி மட்டும் அணி செய்யப்படவில்லை. எல்லா சிலைகளும் செதுக்கப்பட்ட கோடுகளுடைய நீண்ட வேட்டியை அணிந்திருக்கின்றன. விஷ்ணுவின் இடுப்பைச் சுற்றி இறுக்கமாக இவ்வேட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. இடுப்பிலே முடிச்சுப் போடப்பட்டுச்செங்கோட்டு நிலையில்இவ்வேட்டி கட்டப்பட்டிருக்

கின்றது. மேலும்தோள்வரைதொங்கும்காதணிகளை இச்சிலைகள் அணிந்திருக்கின்றன. ஆடையற்ற மார்புடன், நான்கு கைகளுடன் இச்சிலைகள் காணப்படுகின்றன. கைகளில் சங்கு, கதை முதலியவைகளைப் பார்க்கலாம். சில கைகள் உடைந்தும் இருக்கின்றன. பொதுவாக வலது கையில் உள்ள சங்கு இடுப்பை இடித்துக் கொண்டு இருக்கின்றது. அணிதோட் பட்டிகை (Sash) களும் ஒரே மாதிரியாக இருக்கின்றன. சிறிய வாதுமை வடிவமுள்ள அல்லது பொத்தான் வடிவிலுள்ள கண்களை வட்டவடிவிலுள்ள முகத்தில் பார்க்கலாம். தெய்வீகச் சடங்குமுறை தலை அணிகளுடன் (Ceremonial Head Dress) பொதுவாகக் காணப்படுகின்றது. தகுவாபாவிலுள்ள விஷ்ணு, தமிழ்ப் பல்லவ விஷ்ணு சிலைகளைப் போலக் கோள வடிவமான நடுப்பிளவுடைய தலை அணிகளையும், நீண்ட வேட்டியையும் அணிந்திருக்கின்றார். பல ஒற்றுமைகள் இருக்கும்போதிலும் பல வேற்றுமைகளும் இருக்கின்றன. பல பட்டறைகளிலும், பல காலங்களிலும் உருவாக்கப் பட்டதால் இவ்வேற்றுமை எனலாம்.

தாய்லாந்தில் கிடைத்திருக்கும் விஷ்ணு சிலைகளிலேயே மிகவும் புகழ் வாய்ந்தன ஜெய்யா விஷ்ணு, நகர சிதம்மராவில் கிடைத்துள்ள இரண்டு விஷ்ணுக்கள், தகுவாபா விஷ்ணு, ஒக்யோ விஷ்ணு, பெட்பரி விஷ்ணு முதலியவைகளாகும். பாங்காக் அருங்காட்சியகத்தில் 27 அங்குலமுள்ள ஜெய்யா விஷ்ணு இருக்கின்றது. தகுவாபா விஷ்ணு 6 அடி உயரமுள்ளது. ஒக்யோ விஷ்ணு சிறியது. தாய்லாந்தில் கிடைத்திருக்கும் விஷ்ணு சிலைகளிலேயே மிகவும் பழமையானது. ஜெய்யா விஷ்ணு என ஸ்டான்லி ஓ கான்னர் கருதுகின்றார். ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டின் தென் இந்தியக் கலை பண்பாட்டின் தாக்கத்தை இச்சிலையில் பார்க்கலாம் எனப் பாய்ஸெலியர் கருதுகின்றார். தகுவாபா விஷ்ணு ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனவும் அதில் பல்லவ பண்பாட்டின் தாக்கத்தைப் பார்க்கலாம் எனவும் பியர் டுயுபாண்ட் கூறுகின்றார். ஆனால் பிரியா கிரைரிக்ஷ், தகுவாபாவிஷ்ணு, ஒன்பதாம் நூற்றாண்டைச்சேர்ந்தது என்றும் தமிழ்ப் பண்பாட்டின் தாக்கத்தைப் பார்க்கலாம் எனவும் விளக்குகின்றார். பொதுவாகத் தாய்லாந்தில் கிடைக்கும் பண்டைய விஷ்ணுக்களும், பிராமணக் கடவுள்களும் பல்லவ சாளுக்கிய, பாண்டிய நாடுகளிலிருந்து தாய்லாந்திற்கு வந்திருக்க வேண்டும் என லீ மே கருதுகின்றார்.

பண்டைய காலத்தில், குறிப்பாகக் கி. பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரை தாய்லாந்திலுள்ள சீதெப் (Sitep) எனுமிடத்தில் இந்துமதம் தழைத்தோங்கியிருந்தது. இங்குப் பல விஷ்ணு சிலைகள் கிடைத்திருப்பதால் இது ஓர் வைணவத்தலமாக இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கின்றனர்.

ஸ்டான்லி ஓ கான்னர் ஜூனியர், கீழே அளிக்கப்பட்டுள்ள கருத்தைக் கொடுக்கின்றார். ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதினோராம் நூற்றாண்டு வரை தாய்லாந்து தீபகற்பத்தில் கிடைக்கும் பிராமணச் சிலைகள் சிறப்பாகத் தென் இந்திய பாணியைத் தழுவியிருக்கின்றன. இச்சிலைகள் பிற்காலப் பல்லவ அல்லது தொடக்க காலச் சோழர்கலைப் பாணியைத் தழுவியதாக உள்ளன. தென் இந்திய சிற்பிகள் இந்தியாவிலேயோ அல்லது தாய்லாந்து தீபகற்பத்திலேயோ இச்சிலைகளைச் செய்திருக்க வேண்டும். தகுவாபா கல்வெட்டு ஓர் எடுத்துக்காட்டாகும். தவிர, பிரிட்டிஷ் அருங்காட்சியகத்திலுள்ள எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த விஷ்ணு பிற்காலப் பல்லவ பாணியில் செய்யப்பட்டிருக்கிறது. தாய்லாந்தின் கிழக்குப் பகுதியில் விஷ்ணுவின் நின்றகோலச் சிலை ஒன்று கிடைத்துள்ளது. அது பல்லவர் காலத்தில் கி. பி. 8—9 ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் செய்யப்பட்ட விஷ்ணுவின் திருமேனியைப் பெரிதும் ஒத்துள்ளமை ஆராய்ச்சியாளரின் கருத்தைக் கவர்ந்துள்ளது. அங்குள்ள மற்றோர் இடிபாட்டின் தெற்குப் பகுதியில் புடைப்புச் சிற்பங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. விஷ்ணுவின் கிடந்த கோலச் சிற்பமும் கண்ணன் கோவர்த்தனக் கிரியைக் குடையாகப் பிடிக்கும் அற்புதக் காட்சி சிற்பமும் கவர்ச்சி மிகு புடைப்புச் சிற்பங்களாக விளங்குகின்றன. இவை மாமல்லபுரத்துக் குடவரைக் கோயில் (மண்டபங்)களில் வீறுடன் விளங்கும் கல்லோவியங்களைப் பெரிதும் ஒத்துள்ளன. மாமல்லபுரத்துச் சிற்பங்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவற்றையொட்டித் தாய்லாந்தின் சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்பது சிம்மரின் கருத்தாகும்.

பத்து அல்லது பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு விஷ்ணு சிலைகள், ஒரு பைரவ சிவன் சிலை வியாங் சிரா எனுமிடத்தில் கிடைத்திருக்கின்றன. பைரவர் வனமாலையை அணிந்திருக்கின்றார், நீண்ட மணிமாலைகள் கணுக்கால் வரை தொங்குகின்றன. முற்காலச் சோழர் பாணியைத் தழுவியதாக இருக்கின்றது. தலைமயிர் நாகரிகப் பாங்கும் முற்

காலச் சோழ, பைரவ தலைமயிர் நாகரிகப்பாங்கை ஒத்திருக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சோழ அரசர் முதலாம் பராந்தகன் (907-955) காலத்துக் கோவிலில் உள்ள சிலைகளில் இத்தலைமயிர் பாங்கைக் காணலாம். வியாங்சிராங் விஷ்ணுசிலைகளும் சோழர் பாணியைத் தழுவியிருக்கின்றன. சோழர்கள் தென்கிழக்காசியாவின் மேல் படையெடுத்துச் சென்றபொழுது இச்சிலைகளை எடுத்துச் சென்றிருக்க வேண்டும். அல்லது தாய்லாந்தில் வாழ்ந்து வந்த இந்திய வணிகர்கள் தாய்லாந்தில் தாங்கள் கட்டிய கோவில்களை அலங்காரம் செய்வதற்காக இச்சிலைகளை வரவழைத்திருக்க வேண்டும். அல்லது நகரசிதர்ம ராஜாவில் வாழ்ந்து வந்த தாய் பிராமணர்களின் பூசை பண்பாட்டிற்காக இச்சிலைகளைச் செய்திருக்க வேண்டும். எக்காரணமாக இருந்தாலும், இச்சிலைகள் சோழர் கலைச் செல்வாக்குடன் விளங்குகின்றன என்பதை அறுதியிட்டுச் சொல்லலாம்.

ஆகையால் தாய்லாந்தில் கிடைத்துள்ள விஷ்ணு, சிவன், பிரம்மா, உமை, இலக்குமி முதலிய வெண்கலச் சிலைகள் நேர்த்தியும், கீர்த்தியும் வாய்ந்தவையாகவும், சோழர் காலத்திய கலைப்பாணிகள் நிறைந்தனவாகவும் உள்ளன. மேலும் வைணவ திருப்பாவை, சைவத் திருவெம்பாவை, பதிமூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே தாய்லாந்திற்குச் சென்றுவிட்டன. கோயில் வழிபாட்டு முறையில் பயன்படுத்தப்பட்டன எனச் சான்றுகள் கிடைத்திருப்பதால் சோழ மயமாக்கம் பணி தாய்லாந்தில் செயல்படுத்தப்பட்டது என ஊகிக்கலாம்.

தாய்லாந்து புத்த உருவச் சிலைகளிலும் தென் இந்தியக் கலையின் செல்வாக்கைக் காணலாம். பாய்ஜெலியர் என்பார் பின்வருமாறு கூறுகின்றார்:—தாய்லாந்து தீபகற்பத்திலுள்ள இந்திய கலைக்கூடத்தை இரு பிரிவாகப் பிரிக்கலாம். பல்லவ மரபில் வந்த சிற்பக்கலைப் படைப்புகள், சோழர் மரபில் வந்த சிற்பக்கலைப் படைப்புகள். இவை பல்லவ சோழ மரபு முறையைத் தழுவியிருந்தன. இன்று பாங்காக் தேசிய அருங்காட்சியகத்தில் உள்ள தாய்லாந்து மாவட்டத்தைச் சேர்ந்த ''பூவுலகத்தைச் சாட்சியாக அழைக்கும்'' புத்தர் வெண்கலச் சிலை நாகப்பட்டினச் செயற்பாணியை, அதாவது வெண்கல வார்ப்புருக்கலையைக் (Bronze Casting Arts) குறிப்பாக வெண்கல புத்த சிற்பக்கலையைத் தழுவியிருக்கிறது எனப் பிரியா கிரைரிக்ஷ் கூறுகின்றார். மேலும் தாய்லாந்து புத்த சிற்பக் கலைப் படைப்புகள் குப்தர் காலக் கலையைப் பின்பற்றாமல் பத்தாம் நூற்றாண்டிலிருந்துப் பன்னிரெண்டாம் நூற்றாண்டு

வரை இருந்த தென்னிந்திய, இலங்கை வெண்கலக் கலைநயத்தைப் பின்பற்றின. இவ்வளவு சான்றுகள் கிடைத்த போதிலும் முழுமையான தூய தமிழ்ச் சிற்பக்கலைப் படைப்புக்களின் செல்வாக்கு தாய்லாந்தில் இருந்தது என அறுதியிட்டுக் கூற முடியாது. தாய்லாந்தில் இருந்த ஒரு புகழ் வாய்ந்த கலைக்கூடத்தை நாகப்பட்டினம் கலைக்கூடம் என்றே அழைத்தார்கள் எனப் பிரியா கிரைரிக்ஷ் கூறுகின்றார். பொதுவாகத் தமிழ்ச் சிற்பக் கலைநயம், குப்தர்கள், குப்தர்கள் பிற்காலம், பாலா போன்ற தென், வட இந்திய கலைகளுடன் கலக்கப்பட்டுத் தாய்லாந்தின் சிற்பக்கலைப் படைப்புகள் உருவாகின எனக் கூறலாம்.

## பாஞ்சராத்திர ஆகம வழிபாடும் விஷ்ணு கோயில்களும்

தாய்லாந்தில் விஷ்ணு வழிபாடு இருந்தது என ஆதாரங்கள் கிடைத்திருக்கும் போதிலும் அவ்வழிபாட்டு முறை தொடர்பான நேரடி ஆதாரங்கள் கிடைக்கவில்லை. தாய்லாந்து, கம்போடியாவின் ஒரு ஆட்சிப் பகுதியாக இருந்ததால் கம்போடியாவில் வழக்கில் இருந்த பாஞ்சராத்திர விஷ்ணு ஆகமவழிபாடு தாய்லாந்திலும் செயல்படுத்தியிருக்க வேண்டும் என்றும், மேலும் அப்பாஞ்சராத்திர ஆகம வழிபாடு தொடர்பான ஆதாரங்கள் தாய்லாந்து விஷ்ணு உருவச்சிலைகளின் அமைப்பு மூலம் கிடைப்பதாலும், தாய்லாந்திலும் பாஞ்சராத்திர ஆகம வழிபாடு இருந்திருக்க வேண்டும் என முடிவுக்கு வரலாம்.

பாஞ்சராத்திர ஆகம வழிபாட்டின்படி விஷ்ணுசிலைகள் கதை (Gada) வைத்திருக்க வேண்டும், மேலும் இவ்விஷ்ணு உருவச் சிலைகள் அபயஹஸ்தா தோற்ற நிலையில் இருக்க வேண்டும். பாதுகாப்பு, ஆதரவு அளிக்கின்ற கை தோற்ற நிலையை அபயஹஸ்தா எனக் குறிப்பிடுகின்றோம்; கைவிரல்கள் மேல் நோக்கி இருக்கவேண்டும். பார்வையாளரை நலமா என விசாரணை செய்யும் தோற்ற நிலையில் கைவிரல்கள் இருக்க வேண்டும். இந்தியர்கள் பொதுவாகப் பயன்படுத்தும் குண்டாந்தடியே கதையாகும். விஷ்ணு சிலைகளின் ஐந்து கை விரல்களும் கதையைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். சில சமயங்களில் சிலையின் ஒரு கை தரையின் மேல் நிற்கும் கதையின் மேற்புரத்தின் மேல் பகுதியைத் தொட்டுக் கொண்டோ, பிடித்துக் கொண்டோ இருக்கும் எதிரிகளுடன் நெருங்கிய நிலையில் போர் செய்யும் போது எதிரிகளைத் தாக்குவதற்காக இக்கதை பயன்படுகின்றது. ஆகையால் இக்கதையின் உடைமை

யாளரிடமிருந்து இது போவதில்லை, எப்பொழுதும் அவருடன் இருக்கும்.

தாய்லாந்திலுள்ள ஜெய்யா விஷ்ணு வியாங்சிரா விஷ்ணு முதலிய விஷ்ணுக்களின் வலது கைகள் அபயஹஸ்தா தோற்ற நிலையில் இருக்கின்றன. இதுபோலவே தகுவா ஆற்றங்கரை யோரம் கிடைத்துள்ள பிராநாராய் பிரிவின் நடு சிலையின்வலது கை அபயஹஸ்தா தோற்றநிலையில் இருக்கின்றது. ''கவலைப் படாதே, நான் உனக்கு நிலைபேறுடைய அடைக்கலம் அளிக் கின்றேன்'' எனக் கூறுவதுபோல இந்த அபயஹஸ்தா தோற்ற நிலை இருக்கின்றது. நீளமாக ஆடை அணிந்திருக்கும் பெட்பரி விஷ்ணுவின் ஒருகை இடதுபுறத்தில் கதையைத் தொட்டுத் தாங்கிக் கொண்டு இருக்கிறது. மற்றொரு வியாங்சிரா விஷ்ணு வின் இடதுகை கனமான கதையைத் தாங்கி ஆதரவு அளிக் கின்றது. எடுத்துக்காட்டாக ஜெய்யா விஷ்ணு, பாஞ்சராத்திர ஆகம வழிபாட்டிற்கு ஒரு சிறப்பான எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ஏனென்றால் ஜெய்யா விஷ்ணுவின் வலதுகை ஒரு கனமான கதையைப் பிடித்துக் கொண்டிருக்கிறது. முன் வலதுகை அபயஹஸ்தா தோற்றநிலையில் இருக்கின்றது. ஜெய்யா விஷ்ணு இன்று பாங்காக்கில் தேசிய அருங்காட்சி யகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது; சாலாதுங் மடத்தில் சையா எனுமிடத்தில் இருந்ததாக அருங்காட்சியகத்தில் விளக்கப் பட்டிருக்கின்றது. ஜெய்யா விஷ்ணுவும் இரண்டு நகரதர்ம ராஜா விஷ்ணுக்களும் அமைப்புருவில் ஒரே மாதிரியாக இருக் கின்றன. ஒரே பாணியைத் தழுவியிருக்கின்றன, என ஸ்டான்லி ஓ கான்னர் கூறுகின்றார். இம்மூன்று விஷ்ணுக்களின் பொது அமைப்புருவம் பாஞ்சராத்திர தத்துவ அமைப்பைத் தழுவியிருக் கின்றது எனக் கருதுகிறேன்: சிசன் (Sicho ), வாட் ஜோம்தோங் விஷ்ணுவின் கைகள் உடைந்திருக்கின்றன. உடைந்துபோன கைகளில் கதையும், அபயஹஸ்தா தோற்றமும் இருந்திருந்தால் வியப்பில்லை. மேலே கூறிய விஷ்ணு உருவத் தோற்றங்களில் இருந்து தாய்லாந்திலும் பாஞ்சராத்திர ஆகம வழிபாடு பின் பற்றப்பட்டிருக்க வேண்டும். அவ்வழிபாடு கி.பி. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டிலேயே தொடங்கியிருக்க வேண்டும் என நாம் கருதலாம்.

இந்தப் பாஞ்சராத்திர ஆகம வழிபாடு குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கே உரியதாகும். இப்பாஞ்சராத்திர ஆகமப்படி வழிபாடு கம்போடியா விஷ்ணு கோயில்களில் செய்யப் பட்டன. ஆகை யால் கம்போடியாக் கல்வெட்டுகளில் விளக்கப்பட்டிருக்கும்

இப்பாஞ்சராத்திர ஆகம வழிபாட்டுத் தத்துவம் குறிப்பாகத் தாய்லாந்திலும் பரவியிருந்ததால் இக்கல்வெட்டுகளில் கூறப் பட்டிருக்கும் தத்துவப் பொருளைப் பற்றி கீழே விளக்கம் அளிக்கப்பட்டிருக்கின்றது. பிரிரூப் ஸ்டெல்லி கல்வெட்டில் (Pre Rup Stele Inscription) இத்தத்துவம்தொடர்பானச் சமஸ்கிருதப் பாட்டு பின்வருவது ஆகும்.

Pāra Satvarajastamaskam apiyo nityan nivistaḥ pada traiguṇyena Caturvidhena vividhābhivyaktir avirbhavan Visvākāradharo nirastasa Kalākaro pi dedipyate Vandantāṃ bhagavantam ādipuruṣan tam Vasudevaṃ vibhum

பிரசாத் கோக் போ கல்வெட்டில் (Prasat Kok Po Inscription) இத்தத்துவம் தொடர்பான பின்வரும் சமஸ்கிருத ஸ்லோகம் வருகின்றது:

Namaścaturbhujāyāstu caturdhāviṣkr'ātmane
nistraiguṇyaguṇāyāpi catustraiguṇyadhāriṇe
(Mahesh kumar sharan: *1974:239-240)*

இவ்விரண்டு கல்வெட்டுகளிலும் பாஞ்சராத்திர ஆகமவழிபாட்டு முறைத்தத்துவம் சுருக்கமாக அளிக்கப்பட்டிருக்கின்றது.

மேலே கொடுத்துள்ள பிரிரூப் ஸ்டெல்லி கல்வெட்டு விஷ்ணுவை வாசுதேவா எனக் குறிப்பிடுகின்றது. இவ்விஷ்ணுவை விஷ்வாகாரதாரோ அதாவது எங்கும் இருக்கும் தன்மையுடைய வர் என்றும் ஆதிபுருஷன் அதாவது எப்போதும் உள்ளவர், நிலைபேறுடையவர் என்றும் குறிப்பிடுகின்றது. இவ்விரண்டு கல்வெட்டுகளும் நிஸ் திரைகுண்யா குண்யாபி அதாவது சத்வம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணங்களும் இல்லாதவர் எனக் குறிப் பிடுகின்றன. இவை பாஞ்சராத்திர ஆகமத்தின் அடிப்படைத் தத்துவங்களாகும். விஷ்ணுவும், லக்ஷ்மியும்தான் மூலகாரண உண்மை என இத்தத்துவம் கூறுகின்றது.

மேலும் பிரசாத்கோக்போ கல்வெட்டு விஷ்ணுவைச் சதுர் புஜயாஸ்து அதாவது நான்கு கைகளையுடைய கடவுள் எனக் குறிப்பிடுகின்றது. பாஞ்சராத்திரத் தத்துவத்தின்படி மூலகாரண உண்மையிலிருந்து வாசுதேவர் அல்லது சூக்சமவாசுதேவர் தோன்றுகின்றார். இச்சூக்சம வாசுதேவரிடமிருந்து நான்கு கைகளையுடைய ஸ்தூல வாசுதேவர் அல்லது பர வாசுதேவர் தோன்றுகின்றார்.

நான்கு கைகளையுடைய இவ்விஷ்ணுவைப் பிரசாத் கோக்போ கல்வெட்டு சதுர்தா விஸ்கிரதாத்மனே அதாவது நான்குமுறை தன் உருவங்களை வெளிப்படுத்திக் காட்டியவர் எனக் கூறுகின்றது இவை பாஞ்சராத்திரத் தத்துவத்தின் நான்கு வியூகங்களைக் குறிப்பிடுகின்றன. பாஞ்சராத்திரத் தத்துவத்தின் படி மேலே குறிப்பிடப்பட்டுள்ள பர அல்லது ஸ்தூல வாசுதேவ ரிடமிருந்து வியூக வாசுதேவர் தோன்றுகிறார். வியூகம் என்றால் தெய்வ ஆற்றலின்றெழும் தோற்றங்கள் எனப் பொருளாகும். வியூக வாசுதேவரிடமிருந்து சம்கர்ஷனர் தோன்றுகின்றார். சம்கர்ஷனர் தோற்றத்தின்பொழுது உலகம் ஒருவித உட்பிரிவும் இல்லாமல் தொடக்கநிலையில் இருக்கின்றது. சம்கர்ஷனரிட மிருந்து பிரத்யும்னா தோன்றுகின்றார். பிரத்யும்னா தோன்றும் நேரத்தில் புருஷா, பிரக்ருதி தோன்றுகின்றன. ஆனால் இயற் பொருள்கள் தோன்றுவதில்லை (Material World) தனித்தன்மை யின் பொதுப்பொருளான பிருஷாவும், சூட்சுமமான காலத்தில் பொதுத்தன்மையுள்ள பிரக்ருதியும் மட்டும்தான் தோன்று கின்றன. பிரத்யும்னாவிடமிருந்து அனிருத்தா தோன்றுகிறார். இவர் தோன்றுகின்றபொழுது உடலும், ஆன்மாவும் வளரு கின்றன. புலன்களால் அறியப்படத்தக்க காலம் மலருகின்றது. கலப்படமுள்ள உலகம் தொடங்குகின்றது. மேலே குறிப்பிடப் பட்டிருக்கும் இந்நான்கு வியூகங்களையும் சதுர்பிரம்மன் என்றும் மேலும் இச்சதுர்பிரம்மன் பரவாசுதேவனுடன் இணைக்கப் பட்டவுடன் பஞ்சபிரம்மன் என்றும் கூறுகின்றார்கள்.

மேலும் பிரசாத் கோக்போ கல்வெட்டு விஷ்ணுவைச் சதுர் திரை குண்யாதாரினே அதாவது 4×3 குணங்களை அல்லது பெயர்களையுடையவன். ஆகமொத்தம் 12 பெயர்களையுடைய வன் எனக் குறிப்பிடுகின்றது. கேசவன், நாராயணன் மாதவன், கோவிந்தன், மதுசூதனன், திரிவிக்ரமன், வாமனன் ஸ்ரீதரன், இருஷிகேசன், பத்மநாபன், தாமோதரன், கிருஷ்ணன் (விஷ்ணு) முதலியவை இப்பன்னிரு திருப்பெயர்களாம். பாஞ்சராத்திரத் தத்துவத்தின்படி கேசவன், நாராயணன், மாதவன் வியூக வாசு தேவனிடமிருந்து தோன்றுகின்றார்கள். கோவிந்தன், விஷ்ணு (கிருஷ்ணன்) மதுசூதனன், சங்கர்ஷனிடமிருந்து தோன்றுகின்றார் கள். திரிவிக்ரமன், வாமனன் ஸ்ரீதரன் பிரத்யும்னாவிடமிருந்து தோன்றுகின்றார்கள். இருஷிகேசன், பத்மநாபன், தாமோதரன் அனிருத்தாவிடமிருந்து தோன்றுகிறார்கள். இவைவியூக-உட்பிரிவு களாகக் (Subvyuhas) கருதப்படுகின்றன. ஆகையால் வியூகம், வியூக உட்பிரிவுகளைப்பற்றி இக்கல்வெட்டுகள்குறிப்பிடுகின்றன.

சத்வம், ரஜஸ், தமஸ் முதலிய மூன்று குணம்கள் இல்லாதவர் விஷ்ணு என இக்கல்வெட்டுகள் கூறும் போதிலும் அபிடினரகுண் யேனே அதாவது, ஆனாலும் முக்குணங்களை உடையவர்விஷ்ணு எனப் பிரிரூப்ஸெடல்லி கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. உடற் சார்பற்ற குணங்களையுடையவர் விஷ்ணு எனப் பாஞ்சராத்திரத் தத்துவம் குறிப்பிடுகின்றது. விஷ்ணுவிடமிருந்து லக்ஷ்மி தோன் றியவுடன் ஆறுகுணங்கள் தோன்றுகின்றன. ஞானம், ஐச்வர்யம், சக்தி, பாலா, வீர்யா, தேஜஸ் முதலிய ஆறுகுணங்கள் தோன்று கின்றன. இந்த ஆறுகுணங்களும் விஷ்ணுவின் உடலோடு ஒன்றி யிருக்கின்றன. ஞானம். ஐச்வர்யம், சக்தி ஒரு பிரிவாகவும், பாலா, வீர்யா, தேஜஸ் என மற்றொரு பிரிவாகவும் இக்குணங் கள் செயல்படுகின்றன. ஞானம், பாலா முதல் பிரிவாகவும், ஐச்வர்யம், வீர்யம் இரண்டாவது பிரிவாகவும், சக்தி, தேஜஸ் மூன்றாவது பிரிவாகவும் செயல்படுகின்றன. ஆகையால் ஆறு குணங்களும் முப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் செயல்படுகின்றன. இப்முப்பிரிவுக் குணங்களையே பிரிரூப்ஸெடல்லி கல்வெட்டு அபிடிரை குண்யேனே, ஆனாலும் முக்குணங்களையுடையவன் விஷ்ணு எனக் குறிப்பிடுகின்றது.

பிரிரூப் ஸ்டெல்லி கல்வெட்டு வாசுதேவனின் விவிதாபிவ் யாக்திர் ஆவிர்பவன், அதாவது பல்வேறு வகைப்பட்ட விஷ்ணு வின் தோற்றங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. விஷ்ணுவின் வியூகத் தோற்றங்களைத் தவிர, விபவ, அர்ச, அந்தர்யாமின் தோற்றங்களைப் பற்றியும் பாஞ்சராத்திரத் தத்துவம் குறிப் பிடுகின்றது.

விபவத் தோற்றம் என்றால் வாசுதேவனின் தெய்வீக இறக்கத் தோற்றங்கள் (divine descents) என விளக்கலாம். பக்தர்களுக்கு அருள் புரிந்து உதவுவதற்காகவே இவ்விபவத் தோற்றங்களை விஷ்ணு எடுக்கின்றார். நாராயணனின் பத்து அவதாரங்களே இவ்விபவத் தோற்றங்கள் எனக்கருதப்படுகின் றன அனிருத்தாவிடமிருந்து இப்பத்து அவதாரங்கள் தோன்றின. அவதாரங்கள் வினைப்பயனால் பிணிக்கப்பட்டவை அல்ல. கர்மமே அல்லாதது விபவத் தோற்றங்கள். இராமர் அல்லது கிருஷ்ணராக அவதரித்தபோதிலும் சத்வ, ரஜஸ், தமஸ் குணங் களுக்கு அப்பாற் பட்டவராகவே விஷ்ணு செயல்புரிந்தார்.

பாஞ்சராத்திர விபவத் தத்துவம் தாய்லாந்திற்கும் சென்ற தாகச் சான்றுகள் இருக்கின்றன. தாய்லாந்தில் நாரைசிப் பாங் (Narai sip pang) எனும் நூல் கிடைத்திருக்கின்றது. நாரை என்றால் நாராயணன் என்று பொருள். விஷ்ணு எனும்பெயரை

விட நாராயணன் எனும் பெயருக்கே தாய்லாந்தில் புகழ் ஓங்கி யிருக்கின்றது. இந்நூலில் நாராயணின் பத்து அவதாரக் கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. கி பி 1879ஆம்ஆண்டு மன்னர் ஐந்தாம் இராமா, நாரைசிப்பாங்கில் கூறப்பட்டிருக்கும் பத்து அவதாரங்கள் தொடர்பானப் பாடல்களை, எழுதுமாறு ஆணை பிறப்பித்தான். அத்துடன் இப்பாடல்கள் எல்லாம் பாங்காக்கிலுள்ள எமரால்டு புத்தர்கோவில் சுவர்களில் எழுதப் படவேண்டும் எனவும் ஆணையிட்டான்.

புகழ்வாய்ந்த பத்து அவதாரங்களைத் தவிர மேலும் பல துணை அவதாரங்கள் (Sub-Vibhavas) இருக்கின்றன எனப் பாஞ்சராத்திரத் தத்துவம் குறிப்பிடுகின்றது.பாகவதப் புராணத் தில் மொத்தம் 28 அவதாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. பாஞ்சராத்திர இலக்கியங்களில் மொத்தம் 38 அல்லது 39 அவதாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. தாய்லாந்திலும் நாராயணன் 20 அவதாரங்கள் எனும் ஓலைச்சுவடி பாங்காக்கி லுள்ள தேசிய நூலகத்தில் இருக்கின்றது. ஆகையால் புகழ் வாய்ந்த அவதாரங்களைத் தவிர, துணை அவதாரங்கள் தொடர்பான கதைகளும் தாய்லாந்து, கம்போடியா முதலிய நாடுகளுக்குச் சென்றன எனத் தெரியவருகின்றது. ஆகையால் நாராயணனின் அவதாரங்களை, அவதாரா, அவேசா, அம்சா என முப்பிரிவுகளாகப் பிரிக்கின்றார்கள். முழுதெய்வத் தன்மை யுடையவர் அவதாரம். முழுமையிராத அவதாரங்களை அவேசா எனக் குறிப்பிடுகின்றனர். சிறிதளவு தெய்வத்தன்மை கூறுகளை உடையவர்களை உப அவதாரா அல்லது அம்சா எனக் குறிப் பிடுகின்றனர். தாய்லாந்திற்கும் இம்முப்பிரிவு அவதாரா தத்து வங்கள் சென்றன என நாராயணனின் 20 அவதாரம் எனும் ஓலைச் சுவடித் தெளிவாக்குகின்றது.

எல்லாம் வல்ல இறைவன் விஷ்ணு, உலோகம், கல், ஈரக் குழைவான மண் முதலியவைகளில் உருவாக்கப்பட்டச் சிலை களுக்குள் விஷ்ணு தெய்வசக்தியுடன் இறங்கி ஆட்கொள்வார், அருள்புரிவார் எனப் பாஞ்சராத்திரத் தத்துவத்தில்கூறப்பட்டிருக் கின்றது. மேலும் திருக்கோயிற்பணி தொடர்பானச் சடங்கு களைச் செய்த பிறகுதான் இச்சிலைகளுக்கு விஷ்ணுவின் அருள் கிடைக்கும். இவ்வாறு விஷ்ணுவின் அருளோடு கலந்திருக்கும் சிலைகளை ‘அர்சா’ எனப் பாஞ்சராத்திரத்தத்துவம் குறிப்பிடு கின்றது. ஆகையால் தெய்வத் தன்மை வாய்ந்த நற்குறியுள்ள விக்ரகங்களே அர்சாவிக்ரகம் என அழைக்கப்படுகின்றன.

அர்சா விக்ரக நம்பிக்கை தாய்லாந்து, கம்போடியா முதலிய நாடுகளுக்கும் சென்று பரவியிருக்கிறது. தாய் பிராமணர்கள்

கொண்டாடும் திருவெம்பாவை—திருப்பாவை விழாவின்பொழுது அர்சா தத்துவத்தின் தாக்கத்தைக் கண்கூடாகப் பார்க்கலாம். பாற்கடலைத் திறக்கும் சடங்கு. பிறகு தெய்வத்தன்மையுடன் விஷ்ணு, கோவில்விக்ரகத்திற்குள் இறங்கி நுழைந்து விக்ர கத்தை ஆட்கொண்டு அருள்புரியும் சடங்கு முதலியவைகள் செய்யப்படுகின்றன. பாடல்கள், உணவுகள், முதலியவைகளை இரவுகளில் படைத்து வணங்கிய பிறகு அம்சரத்தில் விஷ்ணுவை ஏற்றி அமர்த்தி, வழியனுப்புகின்றார்கள். இவ்வழியனுப்புச் சடங்கின் மூலம் வானுலகத்தின் கதவுகளை அடைக்கின்றார் கள். ஆகையால் அர்சா தத்துவத்தின் தாக்கத்தை இன்றும் தாய் லாந்தில் தாய் பிராமணர்களிடையே பார்க்கலாம்.

எல்லார் உள்ளேயும் ஆட்சிசெய்யும் அரசர் விஷ்ணுவே, ஆகையால் அவர் நம் உள்ளே இருப்பவர், அந்தர்யாமின் எனப் பாஞ்சராத்திரத் தத்துவம் குறிப்பிடுகின்றது. தாய் பிராமணர்களிடையேயும் இந்த அந்தர்யாமின் தத்துவத்தின் தாக்கத்தைப் பார்க்கலாம். ஆத்மன், அனாத்மன் தத்துவ சர்ச்சை இன்றும் தாய்லாந்தில் நடைபெறுகின்றது. ஓம் நமோ லக்ஷ்மி நாராயணா எனும் மந்திரத்தை இன்றும் தாய் பிராமணர்கள் தினம் ஜபம் செய்கின்றார்கள். இம்மந்திரத்தின் உதவியின் மூலம் பிரம்மனின் அருளைப் பெற வேண்டும் என்பதே அவர் களின் உள் நோக்கமாகும்.

மேலும் பாஞ்சராத்திரத் தத்துவத்தில் லக்ஷ்மிக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டிருக்கின்றது. நாராயணன் வானிலிருந்து இறங்கிவரும் போதெல்லாம் லக்ஷ்மியும் அவருடன் எப்பொழுதும் இணைந்து வருகின்றாள். இருவரும் இணைபிரியாதவர்கள். ஆகையால்தான் இருவரையும் பிரிக்காத ஓம் லக்ஷ்மிநாராயணா எனும் மந்திரம் தாய் பிராமணர்களால் ஜபிக்கப்படுகின்றது. திருவெம்பாவை,—திருப்பாவைத் திருவிழாவின் பொழுதும் நாராயணன் மனைவிகள் லக்ஷ்மி, மகேஸ்வரியுடன் பாற்கடலி லிருந்து கிளம்பி வருகின்றார். மேலும் இத்திருவிழாவின் பதினைந்தாம் நாள் விழாவின் பொழுது நாராயணனுடன் லக்ஷ்மி, மகேஸ்வரிக்கும் வழியனுப்புதல் விழா நடைபெறு கின்றது. பாங்காக் தேசிய நூலகத்திலுள்ள "தலைப்பில்லா வண்ண மெருகூட்டு கையெழுத்துப்படியில்" லக்ஷ்மியுடன் நாராயணன் இணைந்து இருக்கும் படங்களைப் பார்க்கலாம். மேலும் தாய்லாந்தில் கருடன் முதுகில் அமர்ந்திருக்கும் விஷ்ணு வின் உருவங்கள் பலவற்றையும் விஷ்ணு லக்ஷ்மி ஒன்றாக இருக்கும் சிலைகளையும் பார்க்கலாம். ஆகையால் பாஞ்ச

ராத்திரத் தத்துவம் தாய்லாந்தில் செல்வாக்குடன் தழைத் தோங்கியிருக்க வேண்டும் எனப் புலனாகின்றது.

பாஞ்சராத்திரத் தத்துவம் இந்தியாவிலிருந்து, குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து கம்போடியா, தாய்லாந்து முதலிய நாடு களுக்குப் பரவியது எனச் சான்றுகள் கிடைக்கின்றன. நாராயணனே இத்தத்துவத்தை அளித்து அருள் புரிந்தார் என நம்புகின்றனர். வடஇந்தியாவில் இத்தத்துவம் தோன்றிய போதிலும், தென்இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் இத் தத்துவம் தொடர்பானச் சாஸ்திர நூல்கள் வரையப்பட்டன. சேர, சோழ, பாண்டியர்கள் தொடர்பானச் செய்திகளை இந் நூல்களில் பார்க்கலாம். அத்யாயன உற்சவம், ஆண்டாள் அருளிய பாடல்கள், தெப்போற்சவம், ஆழ்வார்கள் தொடர் பானக் குறிப்புரைகளை இந்நூல்களில் காணலாம். எடுத்துக் காட்டாக அனிருத்தசம்ஹிதா, நாராயணசம்ஹிதா, உபேந்திர சம்ஹிதா முதலிய நூல்களில் இம்மாதிரியானக் குறிப்புரைகளைக் காணலாம். தமிழ்ச் சொற்கள் கூடச் சில நூல்களில் பயன்படுத் தப்பட்டிருக்கின்றன. மேலும் நாதமுனி, வேதாந்த தேசிகர், ஆழ்வார்கள் முதலிய தமிழர்கள் தொடர்பானக் குறிப்பீடு களையும் இந்நூல்களில் காணலாம். இவர்களைப் பற்றிய குறிப்பு சில ஆகமநூல்களில் வருவதால், அத்தமிழர்கள் வாழ்ந்த காலத்திலோ அல்லது அவர்களுக்குப் பின்போ இந்நூல்கள் வரையப்பட்டிருக்க வேண்டும். ஆகவே கி.பி. 800 ஆம் ஆண்டி லிருந்து கி.பி. 1400 ஆம் ஆண்டு வரை பல பாஞ்சராத்திர ஆகமநூல்கள் வரையப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கி.பி. 800 ஆம் ஆண்டில் வாழ்ந்த உத்பாலா, பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த யமுனா, பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமானுஜர் தமது நூல்களிலே சில பாஞ்சராத்திர ஆகமநூல் களைக் குறிப்பிடுவதால் சில முக்கிய பாஞ்சராத்திரச் சம்ஹிதைகள் கி.பி. 800 ஆம் நூற்றாண்டுக்கு முன் எழுதப் பட்டிருக்க வேண்டும். கி.பி. 750-850 ஆண்டுகளுக்கிடையே வாழ்ந்த தொண்டரடிப் பொடிஆழ்வார், திருமங்கை ஆழ்வார் கட்டிய, பௌஷ்கார சம்ஹிதையில் புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் திருச்சிராப்பள்ளி ஸ்ரீரங்கம் கோயில் பாஞ்சராத்திர ஆகம முறைப்படி விபிஷணரால் தெய்வப் பண்புள்ளதாக்கப்பட்டது (Consecrated). பரமேஸ்வர சம்ஹிதை, பௌஸ்கார சம்ஹிதை முதலிய நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆகமமுறை வரம்பு மீறாத முறையில் ஸ்ரீரங்கம் கோயில் கட்டப்பட்டிருப்பதால் இவ் விரண்டு பாஞ்சராத்திர ஆகமநூல்களும் கி.பி. 700-க்கு முன்

வரையப்பட்டிருக்க வேண்டும். மேலும் பல்லவ மகாபலிபுரம் கோவில் மூலமாகவும், ஆழ்வார்கள் மூலமாகவும் பாஞ்சராத்திர அவதாரத் தத்துவம் தமிழ்நாட்டில் பிரபலமடைந்தது.

ஆகையால் ஆழ்வார்கள் பரப்பிய பாஞ்சராத்திரத் தத்துவம், பிரம்மசூத்திரத்தில் (11, 2, 42-45) உள்ள பாஞ்சராத்திரத் தத்துவத்தைப் பற்றிய கி.பி. 800 ஆம் ஆண்டில் வாழ்ந்த சங்கராச்சாரியாரின் விளக்கம், எட்டாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் ஆகமமுறைப்படிக் கட்டப்பட்ட ஸ்ரீரங்கம் கோயில் முதலிய சான்றுகள் மூலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டளவிலேயே பாஞ்சராத்திரத் தத்துவம் தமிழ்நாட்டில் பொதுமக்களிடையே வழங்குகிற தத்துவமாக இருந்தது எனப் புலனாகின்றது. ஆகையால் தென்கிழக்காசியநாடுகளுக்கு இத்தத்துவம் பல்லவர்கள் காலத்திலேயே சென்றிருக்க வேண்டும். தமிழ் வைணவ பாசுரங்கள், குறிப்பாகத் திருப்பாவை பதின்மூன்றாம் நூற்றாண்டிலே சென்றிருக்கின்றது எனும் சான்றுகள் இருப்பதாலும் சோழர்கள் காலத்திலும் வைணவப் பாஞ்சராத்திரத் தத்துவம் தொடர்ந்து தென்கிழக்காசியாவில் பரவியிருக்க வேண்டும் என ஓரளவு உறுதியாகக் கூறலாம்.

கருடாண்டிக உருப்படிவம் (Garudantika) தமிழ்நாட்டில் மட்டும், குறிப்பாக முற்காலப் பாண்டிய, பல்லவர்கள் சிற்பங்களில் காணலாம். பிற தென்இந்திய மாநிலங்களிலும் வட இந்தியாவிலும் இக்கருடாண்டிக உருப்படிவ வைணவச் சிற்பங்களைக் காண முடியாது. மானிட உருவில் இருக்கும் கருடன் பறந்து கொண்டு, தன்னுடைய தோள்களில் விஷ்ணுவையும், அவருடைய கால் பாதங்களை, மேல்நோக்கி இருக்கும் தன்னுடைய உள்ளங் கைகளிலும் தாங்கிகொண்டு இருக்கும் கருட வாகன சிற்பங் களைப் பல்லவ, முற்காலப் பாண்டியர் குகைகோயில்களில் மட்டும்தான் பார்க்கலாம் (Champaka lakshmi: 1981: 231) கருடன் விஷ்ணுவைத் தூக்கிச் செல்லும் சிற்பங்களைத் தாய்லாந்திலும் பார்க்கலாம். எடுத்துக்காட்டாகப் பாங்காக்கில் உள்ள எமரால்ட் புத்தர்கோயிலில் கருடன் விஷ்ணுவைத் தூக்கிச் செல்லும் சிற்பத்தைப் பார்க்கலாம். அதுபோலவே பீமாய் எனும் பௌத்த கோயிலின் கிழக்கு வாயிலின் மேலே உள்ள போதகத்திற்கு அடுத்துள்ள மேற்சட்டைகளில் கருடன் மீது அமர்ந்த விஷ்ணு, அனுமன் சிற்பங்கள் அணி செய்கின்றன. பொதுவாக விஷ்ணுவைத் தூக்கிச் செல்லும் கருடவாகனம் கவர்ச்சிச் சின்னமாகத் தாய்லாந்தில் காணப்படுகின்றது.

விஷ்ணு அறிதுயில் நிலையில் (Sayana pose) உள்ள சிற்பங்களும் படங்களும் தாய்லாந்திலும் கம்போடியாவிலும் பார்க்கலாம். விஷ்ணுவின் அறிதுயில்நிலைக் காட்சிகளைத் தென் இந்தியாவில்தான் குறிப்பாகக் காணலாம். வடஇந்தியாவிலும், கிழக்கு இந்தியாவிலும் இம்மாதிரியான காட்சிகளுடைய படங்களையும், சிற்பங்களையும் காண்பது அரிது.

மேலும் தாய்லாந்தில் விஷ்ணு தன் இரு மனைவிகளான லக்ஷ்மி, மகேஸ்வரியுடன் இருப்பதைப் பார்க்கலாம். வட இந்தியாவில் லக்ஷ்மி மட்டும்தான் விஷ்ணுவின் மனைவி. பூதேவியும், நாராயண நீல தேவியும் முறையே விஷ்ணுவின் இரண்டாம் மூன்றாம் மனைவிகளெனத் தென்னிந்தியச் சிற்பங்கள் மூலம் கண்டு அறியலாம். ஆகையால் தென்னிந்திய பூதேவியே காலப் போக்கில் மஹேஸ்வரியாகத் தாய்லாந்தில் மாறியிருக்க வேண்டும் என ஊகிக்கலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட தொடர்புச் சான்றுகள் மூலம் சிறப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து பாஞ்சராத்திர ஆகம நெறியும், வைணவ வழிபாடும் தாய்லாந்திற்கும், கம்போடியாவிற்கும் சென்று பரவியது எனக் கருதலாம்.

தாய்லாந்தில் சிவ வழிபாடும், விஷ்ணு வழிபாடும் இருந்த போதிலும், வழிபாடு செய்தவர்களிடையே இக்கடவுள்கள் வழிபாடு தொடர்பான மனக்கசப்போ விரோதமோ இருந்ததாகச் சான்றுகள் இல்லை. தமிழ்நாட்டு ஸ்மார்த்த பிராமணர்களைப் போல விஷ்ணு, சிவன் முதலிய இரண்டு தெய்வங்களையும் அன்புடன் தாய்மக்கள் வழிபட்டனர். மேலும் அரை-விஷ்ணு, அரைசிவன், உருவமான ஹரிஹரனுடைய உருவச்சிலைகள் முதலாம் ஈசானவர்மன் காலத்திலேயே கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தாய்லாந்தில் இருந்ததாகக் கல்வெட்டுச் சான்றுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. (Singaravelu: 1966: 29) ஆகையால் விஷ்ணு வழிபாட்டு வெறியோ சிவ வழிபாட்டு வெறியோ தாய்லாந்தில் தனித்தனியாக இருந்ததில்லை. இரண்டு தெய்வங்களையும் பக்தியுடன் வழிபடும் தமிழ்நாட்டு ஸ்மார்த்த பிராமணச் சம்பிரதாய முறையே வளர்ச்சியடைந்திருந்தது.

தாய்லாந்தில் தேரவாத புத்தசமயம் பரவிய பிறகும் தாய்லாந்து அரசர்கள் விஷ்ணு, சிவன் வழிபாட்டைக் கைவிடவில்லை. அவ்வழிபாடு தாய் பிராமணர்கள் மூலம் வளர்ச்சியடைவதற்கு ஆதரவு அளித்தனர். மன்னர் முடிசூட்டு விழாவின் போதும் விஷ்ணு, சிவன், கடவுள்களுக்கு முதன்மை இடம்

அளிக்கப்பட்டன, தமிழ் மந்திரங்கள் ஓதப்பட்டன. ஆகையால் சைவமும், வைணவமும், தமிழ் மந்திரங்களும் தொடர்ந்து சிறப்பிடம் பெற்றன. புத்த சமயத்தைத் தழுவிய மன்னர்களாக ஆட்சிசெய்த பொழுதிலும், தங்களை நாராயணன், விஷ்ணு என அழைத்துக்கொள்ள தாய்லாந்து மன்னர்கள் விரும்பினார்கள். எடுத்துக்காட்டாகப் பதினான்காம் நூற்றாண்டில் அயோத்தி நாட்டை ஸ்தாபித்த மன்னர் இராமாதிபதி தன்னை நாராயணனோடு ஒப்பிட்டுக் கொண்டதோடு அல்லாமல், ஆண்டுதோறும் முறைப்படி நாராயணன் பூசை நகர ஸ்ரீதர்மராஜாவில் நடைபெறவேண்டும் எனவும் ஆணையிட்டார். தாய் மன்னர்கள் தங்கள் பெயரை, நாரை (நாராயணன்) என்றும் இராமா என்றும் சூட்டிக்கொண்டனர். மன்னர் முதலாம் இராமா தன்னுடைய அவை அறிஞர்கள் உதவியோடு தாய் இராமாயணத்தை எழுதினார்.

தங்களுடைய விளக்கப் பேருரைகளின் பொழுதும் தாய் புத்தசமய குருமார்கள் விஷ்ணு, பிற இந்து தேவர்களைப் பற்றியும் குறிப்பிடும் வழக்கத்தை இன்றுகூடப் பார்க்கலாம்.

தாய் பிராமணர்கள் இன்றும் முறைப்படிச் சிவனையும் விஷ்ணுவையும் வழிபடுகின்றனர். பாங்காக்கில் தாய் பிராமணர் கோயில் இருக்கின்றது. அங்கே மூன்று கோயில்கள் இருக்கின்றன. ஒன்று பிள்ளையார் கோயில், இரண்டாவது தென்புறத்திலிருக்கும் சிவன்கோயில், மூன்றாவது வடபுறத்திலிருக்கும் விஷ்ணுகோயில். அந்தப் பெருமாளின் பெயர். சுகோதயப் பெருமாள். சுகோதயம் என்பது தாய்லாந்தின் பெயர். சுகோதயம் என்றால் இன்ப விடியல் என்று பொருள். இக் கோயில்கள் மூன்று சதுரக்கட்டடங்களாக உள்ளன. வெளியிலிருந்து பார்த்தால் தாய்லாந்து நாட்டுக் கட்டிடங்கள் போல் இக்கோயில்களின் கூரைப்பகுதி விளங்கும். உட்புறத்தில் நம் நாட்டைப் போல வெள்ளையடித்திருப்பார்கள்.

கோயில்களின் வாயிற்புறம் கிழக்குநோக்கியே இருக்கும். கோயிலுக்குள் மேற்கு எல்லையில் கடவுள் திருமேனி அமர்ந்திருக்கக் காணலாம். கட்டிடத்தின் நடுவே ஊஞ்சற் கம்பங்கள் இரண்டு நடப்பெற்றிருக்கும் இரண்டு கம்பங்கட்கிடையே அமைந்த குறுக்குச் சட்டத்திலிருந்து திருவிழாவின்போது தொட்டிலைத் (ஊஞ்சற் பலகையை) தொங்கவிடுவார்கள்.

சிவன் கோயிலில் பல திருமேனிகள் உள்ளன. சிவனும் உமையும் வெள்ளைநிற மேற்கட்டின் கீழ் காட்சியளிக்கக் காண

லாம். இருபுறத்தும் ''எருதேறும் நாயனார்'' (ரிஷ பாருடர்) திருமேனியுண்டு. முன்காலத்தில் 'ஹரிஹரர்' கோலங்கொண்ட திருமேனி இருந்ததாம். அது காட்சிச்சாலைக்குச் சென்று விட்டது. இந்த வடிவம் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றும், சோழர்கள் அமைத்த திருமேனி வடிவத்தோடு ஒத்த தென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகினறனர்.

திருவெம்பாவை—திருப்பாவைத் திருவிழா சேவையின் போது முதலில் ஓதப்படும் பாசுரம் தேவாரத்திலிருந்து எடுக்கப் பட்ட ''ஆதியும் அந்தமும்...'' பாசுரம் ஆகும். ஒவ்வொரு சடங் கின் போதும் தேவாரப் பாசுரமான ''பித்தா பிறைசூடி'' பாடப்படுகின்றது. இத்திருவிழா சிவன் கோயிலில் (ஈசன் கோயில் எனத் தாய்மக்கள் அழைக்கின்றார்கள்) பொதுவாகப் பத்துநாள் நடக்கின்றது. இத்திருவிழா பாங்காக்கில் நடப்பதற்கு முன் தாய்லாந்தில் முன்னைய தலைநகரங்களாகிய அயோத்யா விலும், சுயோதத்திலும் நடந்தன என்பதனைக் காட்டஅங்கும் ஊஞ்சற் கம்பங்கள் இன்றும் நின்று நிலவுகின்றன. மற்றைய நகரங்களில் எல்லாம் இந்தத் திருவிழா நடைபெற்றதாம். நகர ஸ்ரீதர்ம ராஜா என்ற இடத்தில் ஊஞ்சல் இன்றும் நின்று கொண்டிருக்கிறதாம். எனவே தமிழ்ப்பண்பாடு பரவிய உண்மை இதனால் நன்கு விளங்குகின்றது.

நாள்தோறும் மாலை வேளையில் திருப்பாவை, திருவெம் பாவைப் பாராயணம் முடிந்தவுடன் கணேசர் கோயிலில்முதலில் பூசை தொடங்கும். தூபதீப நைவேத்திய ஆராதனையைத் தலைமை குரு நடத்துவார். அடுத்து பூவினால் அருச்சனை செய்யப்படும். வழிபாட்டில் வெண்சங்கும், திருசங்கும் ஊதப் படும்; தப்பட்டை மேளதாளங்கள் முழங்கும்; தமிழ் மந்திரம் ஓதப்படும் தீபாரதனை, தமிழ்நாட்டுக் கோயில்களைப்போலவே பல தட்டுக்களையும், பல கிளைவிளக்குகளைக் கொண்டும் கற்பூரத்தை ஏற்றியும் செய்யப்படும். பிறகு ஒன்பது மெழுகு வர்த்திகள் பொருத்தப்பட்ட தட்டினால் தீபராதனை செய்யப் படும். வழிபாட்டை நடத்தும் தலைமைகுரு, இடது கையில் பிடித்த பூசைமணியை ஆட்டிக் கொண்டே, பூசை செய்வார். பூசை முடிந்தவுடன் ''நீர் வளாவி'' நிலத்தில் அடிமுடியதோய எல்லோரும் வீழ்ந்து வணங்குவர். பிறகு இறைவனுக்குப் படைக்கப்பட்ட சுண்டல், பொங்கல் போன்றவை தரப்படும். அவற்றை உண்டுவிட்டுக் காப்புக்கட்டிக் கொண்டுப் பிராமணர் அனைவரும் கோயில்களைச் சூழ்ந்துள்ள முற்றத்திலேயே படுத்துறங்குவர்.

பண்டைக்காலத்தில் திருவெம்பாவை—திருப்பாவைத் திருவிழாவோடு இணைந்த ஒன்றாகவே திருவூசல் விழா நடைபெற்று இருக்கவேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். சிவன் கோயிலுக்கும் திருமால் கோயிலுக்கும் இடையே உள்ள இடைவெளியில் பெரிய ஊஞ்சல் கம்பங்கள் இன்றும் உள்ளன. அவற்றுக்கு இடையே குறுக்குச் சட்டம் பொருத்தப்பட்டுள்ளது. அச்சட்டத்தில் ஊஞ்சலை மாட்டுவதற்குரிய வளையங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதனைப் பழைய திருவிழாவின் நினைவுச் சின்னமாகக் கருதுகின்றனர். திருவூசல் திருவிழாவில் அடிக்கடி கொடுமையான விபத்துக்கள் நேர்ந்தமையால் அவ்விழா நிறுத்தப்பட்டதாகத் தாய்லாந்து மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆண்டுதோறும் இரண்டு நாட்கள் தாய்லாந்தில் திருவூசல் (ஊஞ்சல்)திருவிழா கொண்டாடப்பட்டு வந்தது. அறுவடைக்குப் பின்னர், இயற்கை அன்னைக்கு நன்றி செலுத்தும்வகையில் திருவூசல் திருவிழா நடத்தப்பட்டது. அவ்விழாவினை ‘லோஜின் ஓர்’’ என்று சுட்டுகின்றனர். இதற்கு ‘‘ஊஞ்சலை வலிப்பது’’ என்பது பொருளாகும். இத்திருவிழாவும், திருவெம்பாவை—திருப்பாவைத் திருவிழாவைப் போலத் தேசிய திருவிழாவாகக் கொண்டாடப்பெற்றது.

பாங்காக் தாய் பிராமணர்கள் கோயில் கட்டிடத்தின் நடுவே ஊசலாடுவதற்குரிய கம்பங்கள் இரண்டு நடப்பட்டு உள்ளன. அந்தக் குறுக்குச் சட்டத்திலிருந்து திருவிழாவின் போது ஊஞ்சல் பலகையைத் தொங்கவிடுவார்கள். இந்தத் திருவிழாவின்போது, முதல்நாள் காலையில் ஓர் ஊர்வலம் புறப்பட்டு ஊஞ்சல் இருக்கும் இடத்திற்குச் செல்லும். ஊர்வலம்வந்தவுடன் சில சடங்குகளைத் தாய் பிராமண புரோகிதர்கள் செய்வர். அவ்விழாவில் உயர்ந்த அரசாங்க அதிகாரி ஒருவர் கலந்துகொள்வார். அவருடைய தலைமையின்கீழ் நன்னான்கு தாய் பிராமணர்கள், மூன்று குழுக்களாக வந்து பெரியதோர் ஊஞ்சலில் அமர்ந்து ஆடுவர். அவர்கள் தலையில் பாம்புமுடி அணிந்திருப்பார்கள்.

இந்த ஊஞ்சலுக்குச் சிறிது மேற்குப் பக்கத்தில் ஒரு மூங்கிற் கழி நடப்பட்டிருக்கும். ஒவ்வொரு குழுவும் ஊஞ்சலாடும் பொழுதும் அம்மூங்கில் கழியில் ஒரு பொற்கிழியைக் கட்டுவார்கள். ஊஞ்சலைக் கீழே இருந்து இழுத்து ஆட்டுவார்கள். விரைவாக ஊஞ்சல் ஆடும்பொழுது ஊஞ்சலில் உள்ளவர்கள் பொற்கிழியைப் பல்லால் கடித்து இழுத்திட முயலுவார்கள். இவ்வாறு

ஆடும்பொழுது அப்பணமுகப்பைத் தங்கள் பற்களால் பற்று கின்றவருக்கு, அப்பொற்கிழி பரிசாக அளிக்கப்படும்.

இத்திருவிழா விளையாட்டுத் தொடர்பாக க.த. திருநாவுக் கரசு (**1987·266—268**) கீழே அளிக்கப்பட்டுள்ள விளக்கத்தை அளிக்கின்றனர்:- ''இந்தச் சமய விளையாட்டு தமிழ்நாட்டில் அண்மைக்காலம் வரையில் கிருஷ்ணஜயந்தியை முன்னிட்டுக் கொண்டாடப்பட்ட விளையாட்டுகளில் சிறந்ததான உரியடி விழாவைப் போன்று காணப்படுகிறது. ஊஞ்சலுக்குப் பதிலாகத் தமிழ்நாட்டில் பொற்கிழியும் தின்பண்டங்களும் கட்டப்பட்டு உள்ள உயர்ந்த மூங்கில் கம்பத்தின் உடலில் எண்ணெயைப் பூசி வழுக்குமாறு செய்வார்கள். இதனோடு அவ்வுரியடி மரத்தில் ஏறுகிறவர்கள்மீது கீழிருந்து ஓயாமல் தண்ணீரை அடித்துக் கொண்டே இருப்பார்கள். இந்த இடர்ப்பாடுகளை எல்லாம் வென்று கம்பத்தின் உச்சிக்குச் சென்றவன் வாயினாலேயே பொற்கிழியையும் தின்பண்டங்களையும் கவ்வவேண்டும். அவனு டைய வாய்க்கு எளிதில் கிட்டாவண்ணம், அவற்றைக் கீழிருந்த படியே கயிறு ஒன்றினால் மேலும் கீழுமாக இழுத்தும், பக்கங் களில் சென்றுவருமாறு ஆட்டியும் வேடிக்கை காட்டுவர். இந்தத் தடைகளையெல்லாம் பொருட்படுத்தாமல் யார் பொற்கிழி யையும் தின்பண்டங்களையும் வாயினால் கவ்விப் பிடிக்கிறார் களோ அவரை அவ்விழாவின் வெற்றி வீரராகப் போற்றி மாலை அணிவித்துக் கோயிலுக்குள் பூரணகும்ப மரியாதை யோடு அழைத்துச் சென்று பாராட்டு எடுப்பர். 1950 வரையில் சென்னை நகரத்திலும் 'உரியடித் திருவிழா' சிறப்பாகக் கொண் டாடப்பட்டது. இப்பொழுது திருமால் கோயில்களும், கிருஷ்ணன் கோயில்களும் உள்ள ஊர்களில் ஒரு சடங்கு என்னும் முறையில் ஆர்வமும் கோலாகலமும் இல்லாமல் கொண்டாடப்பட்டு வருகிறது''.

தாய்லாந்தில் நடைபெற்ற சடங்கு வழிபட்ட இத்திருவிழா விளையாட்டு, தமிழ்நாட்டின் உரியடித் திருவிழாவினையே பெரிதும் ஒத்திருப்பதனைக் காணலாம்.

திருவூசல் என்பது, தமிழ்நாட்டு வைணவத் திருக்கோயில் களில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஒருவகை விளையாட்டு விழாவாகும்.

பெரும்பாலும் தாயார், சீதேவி, பூதேவி, ஆண்டாள் முதலிய பெண் தெய்வத் திருமேனிகளை ஊஞ்சலில் வைத்துப்

பாட்டுப்பாடி ஆட்டி, பிறகு தூபதீப ஆராதனை செய்வது வழக்கம்.

மங்களாசாசனம் பெற்ற திருமால் கோயில்களுள், வெள்ளிக் கிழமைகளில் மட்டும் அல்லாமல், ஆண்டுதோறும் நடைபெறும் பெரிய (பிரம்) திருவிழாக்களின் (உற்சவம்) நிறைவு நாளை ஒட்டி, இரண்டு அல்லது மூன்று நாள்கள் மாலையில் திருவூ(ஞ்)சல் திருவிழா நடைபெறுவது உண்டு. அப்பொழுது திருமாலும் மகாலட்சுமியும் ஊஞ்சலில் அலங்காரமான கோலத்தோடு அமர்த்தப்படுவர்; ஊஞ்சலாட்டப்படும்; இனிய கீதங்கள் இசைக்கப்படும்.

இத்தகைய ஊஞ்சல் திருவிழா திருவில்லிப்புத்தூர் திருக்கோயிலில் இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதைப் போன்றே ஒருவகை ஊஞ்சல் (டோலி) திருவிழாவே தாய்லாந்து கோயில்களில் கொண்டாடப்பட்டதாகத் தெரிகிறது.

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரைத் திருநாளில் தஞ்சை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் உள்ள சிவன் கோயில்களில் 'திருவூசல்' திருவிழா நடைபெற்று வருகிறது. மாணிக்கவாசகரால் சிறப்பாகப் போற்றப்பட்ட திருப்பெருந்துறை எனும் ஆவுடையார் கோயிலில் திருவாதிரை அன்று மாலை, இறைவனையும், உமா மகேஸ்வரியையும் ஊஞ்சலில் அமர்த்தி திருவாசகத்தில் உள்ள 'திருப்பொன்னூஞ்சல்' பகுதிப் பாடல்களைப் பாடி, ஊஞ்சலாட்டும் சடங்கு ஒன்று செய்யப்பட்டு வருகிறது.

மார்கழித் திருவாதிரைத் திருநாளில் பிறந்த முதலாம் இராசேந்திர சோழன் ஆட்சிக்கு (கி. பி. 1016) வந்த பிறகு, இந்தத் திருவிழாவைச் சிவன் கோயில்களில் பெருஞ்சிறப்பாகக் கொண்டாடும் வழக்கம் உண்டாயிற்று. அந்த விழாவின் ஒரு பகுதியே மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் உள்ள 'திருப்பொன்னூஞ்சல்' பாடல்களைப் பாடி, ஆடவல்லானையும் சிவகாமி அம்மையையும் ஊஞ்சலில் வைத்து, ஊஞ்சலாட்டுவதாகும். இந்தப் பழக்கம் தஞ்சை மாவட்டப் பட்டி தொட்டிகளில் எல்லாம் திருவாதிரை நாளில் முறைப்பெண்களை ஊஞ்சலில் இருத்தி, அவர்களை மணக்கப்போகும் முறை மாப்பிள்ளைகள் ஊஞ்சலாட்டும் வழக்கமாக மாறியதை அறிகிறோம். இந்த ''ஊஞ்சலாட்டுத்'' திருவிழாவே தாய்லாந்தில் ஒருவகை சமயத் திருவிழாவாகக் குடியேறி இருந்திருக்கிறது.

''பாவை நோன்பு'' எனவும் ''தைந்நீராடல்'' எனவும் ''மார்கழி நோன்பு'' எனவும் சொல்லப்படும் திருவிழா, தமிழகத்தில் பெண்களால் பெரிதும் போற்றப்படும் விழாவாக இன்றும் நடைபெற்று வருவது யாவரும் அறிந்த செய்தி. இந்தத் திருவிழா, தாய்லாந்தில் பெருஞ்சிறப்புடன் கொண்டாடப்பட்டு வந்தது. 1939-இன் பின் இவ்விழா குறுகிய நிலையில், தாய் லாந்து பிராமணரால் கோயிலில் முக்கியமான வைதீக விழா வாகக் கொண்டாடப்படுகிறது. தாய்லாந்தில் நடைபெறும் இவ் விழாவில் பெண்கள் இடம் பெறுவதில்லை. தாய்மக்கள் இதனை ஒரு மழைத் திருவிழாவாகக் கொண்டாடினர்.

தாய்மக்களின் பழைய மழைத் திருவிழாவில் அரசன் தலைமையேற்பான். அவன் முன்னிலையில் திருவிழா நடை பெறும். அந்த அரசனைத் திருவருள் புரியுமாறு வேண்டிக் கொள்வர். அவனை அன்றி வேறு யாரையும் அரசனாக ஏற்றுக் கொள்ளுவதில்லை எனும் சூளுரைத்து, அவனைப் போற்றி வழி படுவர். இதற்கு ஏற்ற வகையில் கண்ணனை வழிபடும் ஆயர் மகளிர் ''அவனையன்றி வேறுஎவருக்கும் வாழ்க்கைப்படோம்'' எனும் உறுதிப்பாட்டை எடுத்துரைக்கும் ஆண்டாளின் 'திருப் பாவைப் பாசுரங்களைப் பாடுவர்'. இவ்வகையில் திருப்பாவை தாய்களின் பழைய வழக்கமாய் அமைந்து அவர்களை வாழ்வித்தது.

தாய்லாந்து மக்களிடையே தீபாவளி, கார்த்திகை விளக்கு என்று நாம் கூறுவது போன்ற வழிபாடும் இருந்திருக்கக் காண கிறோம். அவர்களுடைய ஆண்டு மார்கழியில் தொடங்கும். அவர் களுக்குப் பன்னிரண்டாவது மாதம் கார்த்திகையாகும். அப்போது சூரியன் விருச்சிகத்தில் இருப்பான். கார்த்திகை நட்சத்திரம் நன்றாக விளங்கும்போது விளக்கைக் கொம்பில் அவர்கள் தூக்கி விடுவது உண்டு. சயதீபத்தம்பத்தை அன்று காலை அரசர் பெருமானார் தீர்த்தம் தெளித்துப் புனிதமாக்கு வார்.அரசர் அவ்வாறு தீர்த்தத்தைத் தெளிப்பதற்குப் பிராமணர் களே நீரைத் தருவர்.

மற்றொரு திருவிழாச் சடங்கும் சென்ற நூற்றாண்டில் நடந்து கொண்டு வந்தது. முதலில் அது கார்த்திகை மாதத்தில் நடைபெற்றது என்றும், பின்னர் ஊஞ்சல் திருவிழா தை மாதத்தில் கொண்டாடப் பெற்றபோது, இத்திருவிழா மார்கழி மாதத்தில் கொண்டாடப்பெற்றது என்றும் கூறுவர் அறிஞர் வேல்ஸ். நான்கு முழ உயரமுள்ள மூன்று மேடைகளைப் பாங்

காக் தாய் பிராமணர்களின் மூன்று கோயில்களின் எதிரே அமைப்பார்களாம். ஒவ்வொரு மேடையின் நாற்புறத்தும் மணலும் சாணமும் கொண்டு மலை என்ற பெயரால் நான்கு குவியல் குவிப்பார்கள். ஒவ்வொன்றும் ஒரு முழ உயரம் இருக்கும். நூல் சுற்றிய புதுக்குடங்கள் மூன்றினை ''இரத்தின கலசம்'' எனப் பெயரிட்டுப் பிராமணர் கொண்டு வருவர். ஒரு துத்தநாகக் குழையில் நான்கு பருத்தித் திரிகளை அமைத்து, குடத்தில் செருகுவார்கள். குடத்திற்குள் எள், பருப்பு (நவதானியம்) முதலியவற்றைத் தனித்தனியே துணியில் கட்டி வைப்பார்கள். ''கோதண்டம்'' எனப் பன்னிரண்டு குச்சிகளைக் கொண்டு வருவர். இவை ஒவ்வொன்றும் நான்கு முழ நீளம் இருக்கும். ஒவ்வொன்றின் இரு நுனிகளிலும் துணியைச் சுற்றி வைத்திருப்பர். இரவானதும் அரசகுரு அக்குச்சிகளையும் குடத்தையும் தூய்மைப்படுத்திக் குடத்தில் உள்ள திரிகளை ஏற்றுவார். குடங்களை மேடையின் அருகேயுள்ள கம்பங்களின் மேல் வைத்துவிட்டு, குச்சிகளின் முனைகளை ஏற்றி, ஒன்றன் பின் ஒன்றாக மலைகளை நோக்கி எறிவார். அவை விழும் திசையைக் கொண்டு நன்மை, தீமை அறிவதும் உண்டு. அரசகுரு இரத்தினக் கலசத்திற்குப் பொரியைப் பலியாக வழங்குவார். இவ்வாறு மூன்று இரவு இரத்தின கலசத்தில் உள்ளவை எரிந்து கொண்டிருக்கும். மூன்றாம் நாள் கலசங்களைக் கோயிலுக்குக் கொண்டு சென்று தீர்த்தத்தால் நெருப்பை அவிப்பார்கள்.

முதலில் கூறிய சயப் பிரதீபத் தம்ப விழாவோ வைணவர்கள் செய்வது. பின்னே கூறியதோ கார்த்திகேயன் திருவிழா என வழங்கும். இரண்டும் கார்த்திகைத் திருநாளின் தொடர்புடையவை என்பதை வற்புறுத்த வேண்டியதில்லை. ''மலை'' என அமைத்து அதன் முடிவில் குடவிளக்கேற்றுவது அண்ணாமலை தீபத்தை நமக்கு நினைப்பூட்டுவதோடு தமிழ்நாட்டு ஊர்களில் சொக்கப்பானை எரிப்பதையும் நினைப்பூட்டும்.

கார்த்திகை மாதத்திலும் ஐப்பசி மாதத்திலேயும் வாழைத் தண்டை மிதக்கவிட்டு அதில் கொடி, காகிதக்குடை, புகை விளக்கு, பூ, பொரி முதலியன வைத்து ஆற்றில் மிதக்க விடுதலும் உண்டு. இது நம் நாட்டுப் பழையதொரு வழக்கம். ஆற்றினைத் தாயாக வழிபடுவோர் இவ்வாறு வழிபடுவதை இன்றும் நம் நாட்டில் காணலாம், வடநாட்டுக் கங்கையிலும் காணலாம். இதுவன்றி, தெப்பத் திருவிழா நம் நாட்டுக் கோயில்களில் இன்றும் நிகழ்கின்றது. கடவுளர்கன்றிப் பொது மக்களுக்கும்

அத்தகைய நீர் மாடங்கள் வாய்ந்திருந்தன எனப் பரிபாடலில் அறிகின்றோம்.

தாய்லாந்தில் அத்தகைய நீர் மாடங்கள் பற்பல விளக்கு களோடு கார்த்திகைத் திங்களில் மிதக்கவிடப்பெறும். அரசர் முதலில் அணி செய்த படகொன்றை மிதக்க விடுவார். அரண் மனைப் பெண்களும் ஒவ்வொருவரும் அவ்வாறு செய்வர். பொது மக்களும் தங்களால் இயன்ற அளவு வேலைப்பாடான மிதவை களை மிதக்கவிடுவர். இப்போது இதனை, புத்தர் திருவடியினை மிதவையில் வைத்து வழிபடுவதென மக்கள் பொருள் கொண் டாலும் கார்த்திகை மாதத்தில் இக்கொண்டாட்டம் நிகழ்வதைக் கருதும் போது இது கார்த்திகை விளக்கேற்றுத் திருவிழாவோடு தொடர்புடையதென்பதில் ஐயமில்லை. 1991 ஆம் ஆண்டு நான் தாய்லாந்திற்குச் சென்றிருந்தபொழுது இத்தாய் மிதவைத் திருவிழாவும், தமிழ்நாட்டுக் கார்த்திகை தீபம் திருவிழாவும் ஒரே நாளில் (நவம்பர் 21) கொண்டாடப்பட்டன. ஆகையால் இத்திருவிழா கார்த்திகை தீபத்தோடு நெருங்கிய தொடர்புள்ளது எனக் கூறினால் தவறில்லை.

தாய்லாந்து பௌத்த சமயநாடு, குறிப்பாகத் தெரவேதா பௌத்த சமயத்தைப் பின்பற்றும் நாடு என்பதை மறக்கக் கூடாது. ஆகையால் தமிழ்நாடு, பிற இந்தியப் பகுதிகளி லிருந்தும் சென்ற, சிவ, விஷ்ணு முதலிய வழிபாட்டை அளித்த பிராமண சமயமும், புத்த சமயமும் இணைந்து வாழ்கின்றன. பௌத்த மதத்தைத் தழுவிய போதிலும் தாய்லாந்து மக்கள் சிவ, விஷ்ணு, பிரம்மா, கணேசர், இந்திரன் முதலிய கடவுள் களை மறக்கவில்லை. தொடர்ந்து லாட்டரி டிக்கட்டில் வெற்றி பெறுவதற்காகவும், குழந்தை பெறுவதற்காகவும், தேர்வில் வெற்றி பெறுவதற்காகவும், பொதுவாக உலக வாழ்க்கைத் தொடர்பானச் செயல்களில் வெற்றி பெறுவதற்காகத் தமிழ் நாட்டிலிருந்து சென்ற கடவுள்களை இன்னும் தாய் மக்கள் வழிபடுகின்றார்கள்.

ஆனாலும் விஷ்ணு, சிவனுக்குக் கீழ்நிலைப்பட்டவர், சிவனும், விஷ்ணுவும், பிற இந்துக் கடவுள்களும் இரண்டாம்படி யான கடவுள்கள், புத்தருக்குக் கீழ்நிலைப்பட்ட கடவுள்கள் எனத் தாய்லாந்து மக்கள், குறிப்பாகப் புத்த துறவிகள் கருது கின்றனர். மேலும், உண்மை ஞானம், பிராமணக் கடவுள்கள் வழிபாடுமூலம் கிடைக்காது, புத்தர் கற்பித்த மெய்ம்மை தத்துவம் மூலம்தான் கிடைக்கும், மேலும் பிராமணக்

கடவுள்களின் வழிபாடுமூலம் புத்தர் போதித்த ஒழுக்கம், சிறந்த பண்புகள் தோன்றினால் அவ்வழிபாடு செய்வதில் தவறில்லை என்றும், ஆனால் வெறும் சடங்காக மட்டும் இவ்வழிபாடு செய்தால் பயனில்லை என்றும் புத்த துறவிகள் கற்பிக்கின்றனர். அதாவது பிராமணக் கடவுள்கள் வழிபாடு மூலம் புத்தர் போதித்த பண்புகள் தோன்றினால் இம்மார்க்கம் நிர்வாணம் அடைவதற்கு உதவும் கருவியாக அமையும் எனப் புத்த சமய குருமார்கள் போதிக்கின்றனர். பொதுவாக உலக ஆசைகளை அனுபவிப்பதற்கு மட்டும்தான் பிராமணக் கடவுள்கள் வழிபாடு மூலம் உதவி கிடைக்கும், ஞானம், நிர்வாணம் கிடைப்பதற்கு உதவாது எனும் கருத்து நிலவுகின்றது. தாய்லாந்து நாட்டுப் பொதுமக்கள் உலக வாழ்க்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருப்ப தாலும், இறைவணக்கத்தில் நம்பிக்கையுள்ளவர்களாக இருப்ப தாலும், தமிழ்நாடு, பிற இந்தியப் பகுதிகளிலிருந்துத் தாய்லாந் துக்குச் சென்று குடியேறியப் பிராமணக் கடவுள்களைத் தொடர்ந்து பக்தியுடன் இன்றும் வழிபடுகின்றனர். ஆனால் இப்பிராமணக் கடவுள்களின் வழிபாடு பொதுவாகப் புத்த குருமார்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

## தாய்லாந்தில் தமிழர்கள்

தாய்லாந்தில் குடியேறியிருக்கும் தமிழர்களை நான்கு பிரிவாக இன்று பிரிக்கலாம். *(1)* தாய் இன மக்கள் *(2)* தாய் பிராமணர்கள் *(3)* தமிழ்-தாய் வழித் தோன்றல்கள் *(4)* தமி ழர்கள் எனப் பிரிக்கலாம்.

### தாய் இன மக்கள்

பல்லவர்கள் காலத்திலும், சோழர்கள் காலத்திலும் தமிழர் கள் குறிப்பாகக் கல்தச்சர், ஸ்தபதி, பார்ப்பனர், வணிகர் முதலியோர் தாய்லாந்தில் குடியேறினர். அவர்களில் பலர் அந் நாட்டிலேயே தங்கி நிலைத்த குடிமக்களாய் வாழ்ந்து வந்தனர். தாய்லாந்தில் குடியேறிய திராவிடப் பெருங்குடிமக்கள் தம் நாட்டிலிருந்து செல்லும்போது சேரநாட்டவராக, பாண்டிய நாட்டவராக, சோழநாட்டவராக, தொண்டை நாட்டவராகச் சென்றனர். இன்னும் சொல்வதனால் பார்ப்பனர்களாக, ஆதிசைவர்களாக, வேளாளர்களாக, செட்டியார்களாக, அகம்படியர்களாக, மறவர்களாக, கம்மாளராக, பிற இனத்த வர்களாக அங்குச் சென்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் தாய்லாந்தில் குடியேறிய பிறகு தங்கள் சாதி

உணர்ச்சிகளைப் பலியிட்டுத் தாய்இன மக்களாக மாறிவிட்டது நாம் கண்டு வியக்கத்தக்கது.

1936 ஆம் ஆண்டு பால் பெலியட் (Paul pelliot) என்பார் "Encore A propos Des Voyages De Tcheng Houo" என்ற கட்டுரையை 'Toungpao' எனும் இதழில் வெளியிட்டார். இடைக்காலச் சீன வரலாற்று ஆசிரியர் ஒருவர் சம்பா (வியட்நாம்), சியாம் (தாய்லாந்து), சிலோன் (ஸ்ரீலங்கா) மன்னர்கள் எல்லோரும் சோழர்கள் எனக் குறிப்பிடுகின்றார் எனப் பால் பெலியட் இக்கட்டுரையில் கூறுகின்றார். குறிப்பாகச் சியாம் (தாய்லாந்து) நாட்டு அயோத்திய மன்னர்கள் தங்களைச் சோழர்கள் என அழைத்துக் கொண்டார்கள் எனவும் குறிப்பிடு கின்றார். பதினான்காம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் முதலாம் இராமா திபோதியால் தாய்லாந்தில் அயோத்திய அரசு அமைக்கப்பட்டது. சுமார் 417 ஆண்டுகள் தாய்லாந்தில் அயோத்திய அரசர்கள் ஆட்சி புரிந்தனர்.

மேலும் அயோத்திய அரசு தோன்றுவதற்குமுன் தாய்லாந்தில் ஆட்சிபுரிந்த சுகோதாய் அரசை நிறுவிய மன்னர் இராமா காம்ஹெங் மனைவியருள் ஒருவரான நோபோமாஸ் திருப்பாவை பற்றிய குறிப்புகளை விட்டுச் சென்றிருக்கிறார். இவர் ஒரு பிராமணர். மேலும் மனுநீதி சோழனைப் போலவே இராமா காம்ஹெங் நீதிகேட்க வருபவர்களின் பயன்பாட்டிற்காகத் தன் அரண்மனையின் வெளியிலே ஓர் பெரிய மணியைக் கட்டியிருந்தார். அம்மணியை அடித்து நீதிகேட்க வருபவர்கள் நீதிகேட்க வரலாம் என இராமாகாம்ஹெங் விட்டுச் சென்றக் கல்வெட்டு ஒன்றில் கூறப்பட்டிருக்கின்றது. மனுநீதிசோழனின் மணிநீதி தொடர்பான கதை இலங்கையிலும் பரவியிருந்தது எனச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. (David K.Wyatt: 1984:54)

சுகோதாய் மனுநீதிசோழனின் நீதிமுறை, இடைக்கால சீன வரலாற்றவர் விட்டுச் சென்ற குறிப்பு, மேலும் சோழ மயமாக்கம் கொள்கையின் தாக்கம் முதலிய செய்திகளை ஆராய்ந்தால் சோழ அரச பரம்பரையினர் கூடத் தாய்லாந்துக்குச் சென்று குடியேறியிருக்கலாம் எனும் நம்பிக்கை பிறக்கின்றது. பொது வாக இச்சான்றுகள் மூலம் தமிழர்கள் குடியேறினார்கள் எனத் தெளிவாகின்றது. ஆனால் தாய்லாந்தில் இடைக்காலத்திலும், இடைக்காலத்திற்கு முன்பும் குடியேறியத் தமிழ் மக்கள் தமிழ் மொழியை மறந்து விட்டனர், ஏன் தமிழ் இனத்தையே மறந்து விட்டனர். இப்பொழுது அவர்கள் தாங்கள் தமிழர்களின்

சந்ததிகள் என்றோ இந்தியர்களின் சந்ததிகள் என்றோ அறியார் கள். தாய்லாந்து பண்பாட்டுடன் ஒருசேரக் கலந்து விட்ட இப்பண்டைய, இடைக்காலத் தமிழர்களைத் தாய் இனத்தினர், தாய்மக்கள் என இன்று அழைப்பதுதான் சரி. அதுவே வரலாறு நமக்கு அளிக்கும் சான்று.

நான் தாய்லாந்துக்குச் சென்றபோது தாய்லாந்து மக்களுக் கும் தமிழ் மக்களுக்கும் உள்ள அங்க அமைப்பு ஒற்றுமையைப் பார்க்க முடிந்தது. தாய்லாந்திலேயே குடியேறி வாழும் மைக்கேல்ரைட், தாய்லாந்தில் வாழ்ந்த மாணிக்கவாசகமும் இவ்வொற்றுமையை வலியுறுத்துன்றனர். தாய்லாந்து தென் பகுதிகளில் வாழும் மக்களின் தோலின் நிறம், நெற்றி, புருவம், கண்ணிமை அமைப்புகள், கண்கள், மூக்கு, காதுகள் முதலிய அங்கங்களின் அமைப்பு ஆண்களானாலும் பெண்களானாலும் திராவிட முகத்தோற்றங்களை ஒத்திருக்கின்றது. பலரிடம் இந்த அங்க அமைப்புத் தெளிவாகத் தெரிகின்றது. வடகிழக்குத் தாய்லாந்தில் கம்போடியா எல்லை அருகே உள்ள சில தாய் பிரிவினரும் இம்மாதிரி அங்க அமைப்புகளுடன் இருப்பதை நான் பார்த்தேன். ஆகையால் பண்டைய, இடைக்காலத்தில் குடி யேறிய தமிழர்கள் தாய்லாந்து நாட்டினரோடு, குறிப்பாகத் தென்தாய்லாந்து நாட்டினரோடு ஒருசேரக் கலந்திருக்க வேண் டும் என ஊகிக்க முடிகின்றது.

## தாய் பிராமணர்கள்

இவ்வாறு சென்ற தமிழர்களுள் தமிழ்ப் பிராமணர்கள் ஓரளவு தங்கள் தனித்துவத்தைக் காப்பாற்ற முயன்றிருக்கின் றனர் என வரலாற்றுக் குறிப்பேடுகளிலிருந்து புலனாகின்றது. இத்தமிழ்ப் பிராமணர்களைத் தாய் பிராமணர்கள் என அழைக் கின்றார்கள். பொதுவாக இத்தாய் பிராமணர்கள் தமிழ் நாட்டி லிருந்து, குறிப்பாக இராமேசுவரத்திலிருந்தும், வடஇந்தியாவி லுள்ள காசியிலிருந்தும் வந்ததாகக் குறிப்புகள் கிடைக்கின்றன.

முதன்முதலாக நமக்குக் கிடைக்கும் குறிப்பேடு ஜான்கிரா போர்டு (John Crawford) என்பார் விட்டுச்சென்ற சான்றாகும். ஜான்கிராபோர்டு 1822 ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாள் தாய் லாந்து தலைநகரமான பாங்காக்கில் தாய் பிராமணர்களைச் சந்தித்தார். ஜான்கிராபோர்டு பின்வருமாறு கூறுகின்றார்: ''பாங்காக் இந்துக்களில் முக்கியமானவரும் தலைவருமாக இருந்தவரின் பெயர் அல்லது பட்டப்பெயர், எனக்குப் புரிந்த

வரை பிரா மஹாராஜா—குரோ—புத்ர—குரு (Pra Maharaja-Kro-Putra-Guru) இச்சொற்களின் முதல்சொல்லின் பொருள் இறைவன், அண்ணல், கோமான் (Lord). சியாமில் (தாய்லாந்தில்) உள்ள எல்லா புத்த பிக்குகளும் இந்தப் பொதுப்பெயரை வைத்துக் கொள்கிறார்கள். கடைசி இரண்டு சொற்களும் சமஸ்கிருத மொழிச் சொற்கள்—அவற்றின் பொருள் "ஆன்மிக வாழ்க்கை வழிக்காட்டியின் புதல்வன்". அவர் குடும்பத்தில் முதன் முதலாக எழுபது ஆண்டிற்குமுன் சியாமிற்கு (தாய்லாந்திற்கு) வந்தவர் அவர் தந்தையாவார். புத்ர—குரு என்பவர் உயரமான ஒல்லியான முதியவர். அவர் சியாம் தாயிற்குப் பிறந்தபோதிலும் இந்துக்களின் அங்க அமைப்பு அவரிடம் அதிகமாக இருந்தது. தன்னைப் பற்றியும், பாங்காக்கில் இருந்த பிற இந்துக்களைப் பற்றியும் அவர் கீழ்க்காணும் செய்திகளை அளித்தார். அவர்களுடைய முன்னோர்கள் எல்லாம் புனித தீவான இராமேஸ்வரத்திலிருந்து வந்தவர்கள் அவர்கள் தங்கள் குடும்பங்களை விட்டுவிட்டு இங்கு வந்தார்கள். இங்கு இருக்கும் பெண் மணிகளைத் திருமணம் செய்துகொண்டார்கள். அவர்கள் எல்லோரும் இந்து சாதி அமைப்பின் முதல் இரண்டு பிரிவைச் சேர்ந்தவர்கள். அர்ச்சகர்கள் அல்லது படைவீரர்கள். சைவ சமயத்தைப் பின்பற்றுபவர்கள். இச்சைவர்களைப் பார்ப்பதற்குத் தற்சமயம் எங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அவர்கள் நெற்றியில் சைவர்களைப் போலத் திருநீற்றைப் பூசிக்கொண்டிருந்தார்கள். மேலும் உயர்சாதி அமைப்பினர் தரிக்கும் நூல் கயிற்றைத் (பூணூலை) தரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் முன்னோர்கள் பயன்படுத்திய தாய்நாட்டு மொழியை இழந்துவிட்டதாக அவர்கள் எங்களிடம் கூறினார்கள். அவர்களிடம் சமஸ்கிருத மொழி இலக்கிய ஏடுகளும் அவர்களுடைய மூல முதலான மாகாண மொழி ஏடுகளும் இருக்கின்றன. புத்தரைக் கடவுள் என்று புகழ்வதில்லை; நன்மதிப்புடைய திருத்தொண்டர் என்றுதான் உணர்வுடன் மதிக்கின்றோம்..." (John Crawford?: 118; 149—150) சிலர் காசியிலிருந்து வந்ததாகச் சொல்லிக் கொள்வதாகவும், அவர்கள் பிற்காலத்தில் வந்தவர்களாக இருக்கலாம் என்றும் கிராபோர்டு மேலும் கூறுகின்றார்.

மாணிக்கவாசகம் 1980 ஆம் ஆண்டில் தாய்லாந்து சென்றிருந்தபொழுது "தங்கள் முன்னோர்களின் இருப்பிடம் தென் இந்தியாவிலுள்ள இராமநகரம் என்றும், இந்த உண்மையை மெய்ப்பிக்கும்படியான பதிவுக் குறிப்புகள் தங்களிடம் இருந்ததாகவும், ஆனால் தொலைந்துவிட்டதாகவும் தாய்லாந்து

பிராமணர்களின் தலைவராக இருப்பவர் கூறினார்'' எனக் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக இந்தியாவின் எப்பகுதியிலிருந்து தாய் பிராமணர்கள் வந்தார்கள் என்பது ஓர் சிக்கலான பிரச்சனையாகும். வடஇந்தியா, தென்இந்தியா முதலிய இரண்டு பகுதிகளிலிருந்தும் அவர்கள் வந்திருக்கவேண்டும் என விசாரணையின்போது தெளிவாகின்றது. இராமேசுவரத்திலிருந்து தமது முன்னோர்கள் வந்தார்கள் எனக் கூறுவதாலும், இறைவன் புகழ்பாடும் தமிழ்ப் பாசுரங்களை அவர்கள் பயன்படுத்துவதாலும், அவர்களில் பலர் பல நூற்றாண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டிலிருந்து சென்றிருக்கவேண்டும். மேலும் கி.பி. 13ஆம் நூற்றாண்டிலேயே இத்தாய் பிராமணர்கள் திருவெம்பாவை, திருப்பாவை பாசுரங்களைப் பயன்படுத்தியதால் சோழர்களின் ஆட்சிக்காலத்திலேயே இவர்களின் முன்னோர்களில் சிலர் தமிழ்நாட்டிலிருந்து சென்றிருக்கவேண்டும் என ஊகிக்கமுடிகின்றது. மேலும் தாய்லாந்திலுள்ள பின்னாளைய ஓலைச் சுவடிகள் சில அவர்கள் இந்தியாவிலிருந்து எட்டாம் நூற்றாண்டில் தாய்லாந்துக்கும், பர்மாவுக்கும் சென்ற கதையைக் கூறும். இவ்வாறு தமிழ்நாடு, காசி முதலிய இடங்களிலிருந்து தாய் பிராமணர்கள் தாய்லாந்திற்கு வந்தார்கள் எனச் சான்றுகள் கிடைக்கும் போதிலும் இந்தியாவையோ அல்லது வேறு எந்தநாட்டையோ அவர்களின் தாயகம் என்று இன்று அவர்கள் உரிமைக் கோரிக்கை விட முடியாது. ஏனென்றால் இன்று தாய் பிராமணர்கள் தாய் இனப்பிரிவினர்களோடு இணைந்தவர்களாக இருக்கின்றார்கள். கடல்கடந்து வந்தபோது தங்கள் இனப்பெண்களைக் கொண்டு வாராமையால் தாம் வந்த நாட்டிலேயே தலைமுறை தலைமுறையாக மணம் செய்து கொண்டு பெரும்பான்மையும் அந்நாட்டினராகவே இவ்வகையில் விளங்குகின்றார்கள். இவர்கள் பேசுவது தாய் (சயாம்) மொழியாகும். சடங்குகளைச் செய்யும் முறையெல்லாம் தாய்(சயாம்) மொழியிலே உள்ளனவாம்.

ஆனால் இன்று தாய்லாந்தில் 30 பிராமணக் குடும்பங்கள் தான் இருக்கின்றன; பாங்காக்கில் 15 குடும்பங்கள், நாகோன் சிதம்மராட்டில் 5 குடும்பங்கள், புத்தநூதாவில் 3 குடும்பங்கள் இருக்கின்றன எனத் தாய் பிராமணர் ஒருவர் என்னிடம் கூறினார்.

இத்தாய் பிராமணர்கள் தமிழ்நாட்டு ஸ்மார்த்தா பிராமணர்களைப் போலவே சிவன், விஷ்ணு முதலிய இருவரையும்

பக்தியுடன் வழிபடுகின்றனர். ஆனாலும் சிவனுக்கு முதலிடம் அளிக்கின்றனர். விஷ்ணுவுக்குப் பூஜை செய்யும்பொழுதுகூட சிவன் பூஜைக்குப் பயப்படுத்தப்படும் வில்வஇலையையே பயன் படுத்துகின்றனர். இத்தாய் பிராமணர் கோயிலுக்குள் வில்வ மரம் இருக்கின்றது. எல்லா கடவுள் பூஜைக்கும் வில்வ இலையையே பயன்படுத்துவதாகக் கூறினார்கள். தினம் கடவுள் முன் தியானம் செய்யும்பொழுது ஓம் நமசிவாயா, ஓம் கணேச நமோ நமஸ்தே, ஓம் லக்ஷ்மிநாராயண போன்ற மந்திரங்களை ஜபிப்பதாகக் கூறினார்கள். மனதை அமைதிப்படுத்தும் நோக் கத்துடனும், நன்மைகள் பெறுவதற்காகவும் இம்மாதிரி ஜபங் கள் செய்வதாகக் கூறினார்கள்.

பூஜை, ஜபம், சடங்குகள் முதலியவைகள் செய்வதற்கு நான்கு காரணங்கள் இருப்பதாகக் கூறினார்கள். கடவுளிடம் அடைக்கலம் புகுவதற்காகவும், பாதுகாப்பு தேடுவதற்காகவும், வாழ்க்கையில் வெற்றி அடைவதற்காகவும், செல்வம் கொழிப்ப தற்காகவும், நம்பிக்கை, பக்தி மிகுதியாதற்காகவும், இம்மாதிரி பூஜைகள் செய்கின்றோம் எனக் கூறினார்கள்.பொதுவாக, நலம், தர்மம், ஞானம் முதலிய குறிக்கோள்கள் உந்தும்சக்திகளாக இருக்கின்றன.

தாய் பிராமணர்கள், பிராமணராக ஆவதற்கு உபநயனம் போன்ற சடங்கு ஒன்று நிகழும். அதில் மூன்று இழை பூணூலை அணிந்து கொள்வார்கள். பின்னர் ஒரு சடங்கு நிகழும். அப் போது ஆறிழைப் பூணூல் பூணுவார்கள். இவர்களுடைய நீண்ட குடுமியைக் கொண்டே இவர்களைப் பிரித்தறியலாம். பாங்காக் தாய் பிராமணர் மூன்று கோயில்களைச் சுற்றியே வாழ்கின்றனர். இன்று அவர்களிடம் இருக்கும் சமஸ்கிருத நூல்கள், தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம் முதலியவற்றை மனப்பாடமாக ஓதுவதற்குச் சிறு வயதிலேயே அவர்களுக்குக் கற்றுத் தரப்படு கிறது. தாய்லாந்து பிராமணவழித் தோன்றல்கள் மட்டும்தான் தாய் பிராமணர்களாக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்.

தாய் பிராமணர்கள் சைவ உணவினர் அல்லர். ஆண்டிற் குப் பதினைந்து நாட்கள்தான் திருவெம்பாவை--திருப்பாவைத் திருவிழாவின்போது அவர்கள் புலால் உண்ணாதவர்களாக இருக் கின்றனர். ஆனால் இவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் மாறுபட்டதன்மையுடையவர்கள் தமிழ் பிராமணர்கள். அவர் கள் சைவ உணவினர்.

மேலும் தமிழ் பிராமணர்களுக்கும் தாய் பிராமணர்களுக்கும் வேறொரு வேறுபாடு இருக்கின்றது. புத்த சமயத்தைப் பின் பற்றும் தாய்லாந்திலே வாழும் தாய் பிராமணர்கள் பௌத்தர் களாகவும் விளங்குகின்றனர். நாங்கள் புத்த சமயத்தைச் சேர்ந்த வர்கள், புத்தரை வழிபடுகின்றோம் எனக் கூறினார். மேலும் அன்றாட வழிபாட்டின் போதும், தியானத்தின் பொழுதும் புத்த சமய மந்திரங்களைப் பயன்படுத்துகின்றார்கள். எடுத்துக் காட்டாக நமோதத்து பாகுவஆர புத்தா எனும் மந்திரத்தைப் பயன்படுத்துகின்றனர். புத்த சமயத் தத்துவத்திலும் ஈடுபாடு டையவராக இருக்கின்றனர். புத்தசமய நற்பண்பு அறிவுரை களையும் பின்பற்றுகின்றனர். புத்தகுருமார்களும் தாய் பிரா மணர்கள் கோவிலுக்குச் சிலசமயம் வருகின்றனர். ஆகையால் தமிழ்நாட்டுச் சிவ தத்துவம், பாஞ்சராத்திர தத்துவம் காலப் போக்கில் ஒன்றாக இணைந்து ஒற்றுமையுடன் வாழ்ந்து இன்று சிவன், விஷ்ணு, புத்தர்—என மூவரையும் வழிபடும் தத்துவமாக மாறிவிட்டது. தாய் புத்த சமயத்தினர் இந்துக் கடவுள்களை வழிபடுகின்றனர், தாய் பிராமணர்கள் புத்தரை வழிபடு கின்றனர். ஆகையால் இம்மாதிரியான சூழலமைவில் கடவுள் நம்பிக்கையோடு வாழும் தாய் பிராமணர்களைப் பௌத்த தாய் பிராமணர்கள் என அழைத்தால் தவறில்லை.

**தமிழர்கள்**

தமிழர்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம். தமிழ்—தாய் இனக்கலப்பு மூலம் தோன்றியத் தமிழர்கள், இனக்கலப்பு இல்லாத தமிழர்கள். இனக்கலப்பு இல்லாத தமிழர்கள் மிகக் குறைவு. பொதுவாக இவர்கள் அண்மைக் காலத்தில் சென்றவர் கள். தாய்லாந்தில் 30 ஆண்டுகளாக வாழும் தனபால் சுந்தரராஜ் என்பவர் பின்வரும் செய்திகளை அளிக்கின்றார். ''இன்று மொத்தம் பாங்காக்கில் தமிழ்ப் படிக்கத் தெரிந்த வர் 500 பேர். அதில் 300 பேர் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு முன் வந்தவர். தமிழ் முஸ்லீம்கள் பரவலாக இருக்கின்றனர். புக்கட் எனுமிடத்தில் சுமார் 100 தமிழர் இருக்கின்றனர். இவர்கள் சிறுசிறு வியாபாரிகள். இவர்களுக்குத் தமிழ் பேசத் தெரியும், விஷயங்களைத் தமிழில் விளக்கிக் காட்டும் திறமை உண்டு. வடக்கில் பர்மா எல்லை அருகே பலகாலமாக மேசாட் (Maesat) எனுமிடத்தில் 30 அல்லது 35 தமிழர் குடும்பங்களும் சியாங்ரெய் எனுமிடத்தில் 5 அல்லது 6 தமிழ்க் குடும்பங்களும், காஞ்சனபுரியில் 10 அல்லது 15 குடும்பங்களும் இருக்கின்றன'',

இரண்டாம் உலகப்போரின் பொழுது தாய்லாந்திற்கு வந்து குடியேறிய சதார் என்பார் கீழே அளிக்கப்பட்டிருக்கும் செய்தியைக் கூறினார். தொடக்கத்தில் தமிழர் கால்நடைகள் வாணிபம் செய்தனர்; சிறுசிறு வாணிப முயற்சிகளில் ஈடு பட்டனர். கால்நடை வாணிபம் மூலம் செல்வந்தராகவும் சிலர் மாறினர். அவர்களில் ஒருவர் 80 ஆண்டுகளுக்கு முன் மன்னர் ஆறாம் இராமரின் ஆலோசகராகவும் பணிபுரிந்தார். பண்டைக் காலத்தில் சென்ற தமிழ்ப் பிராமணர் மன்னர் அவையில் இன்றும் பணிபுரிகின்றனர். இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு புதிய பாங்காக் நகரம் அமைக்கப்பட்ட காலத்தில் வாதேவமுனி எனும் தமிழர் அரசகுருவாகப் பணியாற்றினார்.

தாய்லாந்திலேயே பிறந்து வளர்ந்து, ஆனால் தமிழ் தெரியாத, இந்தியத் தூதகரத்தில் பணிபுரியும் அருண்செட்டி என்பார் அளிக்கும் செய்தி: ''எங்களுடைய சொந்த ஊர் தஞ்சாவூர். என்னுடைய பாட்டனார் இராமசாமி செட்டியார் தாய்லாந்திற்கு வந்து குடியேறினார். ஆங்கிலேயர்கள், டச்சுக் காரர்கள் வைத்திருந்த கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். பொதுவாக இந்தியர்களுக்குக் கணக்கு அறிவு, ஆங்கில அறிவு, இருந்ததால் இக்கம்பெனிகளில் பணிக்குச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். பொதுவாகப் பிள்ளை, செட்டியார், நாயுடு (நாட்டி), படையாட்சி, வாண்டையார் சாதியைச் சேர்ந்த தமிழர்கள் குடியேறினார்கள். சிலர் இந்தியாவிற்குத் திரும்பிச் சென்றார்கள். சிலர் தங்கள் உறவினர்களைத் தாய்லாந்திற்கு அழைத்து வந்தனர். இவர்களில் பலர் உள்ளூர் தாய்லாந்து பெண்களையே திருமணம் செய்து கொண்டனர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர் வைத்திலிங்கம் எனும் வைத்தி படையாட்சி. தாய்லாந்திலேயே புகழுடன் வாழ்ந்த இந்தியர் வைத்தி படையாட்சி. இவர் செல்வந்தர். தாய்லாந்து பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார். இன்று மிகக் குறைவான செட்டியார் குடும்பங்களே தாய்லாந்தில் இருக்கின்றன. இவர்களிலே மிகவும் புகழ் வாய்ந்தவர் தஞ்சாவூர் துரைரங்கம் செட்டி. ஐரோப்பிய கம்பெனியில் அகௌண்டன்ட் ஆகப்(கணக்கர்) பணிபுரிகின்றார். இவருடைய பாட்டி தாய்லாந்து நாட்டினர், அப்பா வழியில் இந்தியர். அம்மா வழியில் தாய்லாந்து நாட்டினராவார். இச் செட்டியார் சந்ததியினர் இன்று பணம் வட்டிக்குக் கொடுப்பதில்லை; வாணிபம் செய்வதில்லை. படித்துப் பட்டம் பெற்று வேலைக்குப் போகின்றார்கள். இவர்களுடைய உறவினர்கள் இன்று இந்தியாவில் இல்லை. ஏனென்றால்

இந்தியாவுடன் இவர்களுக்குத் தொடர்பில்லை இவர்கள் எல்லோரும் மிகுதியான சமயப்பற்றுள்ளவர்கள். தமிழக சமயச் சடங்குகளைப் பின்பற்றுகின்றனர். பல இந்தியர்கள் இன்று செல்வந்தர்களாக இருக்கின்றனர். எடுத்துக்காட்டாக அப்புராவ் எனும் தமிழர் ஓர் பணக்காரர். யூனிசெம் எனும் மருந்து பொருள் தொழிற்சாலை வைத்திருக்கின்றார். ஜி. எம். பிள்ளை எனும் தமிழர் பிரபலமான பாங்காக் போஸ்ட் எனும் ஆங்கிலப் பத்திரிகை அலுவலகத்தில் பணிபுரிந்தார். இவர் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டார்.

அண்ணாமேரி சோசப் கேப்ரியல் மங்களராயர் எனும் தமிழர் 30 ஆண்டுகளாகத் தாய்லாந்தில் தங்கியிருப்பதாகக் கூறினார். இவர் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர். 1960 ஆம் ஆண்டில் தாய்லாந்திற்கு வந்தார். இவர் அளிக்கும் செய்திக் குறிப்புகள்:- ''உலகச் சண்டைக்குமுன் செட்டியார்கள் வந்தார்கள். இப்பொழுது முத்தையாப்பட்டி செட்டியார் இருக்கிறார். முன்பு செட்டியார் ஆதிக்கம் இருந்தது. செட்டியை சேதி (Sethi) என்று அழைக்கின்றார்கள். 'சேதி' என்றால் பணக்காரன் 'மில்லியனர்' எனப் பொருள். மேலும் அப்போது இங்கு வந்து குடியேறிய இலட்சுமணன் படையாட்சி, மாரிமுத்து, ஓட்டல் சொந்தக்காரர் சதார் முதலிய முதியோர்கள் இன்றும் உயிரோடு இருக்கின்றார்கள். பொதுவாக இரண்டாம் உலகப் போருக்கு முன் வந்த தமிழர்கள் இவ்வூர் பெண்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். சிலர் மனைவிகளை முறைப் படி திருமணம் செய்து கொள்ளவில்லை. முறைப்படி திருமணம் செய்து கொள்ள வேண்டாம். ஆகையால் பதிவு செய்யவில்லை. விருப்பப்பட்டால் பதிவு செய்து கொள்ளலாம். தொடர்பு தோன்றினால் மட்டும் போதும். இவர்களின் மூன்றாவது, நான்காவது தமிழ்ப் பரம்பரையினர் தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் இழந்து விட்டார்கள். இங்கு வளர்ந்த இளம் பரம்பரையினருக்குத் தமிழ்க் கற்றுத் தரவில்லை. மேலும் இங்குக் குடியேறியவுடன் தமிழ்நாட்டுக்கும் செல்லவில்லை. தமிழ்நாட்டுடன் தொடர்பு கிடையாது. ஆகையால் தமிழ்ப் பண்பாட்டை இழந்தனர். ஒரு சிலர் மட்டும் 40 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டுக்குப் போய் வந்தார்கள்.

தொடக்கத்தில் பல தமிழர்கள் கூலியாட்களாகத் தாய்லாந்திற்கு வந்தார்கள். கடலை விற்பது, செய்தித்தாள்கள் போடுவது, காவலர் பணிபுரிவது போன்ற தொழில்களைத்தான் செய்து வந்தார்கள். மிளகு டானிக்கு (மிளகு தண்ணீர்) ஒரு

கோப்பை ஒரு அமெரிக்கன் டாலர் என நாயர் ஒருவர் விற்றுக் கொண்டிருந்தார். இவர் பணக்காரர் ஆனார். சுமார் 55 ஆண்டு களுக்கு முன்பு லீலை என்னும் தமிழர் காலையில் தெருவில் இட்லி, இடியாப்பம் விற்றுக் கொண்டிருந்தார். பொதுவாகத் தாய்லாந்து அரசாங்கத்தின் கட்டாயக் கல்வி, இலவசத் தொடக்கக் கல்வி வாய்ப்புகள் மூலம் இத்தமிழர்களின் வாரிசு களுக்குக் கல்வி கற்க வாய்ப்பு கிடைத்தது. வேலை வாய்ப்பு கிடைத்தது. படித்துப் பட்டம் பெற்று சமூக மேல்படிக்குச் செல்ல வாய்ப்பு கிடைத்தது. சிலர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களாகப் பணிபுரிகின்றனர். ஆனால் தொடக் கத்தில் ஏழ்மையான குடும்பச் சூழ்நிலை இவர்களுக்கு இருந்த தால் இன்று பலர் தங்கள் தந்தை இந்தியர் எனச் சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறார்கள். அவ்வாறு சொல்லிக் கொள் வதைக் குறைவாக நினைக்கின்றனர். பொதுவாக இளம் பரம் பரையினர்களில் 50 விழுக்காடு கல்லூரிகளில் படித்தவர்களாக இருக்கின்றார்கள். கல்லூரிகளில் படிக்காதவர்களுக்கு வேலை வாய்ப்பு குறைவாக இருக்கின்றது. பொதுவாகப் படித்தவர்கள், ஐரோப்பிய கம்பெனிகளில் பணிபுரிகின்றனர்.

பெரும்பான்மையான தமிழர்கள் வாணிபத்தில் ஈடுபட்டிருக் கின்றார்கள். சுமார் 1000 பேருக்கு மேல் ஏற்றுமதி, இறக்குமதி தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். சிலர் சிறுதொழிற்சாலைத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். அரசுத்துறைகளில் சுமார் ஒரு விழுக்காடு தமிழர்கள் பணிபுரிகின்றனர். தமிழர்களுடைய வாரிசு கள் சில உயர் பதவிகளில் இருக்கின்றார்கள். இளம் பரம்பரை யினர்களில் சுமார் 50 விழுக்காடு அரசுத் துறைகளில் பணிபுரி கின்றனர்; 50 விழுக்காடு வாணிபம் செய்கின்றனர். படித்தவர் களில் பெரும்பான்மையோர் தாய்லாந்து நாட்டுக் குடிமகன் களாக இருக்கின்றனர்''.

தமிழ்—தாய் இன இளம்பரம்பரையினர்களின் உடை, உணவுப் பழக்கவழக்கங்கள் தாய்லாந்துநாட்டு மக்களின் உடை, உணவுப் பழக்கத்தைப் பின்பற்றி இருக்கின்றன. பொதுவாகத் தாய்லாந்து மக்கள், தமிழ் மக்களிடையே உள்ள வேறுபாட்டைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கின்றது.

குழந்தைகள் தமிழ் உணவு உட்கொள்வர். ஆனால் தாய் லாந்து நாட்டைச் சேர்ந்த மனைவி அவ்வளவாக விரும்பிச் சாப்பிடுவதில்லை; சிலர் தமிழ் உணவு நாற்றம் அடிக்கின்றது

எனக் கூறுகின்றார்களாம். ஆனால் தாய் மனைவியர் தமிழ் உணவை நன்றாகத் தயார் செய்வர். வாரம் இரண்டு அல்லது மூன்று முறை தமிழ்—வழி தாய் பரம்பரையினர் இந்திய உணவை விரும்பிச் சுவைக்கின்றனர். இவர்கள் சாம்பாரைச் சம்பார் என்றும். ரசத்தை லாசம் என்றும், மோரை நமோரு என்றும், பாயசத்தைப் பயசம், சாகு என்றும், வடையை வோர்டே என்றும், அப்பளத்தைப் பம்பூ அல்லது பாம் என்றும், பீன்ஸ் பொரியலை கேந்துவா என்றும், முருக்கை முடுக்கு, லக்வான் என்றும், கருவேப்பிலையைக் கருவாப்புள்ளே, குருப் பிளை என்றும் கூறுகின்றனர். மேலும் இவர்கள் உப்புமா, இட்லி, அப்பம் முதலியவைகளை உட்கொள்கின்றனர்.

பண்டிகைகளின் போது சைவ உணவு மட்டும்தான் சாப் பிடுவர். வாழை இலையில்தான் அன்று சாப்பிடுவர். வாழை இலையைப் பைதாங் எனக் கூறுகின்றனர். பண்டிகையின் போது முதலில் உப்பு, பிறகு சமைத்தக் காய்கறிகள் இலையின் மேல் பகுதியில் பரிமாறுவர். இலையின் கீழ்ப்பகுதியில் சாதம் பரி மாறுவர். பாயசம் வடையோடு சாப்பிடுவர்.

பொதுவாக இவர்கள் அசைவ உணவு அருந்துவர். பிரி யாணியைப் பிரின்சானி என்றும், மீன்கறியை மினிகாரி கயாங் பிளா என்றும், கோழிக்கறியைக் கயான்கை அல்லது கோடிகரி என்றும், தல்சா என்றும் கூறுகின்றனர்.

பொங்கல் அன்று இனிப்புச்சோறு தயாரிக்கப்படும். இதைத் தாய் தமிழர் கவ்வான் எனப் பெயரிட்டு அழைக்கின்றனர். சக்கரைப்பொங்கல் எனக் கூறுவதில்லை. மேலும் பொங்கலன்று தயிர் சாதம் தயாரிக்கின்றனர். இதை பிளையோ அதாவது புளித்த தயிர்சாதம் என அழைக்கின்றனர். மற்றும் இனிப்பும், புளிப்பும் கலந்த கவ்மான் தயாரிக்கின்றனர். பாலும், தயிரும், கருவேப்பிலையும் கலந்த சோறுதான் கவ்மான், தவிர சில கேக்கு களும்,சில இனிப்புப்பதார்த்தங்களும் தயாரிக்கின்றனர்.பொங்கல் அன்று வெள்ளை, கலர் பொடியைத் தூவி வீடுகளிலும் கோவி லிலும் கோலம் போடுகின்றார்கள். இதை வடுலுடுதலை (Vadu-luadlai) எனக் கூறுகின்றனர். பொங்கல் அன்று மட்டும்தான் கோலம் போடப்படும். முன்பு பொங்கல் அன்று மாடுகளை அலங்கரித்து ஊர்வலம் செல்வர். காளைமாட்டை அடக்கு பவர்களுக்குப் பரிசு கொடுப்பர். இன்று இம்மாதிரியான விளை யாட்டு கிடையாது. தைரியமான இந்தியர்கள் இல்லை எனக் கூறுகின்றனர்.

பாங்காக்கிலிருந்து 50 கிலோமீட்டர் தொலைவில் ஆசியாவில் மிகப் பெரியதான ஆசியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி எனும் கல்லூரி இருக்கின்றது. இங்கு 20 அல்லது 25 தமிழ் மாணவர்கள் படிக்கின்றனர். இவர்கள் பொங்கல் விழாவைக் கொண்டாடுகின்றனர். காசி மரைக்காயர் என்பார் இதில் முக்கிய பங்கெடுக்கின்றார். இவர் தம்பிசானுடைய உறவினராவார். இம்மாணவர்கள் அன்று காலையே பொங்கல் போடுகின்றனர். பட்டிமன்றம், திருக்குறள் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர். டி.கே. ஐயர், கமலா ஐயர், மறைமலையடிகள் பேரன் ஒருவர் இவ்விழாவின் பங்கேற்கின்றனர்.

புத்தாண்டு சிறப்பாகக் கொண்டாடப்படும். முதியோர்களைச் சென்று வணங்கி ஆசிர்வாதம் பெற்றுக்கொள்வர். இந்த நம்பிக்கை இவர்களிடம் மிகவும் ஆழமாக ஊறியிருக்கின்றது என அருண்செட்டி கூறினார்.

ஒவ்வொரு இந்திய, தமிழ்ப் பரம்பரையினர் வீட்டிலும் தீபாவளி சிறப்பாக இரண்டு நாட்கள் கொண்டாடப்படும். முதல்நாள் மாலை வீட்டிற்குள் குடும்பத்தினரால் கொண்டாடப்படும். முன்னோர் வழிபாடு செய்யப்படும். உணவு அருந்தும் போதுஇலைகளில் சைவ உணவு பரிமாறப்படும். மறுநாள் காலை எல்லா குழந்தைகளும் தங்கள் தாய் தந்தையினரைப் பார்க்க வருவர். மரியாதை செலுத்துவர். விடிகாலையில் எண்ணை, சீயக்காய்தேய்த்துக் குளித்துவிட்டுப் பெற்றோர்களைப் பார்க்கச் செல்வர். எண்ணெய்யை நாமாங்னா (**Nammangna**) என்றும், சீயக்காயைச் சோம்ப்லர் (**Somplor**) என்றும் கூறுகின்றனர். பொதுவாகப் பெற்றோர்களைப் பார்க்க வரும்போது பெற்றோர்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்வர். முதலில் தீபாவளி அன்று காலை 8 மணிக்குக் கோவிலுக்குப் போவர். தாய்மொழிப் பாடல்களைக் கோவிலில் பாடுவர். பிறகு பல நண்பர்கள் ஒன்றாகக் கூடிப் பல பிரிவாகப் பிரிந்து பல நண்பர்கள் வீடுகளுக்குச் செல்வர். சென்ற வீடுகளில் தீபாவளி பலகார வகைகள் கொடுப்பர். பணமும் கொடுப்பர். ஒவ்வொரு வீட்டிலும் கொடுப்பர். தீபாவளி அன்று பட்டாசு வெடிப்பதில்லை. ஆசியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில் படிக்கும் தமிழ் மாணவர்கள் தீபாவளி அன்று ஆளுக்கு 150 பாட் போட்டு கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்கின்றனர். பிரிந்தாவன் ரெஸ்டாரெண்ட் சாப்பாடு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

தீபாவளி நிகழ்ச்சியை முஸ்லீம்கள் ஏற்பாடு செய்வதில்லை. இம்மாணவர்கள் பொங்கல், தீபாவளி மட்டும் கொண்டாடுகிறார்கள். தமிழ்ப் புத்தாண்டு இவர்களால் கொண்டாடப் படுவதில்லை.

தமிழ்ப் பெண்கள் புடவை கட்டுவதில்லை. தீபாவளி அன்று இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட கரையுள்ள வெள்ளை வேட்டியை உடுத்துகின்றனர். இதைப் பார்கே தோதி (Parkeh Dhoti) எனக் கூறுகின்றனர். கோவிலுக்குப் போகும்போது திருநீறு பூசிக்கொண்டு செல்கின்றனர். திருநீறைத்''தொனாறு'' (Tonaru) எனக் கூறுகின்றனர். கோவில் பண்டாரம் திருநீறை அளிக்கின்றார். குங்குமம், சந்தனம், விபூதி இட்டுக்கொள்கின்றனர். குங்குமத்தைச் சிகப்பு தொனாறு என்றும், விபூதியை வெள்ளை தொனாறு என்றும் கூறுகின்றனர். பொதுவாகப் பண்டிகைகளின் போதும் இவ்வாறு தொனாறு, சந்தனம் இட்டுக் கொள்கிறார்கள்.

தாய்—தமிழ் இளம்பரம்பரையினர் தாய்லாந்திலுள்ள கல்வி முறையைப் பின்பற்றுகின்றனர். சுமார் 95 விழுக்காடு இளம் பரம்பரையினர் தாய் புத்த திருமணச் சடங்குமுறையையே பின் பற்றுகின்றனர். தமிழ்ப் பண்பாட்டை இழக்காத தமிழகப் பெற்றோர் உயிரோடு இருந்தால் திருமண விழாவின்போது சில இந்துச் சடங்குகள் உண்டு. ஆனால் மிக முக்கிய இந்து, தமிழ்ச் சடங்கு முறையான தாலிகட்டும் முறையை இன்று இவர்கள் பின்பற்றுவதில்லை. மணமகனும், மணமகளும் மோதிரம் மாற்றிக் கொள்கின்றனர், ஆனால் தமிழ்நாட்டில் வழக்கில் இருக்கும் பரிசம்போடும், சீதனம், வரதட்சிணை அளிக்கும் பண் பாடு தாய்லாந்து தமிழரிடையே இல்லை. மணமகன் மணமகள் குடும்பத்தினர், மணமகன், மணமகளுக்கு அன்பளிப்பு அளிப்பர்.

பௌத்த சமயச் சடங்கு முறையையே இத்திருமணங்களில் பின்பற்றுகின்றனர். மணமகன் மணமகள் பக்கத்தில் உட்காருவார். பிறகு கும்பிடுவர். அவர்கள் இருவரைப் பற்றியும் புகழ்ந்து பேசி அவர்கள் கையில் தூய்மைத்தண்ணீர் (Lustral water) போடுவர். அபிஷேகதீர்த்தம் போட்டு ஆசீர்வாதம் செய்வர். பொதுவாக ஒருநாள்தான் திருமணம் நடக்கும். தமிழ்நாட்டிலுள்ள பழக்கவழக்கம் போலச் சிறப்பாகத் தாய், தந்தை மட்டும் மணமகனைச் சென்று பார்த்து பேசித் தேர்ந்தெடுப்பதில்லை. மிகுதியான இளம்பரம்பரையினர் காதல் திருமணம் செய்து கொள்கின்றனர். பொதுவாகத் தந்தை, தாய் அனுமதி

யுடன்தான் காதல் செய்த இளைஞர் திருமணம் செய்து கொள்கின்றனர். இந்துக்கள் திருமணத்தைப் பெரும்பாலும் மாரியம்மன் கோவிலில் நடத்துவர். பொதுவாகத் தாய்—தமிழ் குழந்தைகள் எவரை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் திருமண தினத்தன்று உறவினர்களோடு மாரியம்மன் கோவிலுக்குச் சென்று வழிபடுவது தவிர்க்கமுடியாத ஒருமரபு முறையாகும். மாரியம்மனின் ஆசியைப் பெற வேண்டும் எனும் பழக்கம் எல்லோரிடை, நடைமுறையில் இருக்கின்றது. காலையில் திருமணம் முடிந்states) மணமகன் பெண் வீட்டுக்குப் போவார். பொதுவாகப் ருக்குத் வீட்டில் திருமணம் நடக்கும். பௌத்த சமயச் சடங்கு இவர் கல்யாணம்தான் மிகுதியாக நடைமுறையில் இருக்குடும்பத் ஆனால் வடஇந்தியர் இந்தியச் சம்பிரதாயப்படி ீர் முஸ்லீம் நடத்துகின்றனர். மரபுப்படி வடஇந்திய விஷ்ணு கோ போய் மாலை மாற்றுகின்றனர்.

ப் பின்வரும்

காதுகுத்தும் திருவிழா, குழந்தைக்குப் பேர் வைடு இருக்கும் களும் இந்து-புத்த சடங்குமுறையைத் தழுவிநடத்தநும் தாய்லாந் இந்துத் தமிழர்களுக்குத் தனியாகச் சுடுகாடு ருக்கு ஒருவர் இந்தியர் விஷ்ணு கோவில் எதிரில் வடஇகையின் போது சொந்தமாக இருக்கும் சுடுகாட்டில் தமிழர்கள் தமிழ் இந்துக் எரிக்கின்றார்கள்; அல்லது புத்தகோவிலில் உடிகைகளில் தமிழ் இறந்தவர்களை எரிக்கின்றார்கள். கள். தாய் தமிழ் முஸ்லீம்கள்

ல ஈடுபடாதவர்கள், திறமையான

## தமிழ் முஸ்லீம்கள்

பான்மை உள்ளவர்கள்.''

தாய்லாந்து முஸ்லீ

களை அமெரிக்கத் தூ களைப் பற்றி மங்களராயர் கேபிரியர் பார் அளித்தார். அளித்தார்: ''இன்று தாய்லாந்தில் மொத்தம் பங்கள் அல்லது ர்தான் இருக்கின்றனர்.''பெரும்பான்மையோர் கின்றனர். பிரிவைச் சேர்ந்தவர்; பாண்டிசேரியிலிருந்து விட்டனர். இவர்கள் சீனர், பிரெஞ்சு கத்தோலிக்கக் கோவில் யாக இருபாடு செய்கின்றனர். மிகவும் பழமையான கத்தோ கோவில் திரு. அந்தோணி சுவாமி என்பவர். இங்கு இருக்கும் கின்றகைத் தமிழ் கிறித்துவர்கள் மிகக் குறைவு. பெரும்பான்மை குடிபே தமிழை மறந்துவிட்டனர். இவர்களுடைய பிள்ளை கும் தமிழ் தெரியாது. தமிழ்மொழி கற்றுத்தரவில்லை. ற்ச் சங்கமும் இல்லை.

கின்

வ அருண்செட்டி அளித்த செய்தி பின்வருமாறு: ''பாண்டிச் நிரியிலிருந்து வந்த காலஞ்சென்ற ஸ்வாமி எனும் தமிழ்க்

மேலும் கலர் கற்கள், அரிய வைரம் பெரும்பாலும் பாம்பே வைரம், சபையர், ரூபி, விலைமதிப்புள்ள கற்கள்—முதலிவைகள் தொடர்பான வணிகம் செய்கின்றனர்.

தஞ்சாவூர், பாண்டிச்சேரி, காரைக்கால், கீழக்கரை, காரைக்குடி, இராமநாதபுரம், காயல்பட்டணம், சென்னை அருகேயுள்ள புளிக்காடு முதலிய இடங்களிலிருந்து தாய்லாந்திற்குத் தமிழ் முஸ்லீம்கள் வந்தனர். காரைக்காலிலிருந்து வந்த முஸ்லீம்கள் பலர் உண்டு. சுமார் 60 பேர் மூன்று, நான்கு தலைமுறைகளுக்கு முன் வந்தவர்கள். பலருக்கு இப்போது தமிழ் நாட்டிலுள்ள சொந்த ஊர்களுடன் தொடர்பு இல்லை. சீனர், தாய்லாந்து பெண்களைத் திருமணம் செய்துகொண்ட தமிழ் முஸ்லீம்கள் பலர் உண்டு. சிலர் இந்தியப் பெண்களையும் திருமணம் செய்து கொண்டிருக்கின்றனர். திருமணம் செய்து கொண்ட பெண்கள் முஸ்லீம்களாக மாறிவிட்டனர். தமிழ் நாட்டு இசுலாமிய திருமண முறையே பின்பற்றப்படுகிறது.

தமிழ் முஸ்லீம்களின் தாய்மொழித் தமிழ். இவர்கள் தமிழ் ஆர்வம் உள்ள தமிழர்கள். தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்கும் தமிழர்கள். இஸ்லாம் சமயத்தில் மிகுதியான பற்றுள்ளவர்கள். பலர்தாய் பெண்களைத் திருமணம் செய்துகொண்டு தாய்லாந்திலேயே நிரந்தரமாக வாழ்கின்றனர். எடுத்துக்காட்டாகத் தமிழ் நாடு முஸ்லீம் ஓட்டல் சொந்தக்காரர் ஒரு தாய் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். இவர்களில் தமிழ்நாட்டுடன் தொடர்புடையவர் தமிழ்ப்பற்று இருக்கும் வரை தமிழ் நாட்டுக்குச் சென்று வருகின்றனர். ஆனால் இப்போது தாய் லாந்திலேயே பிறந்த இளம் பரம்பரையினருக்குத் தமிழ்த் தெரியாது. இவர்களுக்குத் தமிழ்நாட்டுடன்குறைவானதொடர்பு தான் இருக்கின்றது. தாய்மொழியையே பேசுகின்றனர். இட்லி தோசை, புட்டு முதலியவைகளைவிட சோறு, நூடுல்ஸ் முதலிய வைகளையே விரும்பிச் சாப்பிடுகின்றனர். இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்வந்த முஸ்லீம் பெண்கள் தமிழ் நாட்டுச் சேலையை விரும்பி உடுக்கின்றனர்.

சியா (Shia) சன்னி, சபி, ஹநாபி என்னும் வேறுபாடுகளை இவர்கள் கண்டு கொள்வதில்லை. ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். மிலாடிநபி, ரம்சான் சிறப்பாகக் கொண்டாடப்படும். பெரும்பான்மையோர் நோன்பு இருப்பர். 30 நாள் இறைவணக்கம் செய்வர். விசேட நாளன்று இரவு 8 மணிக்கு மேல் ஒருமணி நேரம் இறைவணக்கம் செலுத்துவர். ரம்சான் அன்று கூட்டம் நடக்கும்; விருந்து உண்டு. லாட்டரி பரிசு உண்டு. அச்சடித்த

டோக்கன்களின் விலை 100 பாட் (ஒரு பாட் ரூ.1.25). தமிழ் முஸ்லீம் சங்கம் ஒன்று இருக்கின்றது. 1991 ஆம் ஆண்டில் அபுபாக்கர் என்பவர் இச்சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி வந்தார். தாய்லாந்திலுள்ள அயோத்திய தர்காவுக்கும் நாகப் பட்டினம் தர்காவுக்கும் நிறைய ஒற்றுமை இருக்கின்றது.

தாய்லாந்தில் புகழ்வாய்ந்த தமிழ் முஸ்லீம் குடும்பத்தினர் காரைக்காலிலிருந்து வந்த மரைக்காயர் குடும்பத்தினர். இக்குடும் பத்தினரின் முன்னோர் தாய்லாந்தில் முதலில் துணிக்கடை, வைரம், கட்டிடம் கட்டும் தொழில் (Building and real estates) முதலியவற்றைத் தொடங்கினர். இன்று இக்குடும்பத்தினருக்குத் தாய்லாந்தில் மிகுதியான நிலம் சொந்தமாக உள்ளது. இவர் களில் சிலர் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டனர். இக்குடும்பத் தினரே தாய்லாந்தில் வாழும் மிகப் பெரிய பணக்கார முஸ்லீம் குடும்பத்தினர் ஆவர்.

அருண்செட்டி இந்து முஸ்லீம் உறவினைப் பற்றிப் பின்வரும் செய்தியை அளித்தார். ''சமய நம்பிக்கை வேறுபாடு இருக்கும் போதிலும் தமிழ் இந்துக்களும், தமிழ் முஸ்லீம்களும் தாய்லாந் தில் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். ஒருவருக்கு ஒருவர் மரியாதை அளிக்கின்றார்கள். இத் (Id) பண்டிகையின் போது அவர்கள் வீடுகளில் நாங்கள் சாப்பிடுகிறோம். தமிழ் இந்துக் களின் பொங்கல், நவராத்திரி போன்ற பண்டிகைகளில் தமிழ் முஸ்லீம்கள் கலந்து கொள்கிறார்கள். தாய் தமிழ் முஸ்லீம்கள் அமைதியானவர்கள், அரசியலில் ஈடுபடாதவர்கள், திறமையான வாணிபர்கள், தாராள மனப்பான்மை உள்ளவர்கள்.''

தமிழ் கிறித்துவர்களைப் பற்றி மங்களராயர் கேபிரியர் பின்வரும் செய்தி அளித்தார்: ''இன்று தாய்லாந்தில் மொத்தம் 10 தமிழ்கிறித்துவர் தான் இருக்கின்றனர்.'' பெரும்பான்மையோர் கத்தோலிக்கப் பிரிவைச் சேர்ந்தவர்; பாண்டிசேரியிலிருந்து வந்தவர்கள். இவர்கள் சீனர், பிரெஞ்சு கத்தோலிக்கக் கோவில் களில் வழிபாடு செய்கின்றனர். மிகவும் பழமையான கத்தோ லிக்கர் திரு. அந்தோணி சுவாமி என்பவர். இங்கு இருக்கும் இலங்கைத் தமிழ் கிறித்துவர்கள் மிகக் குறைவு. பெரும்பான்மை யோர் தமிழை மறந்துவிட்டனர். இவர்களுடைய பிள்ளை களுக்கும் தமிழ் தெரியாது. தமிழ்மொழி கற்றுத்தரவில்லை. தமிழ்ச் சங்கமும் இல்லை.

அருண்செட்டி அளித்த செய்தி பின்வருமாறு: ''பாண்டிச் சேரியிலிருந்து வந்த காலஞ்சென்ற ஸ்வாமி எனும் தமிழ்க்

கத்தோலிக்கர் பிரெஞ்சு நாட்டுத் தூதரகத்திலே பணிபுரிந்தார். இவர் புகழ் வாய்ந்தவர். நான் குழந்தையாக இருக்கும்போதே எல்லாத் தமிழ்ச் சமயத்தினரும் ஒன்றுகூடி அன்புடன் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும் மரபு உண்டு. ஆனால் இன்று முன்புபோல் எல்லோரும் இம்மாதிரி நெருங்கிப் பழகுவதில்லை. காரணம் தொடர்பு இல்லை. பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றோம். மேலும் இன்றைய இளம்பரம்பரையினர் அவ்வளவு நெருங்கிப் பழகுவதில்லை. தமிழ்ப் பண்பாட்டு உணர்வும் மறைந்து கொண்டு வருகின்றது. ஆனாலும் எங்களிடையே நட்புறவு உண்டு, ஒற்றுமை உண்டு.

நடனங்கள் உண்டு. குறிப்பாக உள்ளூர் பெண்கள் நடனங்கள் உண்டு. மேஜிக்ஷோ, சர்க்கஸ் போன்ற பொழுதுபோக்கும் உண்டு. சிங்கப்பூர் வழியாகப் புதியதாக வரும் வீடியோ தமிழ்ப் படங்கள், 100 அல்லது 150 நாட்களுக்குள் தாய்லாந்துக்கு வருகின்றன. எல்லோரும் தமிழ்ப்படம் மட்டும் விரும்பிப் பார்ப்பார்கள். ஒரு தனிப்பட்ட ஹீரோ அல்லது ஹீரோயின் வழிபாடு கிடையாது.

தனித்தமிழர் மன்றம் இல்லை. தமிழ்ச் செய்தித்தாள்கள் கிடையாது. தமிழ் அச்சகம் கிடையாது. குமுதம், மங்கையர் மலர். சுமங்கலி, ஜுனியர் விகடன், ஆனந்த விகடன், தராசு, தினமணி, இந்தியன் மூவி நியூஸ் முதலியவைகள் கிடைக்கின்றன. தமிழ் இதழ்களைச் சிங்கப்பூர் மக்கள் காசு கொடுத்து வாங்கித் தருகின்றார்கள்.

தமிழ் முஸ்லீம்கள் இரண்டு உணவகங்கள் வைத்திருக்கின்றனர். மதராஸ் கேப் எனும் உணவகத்தில் சென்னை உணவகம் எனத் தமிழில் எழுதியிருக்கின்றார்கள். 31/10 சிலம் ரோடு, பாங்காக்கில் இவ்வுணவகம் இருக்கின்றது. இதன் முதலாளி சதார். இவருக்கு வயது 80, சுபாஸ் சந்திரபோஸிடம் வேலைசெய்தவர். 40ஆண்டு உணவக வாணிபம் செய்துவிட்டுத் தற்சமயம் மகன்களிடம் இப்பொறுப்பை விட்டுவிட்டார். தமிழ் எழுதுவார். ''எவ்வளவு நாள் வெளிநாட்டில்இருந்தாலும் தமிழ்ப் பற்று இருக்கின்றது; எளிமை, நேர்மை மனச்சாட்சிக்கு எதிராக எதுவும் செய்யாதே முதலியவற்றைச் சுபாஸ் சந்திரபோஸ் எங்களுக்குக்கற்றுத்தந்தார். சுபாஸ்படை வந்தபோதுதமிழர்கள் குறைவு. சுமார் 100 பேர் இருந்திருப்பார்கள்'' எனக்கூறினார்.

மதராஸ் கேப் உணவகத்தில் சைவ, அசைவ உணவு இரண்டும் கிடைக்கின்றன. இட்லி, தோசை, சப்பாத்தி, ஆலுபூரி,

வடை, மசாலா தோசை, வெங்காய தோசை, பேப்பர் தோசை, ஆம்லட் தோசை, வடை, தயிர்வடை, உப்புமா, ஸ்பிரிங் ஹோப்பர், ஆலுமசாலா, ப்ரைடு வெஜிடபிள், தயிர், லஸ்ஸி, முழுச்சாப்பாடு முதலியவைகள் கிடைக்கின்றன. சாப்பாடு தமிழ்நாட்டுச் சாப்பாடாகும். ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள சாப்பாட்டு வகைகளைப் பற்றிய பலகை உணவகத்தில் தொங்க விடப் பட்டிருக்கின்றது. காலை 8.30 யிலிருந்து இரவு 10 மணி வரை உணவகம் திறந்திருக்கின்றது. அறைகள் வாடகைக்கு உண்டு. 1991 நவம்பரில் அறை மட்டும் மாதம் ரூ. 2500 பாட் (1 பாட்-ரூ. 1.25).

மற்றொரு உணவகம் தமிழ்நாடு ரெஸ்டாரெண்டு. ஒரு முசுலீம் வைத்திருக்கிறார். சியாம் சாலையில் இருக்கின்றது. இவ்வுணவகத்தைச் சுத்தமாக வைத்திருக்கின்றார்கள். 1991 நவம்பரில் இங்குச் சைவ உணவு விலை 30 பாட். காபி-5 பாட், இட்லி-6 பாட், ரொட்டிபரோட்டா-12 பாட், அப்பம் 6 பாட், மசாலா தோசை 15 பாட், பேப்பர் தோசை 8 பாட், முட்டை தோசை 10 பாட், தோசை 6 பாட். காலை 6 மணியிலிருந்து இரவு 9.30 வரை இவ்வுணவகம் செயல்படுகின்றது. இந்த இரண்டு உணவகங்களில் மட்டும்தான் உணவகத்தின் பெயரைத் தமிழிலும் பார்க்கலாம்.

மேலும் பாங்காக் சுகம்விட் சாலையிலுள்ள பாங்காக் பிரிந் தாவன் ஓட்டலில் தென் இந்திய உணவு கிடைக்கின்றது. இராசன் நாயர் என்பவர் இவ்வுணவகத்தின் சொந்தக்காரர். இந்த உணவகத்தில் தென் இந்திய உணவு, மசாலா தோசை, இட்லி, உப்புமா, முதலியவை கிடைக்கின்றன. நியூரோட்டில் பெரிய போஸ்ட் ஆபீஸ் அருகே மிகுதியான இந்திய உணவகங்கள் இருக்கின்றன. இங்கே இருக்கும் தமிழ் முஸ்லீம் உணவகங்களின் உணவுப் பொருட்களின் விலை அதிகம். சூரிவோங் சாலையில் காபி இந்தியா எனும் இந்திய உணவகம் இருக்கின்றது. சாரோன் குருங் சாலையில் உட்லண்ட்ஸ் இன், சோலா ரெஸ்டாரெண்ட் என்ற இரண்டு உணவகங்கள் இருக்கின்றன. எல்லா உணவகங் களிலும் தமிழ்நாட்டு உணவு கிடைக்கும். மேலும் ஆல் அமின் ரெஸ்டாரெண்ட் எனும் உணவகத்தில் சைவஉணவு கிடைக்கும். தவிர பாக்கிஸ்தான் ரெஸ்டாரெண்ட், பாங்கலாதேச் ரெஸ்டா ரெண்ட் இருக்கின்றன.

தமிழரைத் தவிரப் பிற இந்தியரும் தாய்லாந்தில் இருக் கின்றனர். சுமார் 30,000 பிற இந்தியர் இருக்கின்றனர்.

பெரும்பான்மையோர் சீக்கியர், அவர்களுக்கு அடுத்ததாகப் பிற வடஇந்தியர் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் பாங்காக் பவுரத் பகுதியில் வாழ்கின்றனர். இப்பகுதி துணி வணிகத் தலமாக விளங்குகின்றது.

வடஇந்திய பெண்கள் புடவை உடுத்துகின்றனர். ஆனால் தென் இந்திய பெண்கள் புடவை உடுத்துவதில்லை. வட இந்திய பெண்கள் திலகம் இட்டுக் கொள்கின்றனர். இவர்கள் இந்திய பண்பாட்டை ஓரளவு பின்பற்றுகின்றனர். ஹோலி, தீபாவளி பண்டிகைகளைக் கொண்டாடுகின்றனர். தங்கள் நாட்டுப் பெண்களையே பிற இந்தியர் பொதுவாகத் திருமணம் செய்து கொள்கின்றனர்.

இவர்கள் வாழும் பவுரத்தில் வாட்தான் நியூ ரோட்டில் விஷ்ணுகோவில் இருக்கின்றது. வடஇந்தியர் மட்டும்தான் இக் கோவிலுக்குச் செல்கின்றனர். தமிழர் போவதில்லை. அழைப் பிதழ் அளிக்கும்போதுதான் தமிழர்கள் விஷ்ணு கோவிலுக்குச் செல்கின்றார்களாம்.

ஹர்நாம்சந்த் என்பார் பின்வருமாறு கூறினார். ''தாய் லாந்தில் பிறந்தவர்களுக்குக் குடிஉரிமை உண்டு. அவ்வாறு இல்லாவிட்டால் பல இலட்சம் ரூபாய் கொடுத்துதான் குடி உரிமை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் 17 வயது நிரம்பிய வுடன் இரண்டு ஆண்டுகள் எல்லோரும் கட்டாயப் படை பணியில் சேரவேண்டும். நான் இப்பணியை வெற்றிகரமாக முடித்தவன் ஆனாலும் பொதுவாக இந்தியர்களுக்கு அரசுப் பணி கிடைப்பதில்லை.''

பொதுவாகத் தாய்லாந்து நாட்டு மக்கள் வடஇந்தியர், தென் இந்தியர் என வேறுபடுத்துவதில்லை. எல்லோரிடமும் அன்பாகப் பழகுகின்றனர். தாய்லாந்தில் புகழ்வாய்ந்த சுசித் எனும் அறிஞர் ''தமிழ் என்றால் என்ன பொருள்?'' எனக் கேட் டார். உடனே நண்பர் மைக்கேல் ரைட் என்பாரிடம் ஏன் இவர் பொருள் விளக்கம் கேட்கின்றார் எனக் கேட்டேன். அதற்கு அவர் 'தமிழ்' என்றால் தாய்மொழியில் 'காட்டுமிரண்டி' 'வன் முறை' எனப் பொருளாகும் என்கிறார்.

''தாய்லாந்திற்கு 13 ஆம் நூற்றாண்டில் வந்த சிங்களவர்கள் மூலம் இம்மாதிரியான கருத்துப் பரவியது'' எனக் கூறினார். இதைக் கேட்டவுடன் சுசித் என்பாரிடம் ''தமிழ் என்றால் அமுது என்று பெயர், இனிமை எனப் பெயர்'' எனக் கூறினேன்,

படிப்படியாக நாங்கள் தமிழ் என்னும் சொல்லின் பொருளைத் தாய்மொழியில் திருத்த முயல வேண்டும். ஆனால் தாய்மக்கள் பலருக்குத் தமிழ் என்னும் இச்சொல் தெரியாது. படித்தவர்களுக்கு மட்டும், குறிப்பாகப் பௌத்த சமயத்தை நன்கு படித்தவர்களுக்கு இச்சொல் தெரியும். ஆனால் தாய்மக்கள் தமிழர்களைப் பற்றி இதனால் தவறாகக் கருதுவதில்லை. ''தமிழ் மக்களுக்கு இங்கு மரியாதை உண்டு'' என சுசித் விளக்கிக் கூறினார்.

## மாரியம்மன் கோயில்

அண்மைக் காலத்துக்குரிய தமிழ்க் கோயில் பாங்காக்கில் சிலாம் சாலையிலுள்ள மாரியம்மன் கோயிலாகும். வைத்தி படையாட்சி என்பார் இக்கோயிலைக் கட்டினார். 1888 ஆம் ஆண்டு இக்கோவில் விரிவாக்கம் செய்யப்பட்டது. இக்கோவில் முன்கோபுர முகப்பில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ''சியாம் பெங்காக் 1888 யேப்பிரல் மாத செல்வவிநாயக மாரியம்மன் பாலதண்டாயுத பாணி கோவில் மண்டபம்...'' சிங்கப்பூர் மகா மாரியம்மன் கோபுரம் எழுப்பிய தஞ்சைச் சிற்பி சிதம்பரநாதன் என்பவரே இதனையும் கட்டினார்.

முதலில் கரும்புத் தோட்டங்கள் இருந்த இடத்தில் ஒரு கூடார மண்டபத்தைக் (Pavillion) கட்டினர். இதை மாரியம்மன் கூடார மண்டபம் என அழைத்தனர். அக்கூடார மண்டபத்தில் மாரியம்மனைப் பிரதிஷ்டைச் செய்தனர். இங்குதான் எல்லா இந்தியர்களும் 200 ஆண்டுகளுக்குமுன் வந்து தொழுதனர். தமிழர் தொகை மிகுதியானவுடன் அவ்விடத்தில் ஓர் கோவிலைக் கட்டினர்.

தமிழர் இக்கோவிலை மாரியம்மன் கோவில் என அழைத்தாலும் சியாம் சாலையிலுள்ள இக்கோவில் இருக்கும் சாலைக்குச் சென்று ''மாரியம்மன் கோவில்'' எங்கு இருக்கின்றது என விசாரித்தால் தாய்லாந்து மக்களுக்குப் பதில் சொல்லத் தெரியாது. ஏனென்றால் தாய் மக்கள் இக்கோவிலை உமாதேவி கோயில் என அழைக்கின்றனர். உமாதேவியையும் சௌமே தேவி (Chaomae) என அழைக்கின்றனர். சௌமே என்றால் அம்மா எனப் பொருள். வாட் உமாதேவி எனக் கேட்டால்தான் உள்ளூர் மக்களுக்குப் புரியும்.

ஏன் மாரியம்மன் எனக் கூறினால் இவர்களுக்குப் புரியவில்லை என இக்கோவிலின் தலைவராக (President) எட்டாண்டு

பணியாற்றிய அருண்செட்டியிடம் கேட்டேன். அதற்கு அவர் அளித்த பதில் பின்வருமாறு: இக்கோவிலைக் கட்டியபோது அரசு அலுவலகத்தில் பதிவு செய்ய சென்றபொழுது அவ்வலு வலகத்தில் பணிபுரிபவர்களிடம் மாரியம்மன் என்று கூறியபோது அவர்களுக்குப் புரியவில்லை. மாரியம்மன் என்றால் என்ன என்று கேட்டனர்? அதற்குச் சிவனின் மனைவி எனப் பதிலளித் தனர். சிவனின் மனைவி உமாதேவிதானே எனக்கூறி அவர்கள் இக்கோவிலை உமாதேவி பவுன்டேஷன் எனப் பதிவு செய்தனர். இன்றும் இக்கோவிலில் தாய்மொழியில் உமாதேவிக் கோயில் எனத்தான் எழுதியிருக்கின்றது'' கோவில் கோபுரத்தின் மேல் இந்திய தேசியக் கொடியும் தாய்லாந்து தேசியக் கொடியும் இணைத்து பறக்கின்றன.

உமாதேவி கோயிலில் இருக்கும் முதற்கடவுள் மாரியம்மன் ஆகும். (உமாதேவி) ஆனாலும் சிவன், பிரம்மா, முருகன், கணேசர், சைவநாயன்மார் விக்கிரகங்களும் வழிப்பாட்டிற்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஐயனார், சப்தகன்னி, பேச்சாயி, அக்னி வீரன், பெரியாச்சி முதலிய தெய்வங்களின் சிறிய சிலைகள், காத்தவராயனின் பெரிய சிலை முதலியவைகள் வடதிக்கை நோக்கி இருக்கின்றன. காத்தவராயனைக் காத்தலே என அழைக்கின்றனர். பலிபீடம் அருகில் சிவனுக்கு ஒரு கோவில் அமைந்துள்ளது. சிவனுக்கு எதிரே இராஜகோபுரம், அதன் வலது புரம் பிரம்மா கோவில் இருக்கின்றது. தாய் மக்கள் சிவனைப் பிராசிவா என்றும் கணேசரைப் பிராபுக்னேட் (ஷ்) என்றும் அழைக்கின்றனர்.

தொடக்கத்தில் கோவிலில் பண்டாரம் ஒருவர் இருந்தார். மலேசியாவிலுள்ள பினாங்கிலிருந்து வரவழைக்கப்பட்ட மூன்று குருக்கள் தற்சமயம் பணிபுரிகின்றனர். நான்கு ஆண்டுகளாகப் பணிபுரியும் எம்.இராமையா எனும் குருக்கள் பின்வருமாறு கூறி னார். ''நான் பினாங்கிலிருந்துதான் வந்தேன். இங்குச் சாதாரண பூஜை செய்கின்றோம். விவரமான முறைகள் இல்லை. சமஸ் கிருத மந்திரம் பயன்படுத்துகிறோம். தினசரி காலை 11 மணிக்கு தொடங்கி 45 நிமிடம் அஷ்டோத்திரங்கள் கூறுகிறோம். அந்த அந்த சாமிக்கு அந்த அந்த அஷ்டோத்திரம். மீண்டும் மாலை 7 மணிக்குப் பூஜை செய்கிறோம். தினசரி காலை 6 மணிக்கும், மாலை 3 மணிக்கும் அபிஷேகம் செய்கின்றோம். மூன்று வாளி பால், இளநீர், பன்னீர், முதலியவைகளை மக்கள் கொடுக் கின்றார்கள். குங்குமம், விபூதி, தீர்த்தம் முதலியவைகளை வழி பாடு செய்ய வரும் பக்தர்களுக்குக் கொடுப்போம், அம்பாள்

தீர்த்தம் முக்கியம். குறிப்பாக வெள்ளிக்கிழமை அன்று மக்கள் சாமிக்குப் போடும் மாலைகளைக் கணக்கிட்டால் சுமார் 5000 மாலைகளைப் போடுகிறார்கள் எனக் கூறலாம். தமிழ்நாட்டு மரபில் சுவாமிக்கு அலங்காரம் செய்வோம்.''

இங்கு முக்கிய தெய்வம் இராஜகோபுரம் வலது பக்கத்தி லுள்ள காத்தவராயன், மதுரை வீரன். முதலில் இவர்களை வழி பாடு செய்யவேண்டும், பிறகு பிரம்மா வழிபாடு, அதற்குப்பிறகு மூலஸ்தான மாரியம்மன் வழிபாடு செய்யவேண்டும். மக்கள் நம்ம ஊர் போன்றே எல்லாம் செய்கின்றார்கள். ஆனால் அர்ச்சகர் கோத்திரம் கேட்பதில்லை. நம்ம ஊரில் கோத்திரம் கேட்போம். தெய்வங்களுக்குத் தினம் பால், பழம், பட்டாடை காணிக்கை யாக அளிக்கப்படுகின்றன.

குருக்கள் இராமையா பின் வருமாறு கூறினார். ''நம்ம தெய்வத்தை மிகுதியான நம்பிக்கையுடன் இந்த ஊர் மக்கள் வழிபடுகின்றனர். தெய்வ கடாட்சமும் உண்டு. ஆகையால் இம் மக்களிடையே அன்பும் பற்றும் அதிகமாக இருக்கு. நம்ப தெய் வத்து மேலே அதனாலேயே தொண்டு செய்ய ஆர்வம் அதிகமாக இருக்கும். மேலும் சிங்கப்பூர், மலேசியாவிலிருந்து இந்திய டூரிஸ்ட் வருகின்றார்கள். தீவிர பக்தியுடைய தாய்மக்கள் 50 விழுக்காடு, 50 விழுக்காடு சீனப் பக்தர்கள்.''

இவர்கள் வாங்கும் அர்ச்சனை சாமான்கள் பின்வருமாறு: பூ (மல்லிப்பூ, ரோஜாப்பூ, தாமரைப்பூ) 1 டஜன் வாழைப்பழம், இளநீர், எண்ணெய், இரண்டு மெழுகுவர்த்தி, 9 ஊதுவத்தி குச்சிகள், காய்ச்சாத கால் லிட்டர் பால், மேலே குறிப்பிடப் பட்டிருக்கும் அர்ச்சனை சாமான்களைக் கோவிலில் உள்ள கடையிலேயே இராஜேந்திரன் சிரித்தமுகத்துடன் விற்கிறார். மேலும் சாத்துக்குடி, ஆப்பிள், ஆரஞ்சு, பேரிக்காய், கொய்யாக் காய், திராட்ஷை வெளியிலிருந்து வாங்கிவருவார்கள். வெற்றிலை, பாக்கு, சூடம் கிடையாது. ஏன் என்றால் இவர்கள் வெற்றிலை போடுவதில்லை. சூடம் கோவிலில் மட்டும் பயன் படுத்துவர். இவர்கள் தேங்காய் பயன்படுத்துவதில்லை. சில பல காரங்களுக்கு மட்டும் தேங்காயைப் பயன்படுத்துகின்றனர். அதனால்தான் அர்ச்சனைக்கு இளநீர் வைக்கின்றார்கள் என விளக்கிக் கூறினார் இராஜேந்திரன். மேலும் இத்தாய் மக்கள் மாரியம்மனுக்கு அதிகமான அன்பளிப்பு (Donation) அளிப் பார்கள்.

பெரும்பாலும் இவர்கள் ஊதுவத்தி கொளுத்தி கும்பிடு வார்கள் ஊதுவத்திகளைக் கொளுத்தி ஆண்டவனை வேண்டிக் கொள்கின்றனர். மாரியம்மன் கோவிலுக்குள் நுழைவதற்குமுன் மாரியம்மன் கர்ப்பக்கிரகம் எதிரில் பலிபீடம், கொடிமரம் இருக் கின்றது. பொதுவாகப் பலிபீடம், கொடிமரம் அருகே ஊதுவத்தி, மெழுகுவத்தி கொளுத்தி வைக்கிறார்கள். அம்பாளுக்கு எதிரில், இராசகோபுரம் அருகே, வாசல் அருகில் பலிமடம் உள்ளது. வெளியில் இருக்கும் தூக்குகளில் அர்ச்சனை எண்ணெய்யை ஊற்றுகிறார்கள்.

கோவில் நுழைவாயில் அருகே பெரியமணி, சிறியமணி இருக் கின்றது. விசேட சமயம் கோவிலைச் சுற்றி வந்து மணியையும் (திலக்ங்) பெரிய முரசையும் (Drum) மக்கள் அடிப்பர். அன்றாட வழிபாட்டின்போதும் மணி அடிப்பர்.

கோவில் நிர்வாகக் குழுவில் தாய் மக்கள்தான் இருக்கின்ற னர். இளம்பரம்பரையினர் ஆட்சிக்குழுவின் உறுப்பினர்களாகப் பணிபுரிகின்றனர். தமிழரின் வாரிசுகளான இளம்பரம்பரை யினருக்கு ஆங்கிலம்தெரியாது. இவர்கள் மதப்பற்றுள்ளவர்களா கவும் இல்லை. மதத்திற்கு முதன்மை இடம் இவர்கள் அளிக்க வில்லை; வாழ்க்கை அமைப்பின் ஓர் கிளையாகவே கருதுகின்ற னர். சமயம் மனதில் இருக்கின்றது. சமய விதிமுறைப்படி அதைப் பின்பற்றமுடியாது. இம்மாதிரியான சமயவிதிமுறைகளைப் பெற்றோர் கற்றுக் கொடுக்கவில்லை. அவர்களுக்குத் தெரிந்த கடவுள் மாரியம்மன்தான். ஆனாலும் மாரியம்மன் வழிபாட்டு முறைகள் முழுவதும் தெரியாது.

பொதுவாக இவர்கள் எல்லோரும் மாரியம்மனை விரும்பு கின்றனர். இவர்களும் மாரியம்மனை மகாதேவி என அழைக் கின்றனர். மாரியம்மன் மிக உயர்ந்த தெய்வம் என நினைப்ப தோடு அல்லாமல், இக்கடவுளின் மேல் முழு நம்பிக்கையும் வைத்திருக்கின்றார்கள். விழுந்து வணங்கி வழிபடுவது, சந்தனம், குங்குமம், திருநிறு பூசுவது, தொட்டுக் கும்பிடுவது முதலிய முறைகளையும் கோவிலில் நுழைந்தபிறகு பின்பற்றுகின்றனர். தமிழரைவிட தமிழ்—தாய் வழி பரம்பரையினருக்கும், கோவி லுக்கு வந்து வழிபடும் தாய் மக்களுக்கும் மாரியம்மன் மேல் நம்பிக்கை மிகுதியாக இருக்கின்றது. இந்துக்களாக இருந் தாலும் சரி, புத்தர்களாக இருந்தாலும் சரி—எல்லோரும் பக்தி யுடன், பயத்துடன், அன்புடன் மாரியம்மனை வழிபாடு செய் கின்றனர். பொதுவாகக் கோவிலுக்குள் நுழைந்தவுடன்

குறைந்தது சுமார் 15 நிமிடங்கள் தியானம் செய்து, கும்பிட்டு வழிபடுகின்றனர். இவர்கள் இவ்வாறு வழிபட்டாலும், இவர்கள் புத்த சமயப் பண்பாட்டைப் பின்பற்றுபவர். தாய்தந்தையிடம் பக்தியுள்ளவர்கள். தாய்லாந்துப் பண்பாட்டுக் கூறுகளை ஓரளவு பின்பற்றுபவர்கள். புத்த விசாக பூஜை, மஹா பூஜை போன்ற புத்த திருவிழாக்களைக் கொண்டாடுவர். பலர் தினம் மாரியம்மன் கோவிலுக்குப் போவதில்லை. ஆனால் சிறப்பு நாட்களில் மிகுதியாக வந்து மாரியம்மனை வழிபாடு செய்வர்.

நான் தாய்லாந்துக்குச் சென்றிருந்தபொழுது மாரியம்மன் கோவில் கோபுரங்களின் மறு சீரமைப்பு பணி நடந்துகொண்டிருந்தது. கோபுரம் கட்டுவதற்கு 5 மில்லியன் பாட்செலவாகியது. சீனர்களும் தாய்களும் இப்பணத்தைக் கொடுத்தனர். கோவிலுக்குச் சொத்து, நிலம் கிடையாது என ஒருவர் என்னிடம் கூறினார்.

முத்தையா ஸ்தபதி தலைமையில் 20 சிற்பிகள் இச்சீரமைப்புப் பணியை ஓராண்டுக்குள் முடிப்பதில் தீவிர கவனம் செலுத்தினர். முத்தையா ஸ்தபதி மகாபலிபுரம் கல்லூரியில் படித்தவர். அமெரிக்காவில் பத்து இடங்களிலும், மலேசியாவிலும், சிங்கப்பூரிலும், சென்னை பெஸன்ட் நகரிலும், டெல்லியிலும், சதர்பூரிலும் (பாபாமந்தீர்), கல்கத்தாவிலும் கோவில்கட்டிய பெருமை இவருக்கு உண்டு. நியூயார்க் விநாயகர் கோயில், பீட்டர்ஸ்பர்க் மீனாட்சி கோயில், லாஸ் ஏஞ்சல்ஸ் வெங்கடேஸ்வரா கோயில், டெக்ஸாஸ் வெங்கடேஸ்வரா கோயில் முதலிய கோவில்களைக் கட்டியவர் இவர். தற்சமயம் தாய்லாந்து மாரியம்மன் கோயில், அமெரிக்காவிலுள்ள நேஷ்வில்லி வெங்கடேஸ்வரா கோயில் முதலிய கோவில் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றார் எனத் தேவகோட்டையைச் சேர்ந்த சந்திரன் எனும் சிற்பி தெரிவித்தார். தாய்லாந்து கோவில் மறுசீரமைப்பு பொறுப்பு சண்முகம் என்பாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவர் மகாபலிபுர கலைக்கல்லூரில் கட்டிடக்கலை படித்தவர்.

மாரியம்மன் கோவிலில் கோவில் சீரமைப்பு பணிக்கு முன்பு, நான்கு கோபுரங்கள் இருந்தன. இவை எல்லாவற்றையும் உடைத்துப் புதிதாக ஆறு கோபுரங்கள் கட்டப்படுகின்றன. அவை முறையே 1) மாரியம்மன் கோவில் கோபுரம் 2) முருகன் கோவில் கோபுரம் 3) விநாயகர் கோவில் கோபுரம் 4) சிவன் கோவில் கோபுரம் 5) பிரம்மா கோவில் கோபுரம் 6) வாசல் இராஜகோபுரம். கோபுரங்கள் மீண்டும் கட்டப்படும்போதிலும்

கோவில் விக்கிரகங்களில் மாற்றம் இல்லை. சாஸ்திரப்படி கட்டிடக்கலை நிர்மாணப்படி 1991 நவம்பர் திங்களுக்குள் மாரியம்மன் விமானம் புதுப்பிக்கப்பட்டது. ஐந்து அடுக்கு இராஜகோபுரம் மூன்று அடுக்கு இராஜகோபுரம் கட்டப் பட்டுவிட்டன. அம்பாளின் அவதாரச் சிற்பங்கள் குறிப்பாகப் பிராமி, வைஷ்ணவி, துவாரசக்தி இக்கோபுரத்தை அழகு படுத்துகின்றன.

''இக்கோவில் திருப்பணி இரண்டு ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. முத்தையா ஸ்தபதி வந்துவந்து போவார். மேலும் ஒரு ஆண்டு கலர் பூச்சு வேலை போன்ற நிறைவு பணி களுக்குத் தேவை'' எனச் சண்முகம் 1991 நவம்பர் திங்களில் கூறினார்.

பல்லவ, சோழச் சிற்பக்கலை முறைகளை இணைத்து இக் கோபுரங்கள் கட்டப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பல்லவச் சிற்பக்கலை முறையில் மெல்லிய அழகிய உடல் இடுப்பு, திரண்ட புஜங்கள் இருக்கும். சோழச் சிற்ப பாணியாக ஸ்தனம், பசு மாட்டு அமைப்பு கண், வயிறு, புஜங்கள் அளவாக இருக்கும். பல்லவமுறையில் கால், புஜம் முதலிய பாகங்களில் லேசாக நரம்பு தசைகள் தெரியும். சோழர் சிற்பங்களில் அவ்வளவாகத் தெரியாது. பல்லவர் கிரீடம் அரிசி படி மாதிரி இருக்கும். சோழர் கிரீடம் அரிசி படியை விட சிறிது குறுகலாக இருக்கும். இவ்விரண்டு முறையையும் கலந்து மாரியம்மன் கோவில் புதுப் பிக்கபட்டாலும், பெரும்பாலும் பல்லவச் சிற்பமுறையே பின் பற்றப்படுகின்றது எனச் சண்முகம் பொறுமையாக விளக்கிக் கூறினார்.

பெரிய இராஜகோபுரம் கிழக்குப் பக்கத்தில் இருக்கின்றது. கலசமும் சேர்ந்து சுமார் 40 அடி இருக்கின்றது. கிழக்குப் பக்கம் எதிர்நோக்கி 18 அடி உயரத்தில் அம்மன் விமானம் இருக் கின்றது. வலதுபக்கம் விநாயகர் விமானம் இருக்கின்றது. சுமார் 15 அடி இடதுபக்கம் முருகன் விமானம் இருக்கின்றது. சுமார் 15 அடிநுழைவாயில் அருகே சிவனது சிறிய விமானம் இருக்கின்றது. சுமார் 12 அடி நுழைவாயில் அருகே இராஜ கோபுரம் பக்கத்தில் பிரம்மா கோவில் இருக்கின்றது. முன்பு இக்கோவில் தாய் பண்பாட்டுப் பாணியில் அமைக்கப்பட்டிருந் தது. தற்பொழுது தமிழ்ச் சிற்ப பண்பாட்டுப் பாணியில் புதுப் பிக்கப்பட்டிருக்கிறது. ''பிரம்மா வச்சிதான் இக்கோவிலுக்கு வருமானம்'' எனச் சண்முகம் கூறினார். ஏனென்றால் சமீப

ஆண்டுகளில் பிரம்மா வழிபாடு பாங்காக்கில் பிரபலமடைந்திருக்கிறது. ''கேட்பதை அளிப்பவர் பிரம்மா'' எனும் நம்பிக்கை பரவலாக இருக்கின்றது.

பிரம்மா கோவில் அருகே நவக்கிரக மண்டபம் கட்டுவார்கள். கோபுரத்தின் மேலிருந்து கீழ்வரை பஞ்ச சக்திகளாக வைஷ்ணவி, பிராமி, சாம்பவி, சிவசக்தி, இந்திராணி மேலும் கௌமாரி, ருத்ராச்சி, மாரியம்மன், காளியம்மன், சாமுண்டேஸ்வரி, விஷ்ணு, துர்கா, காமாட்சி, லக்ஷ்மிசிற்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. முன்வாயிலில் ஒவ்வொரு அடுக்கிலும் ஒவ்வொரு துவாரத்திலும் துவார சக்தி மேலிருந்து கீழ்வரை வைக்கப்பட்டிருக்கின்றது. ஏறத்தாழ தமிழ்நாட்டுச் சிற்ப ஆகம முறைப்படி 200 சிலைகள் செய்யப்படும் எனச் சண்முகம் கூறினார்.

இக்கோவில் கோபுரம் கட்டும் சிற்பிகளுக்கு மாதம் ரூ. 5000, சாப்பாடு, மருத்துவப்படி, பயணப்படி முதலியவைகள் அளிக்கப்படுகின்றன.

1988 முதல் சுமார் 1000 இலங்கைத் தமிழர்கள் வந்திருக்கின்றார்கள் எனச் சத்தார் கருத்துத் தெரிவித்தார். இவர்களும் கோவிலுக்கு வந்து வழிபடுகின்றனர். கோவிலில் தினம் உணவு இலவசமாக அளிக்கப்படுகின்றது. தாய் மக்கள் இத்தானம் செய்கின்றனர். அன்னதானம் வாரத்திலே ஐந்து நாட்கள் நடக்கின்றது. சுமார் 600 பாட் பணம் செலவாகும். 30 அல்லது 40 பேர் சாப்பிடலாம். தமிழ்ச் சாப்பாடு போடுவோம் எனக் குருக்கள் இராமையா தெரிவித்தார். இலங்கைத் தமிழர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அன்னதானம் செய்கின்றனர். அன்று சுமார் 100 பேருக்கு உணவு பரிமாறப்படுகிறது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6 மணியிலிருந்து 7 மணி வரை பஜனை நடக்கின்றது. பஜனைப் பாடல்கள் பல இந்திய மொழிகளில் இருக்கின்றன. குறிப்பாகத் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிப் பாடல்கள் இருக்கின்றன. இப்பாடல்களையெல்லாம் தாய்மொழியில் மொழிபெயர்ப்புச் செய்து பஜனையில் பங்குகொள்ள வரும் தாய் மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. கமலா என்பவர் இப்பஜனையை நடத்துகின்றார். இவருக்குக் கண் தெரியாது. இன்ஸூரன்ஸ் கம்பெனியில் மானேஜராகப் பணிபுரியும் ஐயர் என்பவருடைய மனைவி கமலா தேவாரம், திருவாசகம், வடமொழி சுலோகங்கள்—வழிபாட்டுப் பாடல்கள் முழுவதும் அமைத்துக் கொடுத்தவர் இவர்.

நான் சென்று பார்த்தச் சனிக்கிழமையின்போது சுமார் 60 அல்லது 70 பேர் பஜனையில் கலந்து கொண்டனர். மாரியம்மன் சன்னதியின் எதிரில் இடைவெளி விட்டு இடது வலது புரமாக உட்கார்ந்து கொண்டு பஜனைப் பாடல்கள் புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு கமலா ஐயர் பாடும் பஜனை வரியைப் பக்தியோடு திரும்ப எல்லோரும் பாடுகின்றனர். வந்திருந்தவர்கள் எல்லோரும் தாய் மக்கள், இவர்கள் ராகத்துடன் பாடுகின்றனர். ஓசை ஒழுக்கத்துடன் கை தட்டுகின்றனர். (Clap rythemically) விநாயகன், உமாதேவி, முருகர் தொடர்பான பாடல்கள் பாடப்படுகின்றன. புத்தநாட்டில் பஜனை நடப்பதால் கடைசிப் பஜனைப் பாட்டுக்கு முந்திய பாட்டு புத்தரைப் பற்றிய பாட்டாகும். கடைசியில் ஓம்சக்தி, ஓம்சக்தி எனும் பஜனை ஒலிகள் பக்தியுடன் எழுப்பப்படுகின்றன. தாய்மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் ஆங்கிலப் பாடல்களும் இசைக்கப்படுகின்றன. புத்தர் கற்பித்த மெய்ம்மை தத்துவக் கூறுகள் இந்த ஆங்கில பாட்டின் பொருளாக அமைந்திருக்கின்றன. மாரியம்மன் தாலாட்டுப் பாடல் பாட்டுகள் இல்லை. ஆகையால் நான் மாரியம்மன் தாலாட்டு பாடல்நூல் ஒன்றைக் கமலா ஐயரிடம் கொடுத்தேன். பிறகு இப்பாடல்களையும் சேர்ப்பதாக அவர் என்னிடம் கூறினார். கமலா ஐயர் வராத சனிக்கிழமைகளிலும் இடைவிடாமல் இப்பஜனையைத் தாய்மக்கள் மாரியம்மன் கோவிலில் நடத்துகின்றார்.

கடந்த ஏழு அல்லது எட்டு ஆண்டுகளாகக் கமலா ஐயர் இப்பஜனை வழிபாட்டை மாரியம்மன் கோவிலில் நடத்துகின்றார். மேலும் இவர் பகவத் கீதை வகுப்பு ஒன்றையும் நடத்துகின்றார். கீதை அறிவு பரிமாற்ற மையம் (Gita Knowledge Sharing Centre) எனும் மையத்தை இவர் நடத்துகின்றார். வடஇந்தியர்களும் இவ்வகுப்புக்கு வருகின்றார்களாம். வாரம் ஒருமுறை வெள்ளிக் கிழமை அன்று இக்கீதை வகுப்பு நடக்கின்றது. பெண்களுக்கு வியாழனும் வகுப்பு நடக்கின்றது. கீதையின் பன்னிரண்டாவது அத்தியாயத்திற்குச் சிறப்பான முக்கியத்துவம் அளிப்பதாகக் கமலா கூறினார். நவம்பர் திசம்பர் மாதங்களில் கீதையின் 18வது அத்தியாயம் வகுப்பு நடத்தப்படுகின்றது. கீதை ஜயந்தியும் கொண்டாடப்படுகிறது. இவர்கள் சாயிபாபா வழி பாடும் செய்வதாகக் கூறினார்கள். நம்பிக்கை உள்ளவர்கள் சாயிபாபா பக்தி இயக்கத்தில் சேர்ந்திருக்கின்றனர்.

திருவிழாக்களின்போது தமிழ்நாட்டு மரபு முறைப்படி ருத்ர கும்பம், கும்ப ஸ்தாபன பூஜை, ஓமம், சங்காபிஷேகம் முதலி

யவை மாரியம்மன் கோவிலில் நடக்கின்றன எனக் குருக்கள் இராமையா எடுத்துரைத்தார். திருவிழாக் காலங்களில் 5 அடி சூலத்தை நாக்கு, வாய், பக்கங்களில் குத்திக்கொண்டு வழிபாடு செய்வார்கள். காவடி தேர் உண்டு. தீ மிதி விழா கிடையாது. இடம் போதாது எனக் குருக்கள் இராமையா கூறினார்.

நவராத்திரிவிழா கோவிலில் சிறப்பாகக் கொண்டாடப்படு கின்றது. நம் ஊரைவிட மிகுதியான கூட்டம் வரும் எனக் கூறி னார்கள். திருவிழாவின்போது கோவில் நிர்வாகத்தினர், மேலும் விவரம் தெரிந்தவர்கள், சுமார் 45 பேர், சைவ உணவு மட்டும் தான் அருந்துவர். மூன்று பேர் 45 நாட்கள் விரதம் இருப்பர். இரு பாலர்களும் விசேட நாட்களில் வெள்ளை உடுப்புதான் அணிவர். தாய் மக்கள் விரும்பிப் போடும் உடுப்பு வெள்ளை உடுப்பாகும். மஞ்சக்கொடி பறக்கும். கடந்த நூறு ஆண்டுகளாக நவராத்திரிவிழா இக்கோவிலில் நடக்கின்றது.

தொடக்கத்தில் மாரியம்மன் கோவிலில் பண்டாரம் இருக்கும் போது நவராத்திரியின் முதல் பூஜையை வடஇந்திய விஷ்ணு கோவில் பண்டிட் செய்து கொண்டிருந்தார். சமீப நான்கு ஆண்டுகளாக மலேசியாவிலிருந்து மாரியம்மன் கோவிலில் பணி புரிய குருக்கள் வந்தவுடன் நவராத்திரியின் முதல் பூஜையை மாரியம்மன் கோவில் குருக்களே செய்கின்றார். நவராத்திரி விழாவின் போது 9 நாள் கொலு பூஜை நடக்கின்றது.

விஜயதசமி அன்று சூரசம்ஹாரம் பண்ணி, சாமி ஊர்வலம் வருகின்றது. இரதத்தில் கடவுள் விக்கிரகங்களை வைத்து ஊர்வலம் வருகின்றனர். இவ்வூர்வலத்தைத் தலைமை தாங்கி நடத்துபவர் கரகம் தூக்கிக்கொண்டு வருபவர் ஆவார். உமா தேவியின் அருள் நிரம்பி வழியும் இவர் கரகம் ஆடுவார். கரகத்தை இவர்கள் கலகம் (Kalagam) எனக் கூறுகின்றனர். பூவால் அலங்கரிக்கப்பட்ட கனமான பானையை இவர் தூக்கிச் செல்கின்றார்.

சீனரும் தாய் மக்களும் இவ்விழாவில் மிகுதியாகக் கலந்து கொள்கின்றனர். குறைந்தது 30,000 பேர் இவ்வூர்வலத்தில் கலந்து கொள்கின்றனர். சிலர் ஒரு இலட்சம் பேர் கலந்து கொள் கின்றனர் எனக் கூறுகின்றனர். ஊர்வலம் வரும்போது தெருப் போக்குவரத்து நிறுத்தப்படுகிறது. பாங்காக் மெட்ரோபாலிடன் அலுவலகம் ஆறு பெரிய லாரிகளை அனுப்பி இத்தெருக்களைச்

சுத்தம் செய்கின்றது. மூன்று தெரு வழியாக, சியோம் தெரு, பன் தெரு வழியாக ஊர்வலம் செல்லும். மாலை 7 மணிக்குக் கிளம்பி மறுநாள் விடியற்காலை 5 மணிக்கு ஊர்வலம் திரும்பி வரும்.

முருகனுக்குக் காவடி, அம்பாளுக்கு வேப்பிலையில் அலங் கரித்த சத்தியகிரகம் எடுத்து ஊர்வலம் வரும் அலகு குத்திய மூன்று பேர் காளி அக்னி சட்டியை எடுத்துக் கொண்டு ஊர்வலம் வருவர். ஊர்வலம் வரும்போது கடவுள் தேர் ஒவ்வொரு வீட்டின் முன்பும் நிற்கும். இவ்வீடுகளில் வசிக்கும் சீனர், தாய்லாந்து மக்கள் ஊர்வலத்தில் வரும் கடவுளுக்கு நேர்த்திக் கடன் செய்வர். இளநீர், பழம், இனிப்பு, வடை படைப்பர்.

வருடப்பிறப்பு, தீபாவளி அன்று கோவிலில் இலக்ஷ்மி நாராயணன் பூஜை நடக்கும். அஷ்டலட்சுமி பூஜையில் சுமார் 2000 தாய், சீன மக்கள் கலந்து கொள்வர். தீபாவளிக்கு என்று மலேசியாவில் 1000 வெள்ளி கொடுத்து ஆர்டர் செய்து முறுக்கு, வடை, அதிரசம், ஓமப்பொடி, பக்கோடா, மிக்சர் முதலியவை களை வரவழைத்து மக்களுக்கு அளிப்பர். பீனாங்கிலிருந்து கொண்டு வரப்படும் இப்பலகாரங்களுக்காகச் சுமார் 10,000 பாட் செலவாகும் எனக் குருக்கள் இராமையா கூறினார்.

திருக்கார்த்திகை தீபம் அன்று கோவிலில் 108 சங்காபிஷேகம் செய்யப்படும். தண்ணீர் விட்டு, திரவியங்கள் போட்டு 27 கும்பம் வைத்து குருக்கள் பூஜை பண்ணுவார்; ஓமங்கள் செய்யப்படும்; பனமட்டை வைத்துக்கட்டிய சொக்கப்பானம் கொளுத்தப்படும். முருகனைத் தூக்கிக்கொண்டு கோவில் உட்பிரகாரத்தில் வலம் வருவர். மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை இவ்விழா கொண்டாடப்படும். இரவு 8 மணிக்குச் சாமி தூக்குவர். அக்னி பூஜை கிடையாது. இடம் குறைவு. மக்கள் கூட்டம் அதிகம். அதனால் அக்னிபூஜை கிடையாது எனக் குருக்கள் இராமையா கூறினார்.

வருடப்பிறப்பு அன்று காலை, மாலையில் கோவிலில் சாமிக்கு அபிஷேகம் செய்யப்படும். புதுப் பஞ்சாங்கம் வாசித்து வழிபாடு நிகழ்த்துவர். யாழ்பாணத்துப் பஞ்சாங்கம் பயன்படுத்தப்படு கிறது. பலகாரம் விநியோகம் பண்ணியவுடன் வடஇந்திய இனிப்பு வகைகளையும் கோவில் விநியோகம் செய்யும்.

மாரியம்மனை வழிபடுவதற்குக் காரணங்கள் யாவை என நான் கேட்ட போது சிற்பி சண்முகம் பின்வரும் நிகழ்ச்சியைக்

குறிப்பிட்டார்: ''சமீபத்தில் மூன்று மாதங்களுக்கு முன் (சுமார் 1991 ஆகஸ்டு) டாக்டர்களால் சிகிச்சை செய்ய முடியாமலிருந்த 17 வயதுப் பெண் வாயிலிருந்து, மாரியம்மன் தீர்த்தம் சாப்பிட்ட வுடன், வாந்தி வந்து இரண்டு இரும்புத் துண்டுகள் வந்து விழுந்தன. இதை நான் பார்த்தேன். மிகவும் சக்தி வாய்ந்த தெய்வம். நம்மைவிட நூறு பங்கு பக்தி தாய் மக்களுக்கு அதிகம். கடவுள் பேர் தெரியவில்லை என்றாலும் பேர் தெரிந்து கொண்டு வழிபாடு செய்து இந்து மதத்தை வளர்க் கின்றார்கள்.''

அருண்செட்டி கீழே அளிக்கப்பட்டிருக்கும் விளக்கங்களை நன்கு சிந்தித்து அளித்தார். அருண்செட்டிக்குச் சரளமாகத் தமிழ் பேசத் தெரியாது:

1) அன்புடன் ஆசி அளிக்கும் புகழ் வாய்ந்த தெய்வம் மாரியம்மன். ஆகையால் வழிபடுகின்றனர்.

2) விரதம் எடுக்கின்றனர். விரதம் எடுத்த 99 விழுக்காடு மக்களுக்குப் பலன் கிடைக்கின்றது. ஆகையால் மீண்டும் கோவிலுக்கு வருகின்றனர்.

3) கனவிலும் மாரியம்மனைப் பார்க்கின்றனர். மாரியம்மன் பல உருவங்களில் கனவில் தோன்றுகின்றாள். பொது வாகப் புடவை உடுத்திய பெண்மணி உருவத்திலேயே வருகின்றாள். கனவில் மாரியம்மனைத் தரிசிக்கும் பலர் மீண்டும் மீண்டும் கோவிலுக்கு வருகின்றனர்.

4) மாரியம்மன் கோவிலுக்கு வந்து வழிபட்டால் நலமுள்ள, வளமுள்ள, வாழ்வில் வெற்றி காண்கிற வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் எனும் நம்பிக்கை, மகிழ்ச்சி யாக வாழமுடியும் எனும் நம்பிக்கையினால் உந்தப்பட்டு மீண்டும் மீண்டும் கோவிலுக்கு வருகின்றனர்.

5) மலடி எனும் பயத்துடன் குழந்தை வேண்டும் என வேண்டிக் கொண்டு வருபவர் பலர் உண்டு. 90 விழுக்காடு தாய்மார்களுக்குக் குழந்தை பெறும் அருள் கிடைக்கின்றது.

6) பாவமன்னிப்பு கேட்டு வருபவர்களும் உண்டு.

7) மிகவும் சக்திவாய்ந்த, புகழ் வாய்ந்த தெய்வம் மாரியம்மன்.

கோவில் புனிதமான இடம். கோவிலுக்குச் செல்லும் பொழுது தூய உணர்வுகளுடன், செல்ல வேண்டும். தப்பெண்ணங்களை நீக்கும் இடம் கோவில்; தெய்வத்தன்மை, தெய்வஆற்றல் நிரம்பிய இடம், பயபக்தியுடன் தலை வணங்கும் இடம் கோயில். நன்மை செய்பவர்களுக்கு மாரியம்மன் மேன்மேலும் முன்னேற்றமும், செல்வச் செழிப்பான வாழ்க்கையையும் அளிப்பாள். தீமைச் செய்பவர்களைத் தண்டிப்பாள் எனும் உணர்வுடன் செல்லும் இடம் மாரியம்மன் கோயிலாகும். மாரியம்மன் நீதிபதியாக நின்று நன்மை தீமை களைத் தராசு போட்டுத் தீர்ப்பை அளிக்கும் நல்ல கடவுள் எனும் உணர்வுடன் செல்லும் இடம் மாரியம்மன் கோயிலாகும்.

இக்கோவிலை உமாதேவி ஆசிரமமாகக் கருதுபவரும் உண்டு. அவளுடைய தெய்வ எழுச்சி, தெய்வ ஆவி உள்ளுறு அனுபவம் பெற்றிருக்கின்றோம் எனப் பலர் கூறுகின்றனர். இவ் வுண்மையைக் கேட்டுப் பலர் கோவிலுக்கு வருகின்றனர். இவர் களில் சிலர் தெய்வ ஆவியுலக இடையீட்டாளர்களாகப் பணிபுரி கின்றனர். அவர்களில் சிலர் மாரியம்மன் ஆசிரமங்கள் வைத்து நடத்துகின்றனர். அவர்களிடம் நம்பிக்கையுள்ளவர்கள் ஆசிரமங்களுக்குச் சென்று சடங்குகள் செய்து மாரியம்மனின் தெய்வ ஆவி உள்ளுருவை வழிபட்டு வரவழைக்கின்றனர். இவை தொடர்பான நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர்.

கோவில் அதிகாரிகளுக்கு இம்மாதிரியான ஆசிரமங்கள் செயல்படுவது பிடிக்கவில்லை. மாரியம்மன் சக்தி தனக்கு இருக் கின்றது என வணிகம் செய்கின்றனர். மாரியம்மனுக்கும் வழி பாடு செய்பவர்களுக்கும் இடையே ஆவியுலக இடையீட்டாளர் தேவை இல்லை. அவர்கள் மக்களைத் தப்புவழியில் அழைத்துச் செல்கின்றனர். ஆனாலும் மிகுதியாகப் படிக்காதவர்களும், எளிதில் ஏமாற்றப்படும் இயல்புள்ளவர்களும் தொடர்ந்து இம் மாதிரியான ஆசிரமங்களுக்குச் செல்கின்றனர் எனும் கருத்தைக் கோவில் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக மாரியம்மனைக் கும்பிட்டால் சுமைதணிவு, துயர்த் தீர்ப்பு கிடைக்கின்றது. ஆகையால் 'துன்பம் விடியுனும்னா மாரியம்மனைக் கும்பிடு. அந்த அம்மனிடம் சக்தி இருக்கு. நல்ல தெய்வம். நம்பிக்கையான தெய்வம். ஆனால் சரணாகதி தேவை' எனும் கருத்து நிலவுகின்றது.

மாரியம்மனை வழிபடும் பக்தர்கள் பொதுவாகப் பின்பற்றும் தத்துவங்கள் ஐந்து என அருண்செட்டி விளக்கினார்;

1) எல்லோரிடமும் அன்பாய் இரு

2) எது செய்தாலும் பய உணர்வுடன் செய்ய வேண்டும்

3) கணவன், மனைவி நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்ள வேண்டும். நேசத்துடன் பழக வேண்டும்.

4) முடிந்தளவு தானம் செய்ய வேண்டும்.

5. மாரியம்மா நல்லவள் எனும் உணர்வுடன் தொழ வேண்டும்.

தமிழர்கள், வட இந்தியரின் விஷ்ணு கோவிலுக்குப் போகா விட்டாலும், வடஇந்தியர் மாரியம்மன் கோவிலுக்கு வழிபட வருகின்றனர். சீக்கியர் கூட மாரியம்மன் கோவிலுக்கு வரு கின்றனர். குறிப்பாக நவராத்திரி விழாவின்போது வருகின்றனர். மாரியம்மன் கோவில் மிகவும் பழமையான கோவிலாக இருப் பதாலும், புகழ் வாய்ந்த கோவிலாக இருப்பதாலும், மேலும் சக்தி வாய்ந்த கோவிலாக இருப்பதாலும் வட இந்தியரும், பிற தென் இந்தியரும், சீனரும், தாய்லாந்தினரும், தமிழருடன் இணைந்து இக்கோவிலில் வழிபட வருகின்றனர்.

## உதவிய நூல்கள்


1. இராசாராம், சு. **வீரசோழிய இலக்கணக் கோட்பாடு**, இராகவேந்திரா, நாகர்கோவில், சூன் 1992.
2. திருநாவுக்கரசு, க.தி. **தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, திசம்பர் 1987.
3. நாகராஜன், எஸ். **அயல்நாடுகளில் தமிழர்**, தமிழ்ப் பல் கலைக்கழகம், தஞ்சாவூர், ஜூலை 1989.
4. மீனாட்சி சுந்தரனார், **தாய்லாந்தில் திருவெம்பாவை, திருப்பாவை**, சர்வோதய இலக்கியப்பண்ணை, மதுரை, 1978.
5. Boissallier, Jean, **The Heritage of Thai Sculpture**, New York, 1975,
6. Briggs, Lawrence, P. **The Ancient Khemer Empire**, The American Philosophical Society, Philadelphia, February 1950.
7. Champakalakshmi R. **Vaisnava Iconography in the Tamil Country**, Orient Longman, 1981.
8. Chatterji, B. R, **Indian cultural Influence in Cambodia**, Calcutta University, 1964.
9. Chhabra, B.ch, **Expansion of Indo Aryan Culture During Pallava Rule**, Munshi Ram Manoharlal, Delhi-6.
10. Crawford, John **Journal of an Embassy to the courts of Siam and Cochin China**.
11. Daweewarn, Dawee, **Brahmanism in Southeast Asia**, Sterling Publishers Private Ltd, New Delhi, 1982.
12. Desai, Santosh, N. **Hinduism in Thai Life**, Popular Prakashan, Bombay, 1980.
13. Dhani Nivat, Prince, H. "Maiyarab the magician" **The Standard** No. 53, Bangkok 1942. See also **The Khon, 3rd** edition, Bangkok, The Fine Arts Department, BE 2505, A.D 1962, (PP5-6)

14. Diskul, subadradis, M.C. **Art in Thailand, A Brief History**, Amarin press. Bangkok, I. publication 1969.

15. Krairiksh, Piriya **Art in Peninsular Thailand Prior to the Fourteenth century** A.D., The Fine Arts Dept, Bangkok, Thailand 1980

16 Le May, Regionald, **Buddhist Art in Siam A concise History**, Charles E.Tuttle Company, Tokyo, 1963.

17. Mahalingam, T. V. **Readings in South Indian History**, B. R. Publishing Corporation, Delhi, 1977.

18. Majumdar, R. C. **India and Southeast Asia**, ed, by K. S. Ramachandran and S. P. Gupta, B.R. Publishing Corporation, Delhi, 1979.

19. Manickavasagom, M.E. **Dravidian Influence in Thai Culture**, Tamil University, Thanjavur, April, 1986.

20. O' Connor, Stanley, J.O, **Hindu Gods of Peninsular Siam**, Attibus Asia Publishers, 6612 Ascona, Switzerland, 1971.

21. O'Connor, Stanley, J.O., "Some Early Siva Lingas in Nakhon Si Thammarat, Peninsular Thailand "**Journal of the Siam Society**, Vol. 71, Parts 1 and 2, January-July 1983.

22. Pelliot, Paul, "Encore A propos Des Voyages De Tcheng Houo", **Toung Pao**, XX XII, 1936.

23. Plan and Report of the Survey and Excavation of Ancient Monuments in North East on Thailand, 1959.

24. Sharan, Mahesh Kumar, **Studies in Sanskrit Inscription of Ancient Cambodia**, Abhinav Publications, New Delhi, 1974.

25. Singaravelu, S., "Some Aspects of South Indian Cultural contacts with Thailand-Historical Background", **Proceedings of the first International conference-Seminar of Tamil Studies**, Kuala Lumpur, Malaysia, April, 1966.

26. Singaravelu, S. "A Note on the possible Relationship of King Ramakhamhaeng's—Sukhodaya script of Thailand. To the Grantha script of South India", **Journal of the Siam Society**, Bangkok 2512, Vol LVII Part I, January 1969.

27. Singaravelu, S. "The Rama Story in the Thai cultural Tradition". **Journal of the Siam Society**, Vol 70, Parts 1+2. January-July, 1982.

28. Singaravelu, S. "The Thai coronation ceremony and the Tamil Devotional Hymns," **Tamil Civilization**, Tamil University, Thanjavur Vol 3, No 1, March 1985.

29. Singaravelu, S. "The Episode of Maiyarab in the Thai Ramakien and its Possible Relationship to Tamil Folk-lorre", Journal of the Siam society, vol 74, 1986.

30. Sivaramamurti, C. **Indian Epigraphy and South Indian Scripts**, Second edition, 1965.

31. Subramaniyan, T.N. **The Pallavas of Kanchi in South East Asia**, Swadesimitran, Madras, 1967.

32. Varadachari, V **Agamas and South Indian Vaisnavism**, Prof. M. Rangacharya Memorial Trust, Triplicane, Madras-5, 1982.

33. Veerprajak, Kongkaew, "Inscriptions From Southern Thailand" **SPA FA Digest**, Vol VII No 1, 1986.

34. Wales, Quartich, **Siamese State ceremonies, Their History and Function**, London 1931.

35. Wales, Quartich, **The Making of Greater India**, Bernard Quaritch, London, 1951.

36. Wales, Quaritch, **Dvaravati-The Earliest Kingdom of Siam**, Bernard Quaritch, London, 1969.

37. Wright, Michael, "Some Hindu Gods in Bangkok", Thai Studies Centre, Thammasat University, Bangkok, Thailand.

38. Wright, Michael, "South Indian Architectural Elements in Siam, a second wave", Thai Studies centre, Thammasat University, Bangkok, Thailand.

39. Wyatt, David K. **Thailand, A short History**, Yale University Press, New Haven and London, 1984.

40. Wyatt, David K. **Hohn Crawford Journal of an Embassy to the Courts of Siam and Cochin China**, Oxford University Press. KualaLumpur 1967.

*

## சிறப்புச் சொல்லகராதி

(பக்க எண்)


அண்ணா மேரி சோசப் கேப்ரியல் மங்களராயர் 78
அமர கோசம் 12
அயல் நாடுகளில் தமிழர் 3
அயுத்தியா அருங்காட்சியகம்44
அருண் செட்டி 77, 81, 85, 99, 100
அலஸ்டர் லேம்ப் 48
அனிருத்தசம் ஹிதா 59
அஷ்டலட்சுமி பூஜை 98
ஆழ்வார்கள் 59, 60
இரண்டாம் நரசிம்மவர்மன் 11, 12, 41
இராசாராம் 19, 20
இராசேந்திரன். 15, 16, 17, 18, 19, 66
இராமாசீயான் 31
இராமையா எம், 90, 91
இலட்சுமி நாராயணன் பூசை 98
உபேந்திர சம்ஹிதா 59
உலகத் தமிழர். 2
ஊஞ்சல் திருவிழா 64, 66, 67
கடாரப் படையெடுப்பு 15, 16, 17, 19
கமலா ஐயர். 81, 96
கம்பராமாயணம் 3, 20, 26 27
கரந்தைச் செப்பேடு 18
கருடாண்டிக உருப் படிவம் 60
கர்னல் ஜெரினி 48
கல்போடிய கல்வெட்டு 45, 53
காசி மரைக் காயர் 81
காஞ்சி புர வஜ்ரபோதி 13
காத்தவராயன் 91
காரைக்கால் அம்மையார் 13, 41, 42, 43
கார்த்திகை விளக்கு 67
காவோசி விசாய் கல்வெட்டு 8
கிருஷ்ண சாஸ்திரி. எச். 11
குவாரிட்ச் வேல்ஸ், 33, 36, 45, 48.
குவான்லுக் பட் கல்வெட்டுகள் 8
சண்முகம் 93, 94, 95
சதார் 77, 78
சந்திரன் 93
சமயப் பிரதீபத்தம்ப விழா 68
சிங்கார வேலு அ. 3.
சிங்காரவேலு எஸ். 20, 28
சிதம்பரநாதன் 89
சிம்பர் 50
சிவ வழிபாடு 39, 40, 43,44 45, 46, 61
சுகோ தய் 48, 62
சுந்தரர் 36,
சுபத் ராடிஷ் திஷ்ருல் 25, 48
சைவ சித்தாந்தம் 20
தகு வாப கல்வெட்டு 11, 44 50
தனபால் சுந்தரராஜ் 76
தனிநாயக அடிகளார். எஸ். 2
தாவிதா வி வார்ன் 47, 48
தானி நிவாட் 28
திருக்கார்த்திகை தீபம் 98
திருநாவுக்கரசு, த. 2, 43, 65
திருப்பாவை 2, 32, 33, 34, 35, 36, 37, 51, 58, 60, 63, 64, 67, 71, 74, 75
திருமங்கை ஆழ்வார் 13
திரு வல்லம் கல்வெட்டு 10
திருவாசகம் 20, 34,
திருவாலங்காடு செப்பேடு 15
திருவெம்பாவை 2, 32, 33, 34, 36, 37, 38, 45, 51 58, 63, 64, 74, 75
தீபாவளி 67, 81, 82, 88, 98

தெர வாத புத்த சமயம் 61
தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர்ப் பண்பாடு 2,
தேவாரம் 20, 33, 34,35,38
தைந்நீராடல் 67
நவராத்திரிவிழா 97
நாகோன் சிதம்மராட் 17,18 48
நாகோன் சிதம்பராட் கல்வெட்டுகள் 8
நாங்நோபோமாஸ் 32, 36
நாட்புற இராமாயணக் கதை 25
நாத முனி 33, 59
நாராயண சம்ஹிதா 59
நாலாயிர திவ்விய பிரபந்தம் 33, 34
நீலகண்ட சாஸ்திரி.கே. ஏ. 48
பல்லவ கிரந்த எழுத்து முறை 8, 9, 10, 24, 40, 44
பனம் ருங் சிவன் 40, 43
பானம் பாயங்கல்வெட்டு 40, 46
பாஞ்ச ராத்திரத் சம்ஹிதைகள் 59
பாய்ஸெலியர் 48, 49, 51
பால் பெலியட் 71
பாவை நோன்பு 67
பியரி கு யூ பாண்ட் 48, 49
பிரசாத் கோக் போ கல்வெட்டு 54
பிரம்மா வழிபாடு 91
பிரியா கிரை ரிக்ஷ் 48, 49, 51, 52
பிரிரூப் ஸ்டெல்லி கல்வெட்டு 54, 56
பிலியோசா 34
புத்தமித்திரர் 20
பெர்னார்டு பிலிப் கிரைஸ்லியர் 17, 48
மங்களராயர் கேபிரி யேல் 85
மசூம்தார் 18
மண்டிக் கரே கல்வெட்டு 19
முதுரை வீரன் 91
மயில் ராவணன் கதை 27,28 30, 31
மழைத் திருவிழா 67
மாணிக்க வாசகம் எம், யீ. 2 73
மார்கழி நோன்பு 32, 67
மார்டின் லெர்னர் 48
மாலரெட் 39, 48
மீனாட்சி சுந்தனார் தெ.பொ 1, 34, 39, 47.
முதலாம் நரசிம்ம ராமன் 9
முதலாம் மகேந்திரவர்மன் 9
முத்தையா ஸ்தபதி 93, 94
மைக்ரேல்ரைட்டு 17, 18, 43 48, 88
ரங்க பதாகை 12, 13
ராவ்சன் பி. எஸ் 48
லீ கோர் பூ சந்து 17
லீ மே 48, 49
லூனர்தி லோ ஜான் குயர் 48
வங்காள இராமாயணம் 31
வங்காளம் காஷ்மீர் இராமாயணம். 27
வயலூர் கல்வெட்டு 11
வரதாச்சாரி 33
வருடப் பிறப்பு 98
வால்டர் போர்க் 47, 48
வால்மீகி இராமாயணம் 26, 27
விசயநந்தி விக்ரவர்மன் 10
வினிடா ருசி 13
வீர சோழியம் 20
வீரப்பன். இர. ந. 2
வீர ராசேந்திர சோழன் 19 20
வூல்ப் காங் பெல்டன் 48
வேதாந்த தேசிகர், 59
ழான் பிலியோசா 41
ஜமக்லுதீன் 83
ஜான் கிராபோக்கு 72
ஜான் மார் 34
ஸ்டான்லி ஓ கான்னர் 39, 44 48, 53
ஸ்டான்லி ஓ கான்னர் ஜுனியர் 50
ஹர் நாம் சந்த் 88
ஹில்ஷ் 10
ஸ்ரீ விசயா பேரரசு 16, 18, 19, 25, 26

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

## நிறுவன அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

| | |
|---|---|
| இஸ்லாம் வளர்த்த தமிழ் | 15 00 |
| தமிழரின் தாயகம் | 10 00 |
| உ.வே.சா.சங்க இலக்கியப் பதிப்புகள் | 10 00 |
| இனிக்கும் இராசநாயகம் | 50 00 |
| பாவாணரும் தனித்தமிழும் | 12 00 |
| தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள் | 10 00 |
| உ.வே.சா. காப்பியப் பதிப்புகள் | 10 00 |
| விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் | 20 00 |
| அகலமும் ஆழமும் | 12 00 |
| செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | 15 00 |
| உ.வே.சா. இலக்கணப் பதிப்புகள் | 12 00 |
| மகாமதிப்பாவலர் | 11 00 |
| உலக முதன்மொழி தமிழ் | 12 00 |
| மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | 15 00 |
| தமிழ் தந்த வ.உ.சி. | 15 00 |
| உ.வே.சா ஒரு தமிழ் வாழ்வு | 15 00 |
| வண்ணக்களஞ்சியப் புலவரின் குத்புநாயகம் | 15 00 |
| மு.வ.புதினங்களில் தமிழ்—தமிழினம் | 20 00 |
| பாவாணர் ஆய்வு நெறி | 23 00 |
| கிறித்தவமும் தமிழகமும் | 15 00 |
| நாமக்கல் கவிஞர் கவிதைகள்—தேசியம், காந்தீயம் | 16 00 |
| தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும் | 25 00 |
| இதழாளர் ஆதித்தனார் | 26 00 |
| காந்தீயப் பெருந்தலைவர் காமராசர் | 20 00 |
| மலையாளக் கவிதை | 15 00 |
| நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் | 18 00 |
| நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை | 14 00 |
| தொல்காப்பியப் பதிப்புகள் | 27 00 |
| தமிழும் பிராகிருதமும் | 12 00 |
| இலக்கியச் சிந்தனையாளர் டி என். சேஷாசலம் | 12 00 |
| அறிவியல் தமிழ்—இன்றைய நிலை | 12 00 |
| எட்டாந் திருமுறை | 22 00 |
| தொல்காப்பியச் சிந்தனைகள் | 18 00 |
| தமிழும் குறியியலும் | 17 00 |
| அழகியல் | 10 00 |
| கம்பன் எழுத்தச்சன் இராமாயணங்கள் | 25 00 |